குடும்பத்துடன் களிக்க...

கல்கி

KALKI 4.9.2005 ரூ.7.00
96 பக்கங்கள்



சர்ச்சை நாயகன்!

விஜய் வாழ்த்து!





புதிய பாதை!


திறப்பு
விழாக்கால
சலுகைகள்
தங்க நகரில்
செய்கூலி இல்லை • சேதாரம் இல்லை
சேமிப்பு திட்டத்தில் இணைந்து
தங்க நாணயத்தை இலவசமாக பெறுங்கள்.
• ரூ.5000 க்கு வாங்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு கூப்பனை பெற்றிடுங்கள்
• citibank & ICICI Bank கிரெடிட் கார்டுகளுக்கு இலவச பரிசுகள்
தங்கத்தின் விலை + Rs 75/- gm* onwards
தினசரி
TVS Scooty
சிறப்பு பரிசு
SANTRO
தங்க நகராக
மாறுகிறது
அண்ணா நகர்
செப்டம்பர் 5 முதல்
NSC
நாதெள்ள
நாதெள்ள சம்பத்து செட்டி
1940 முதல்
ஒப்பற்ற நகைகள் உங்களைப் போல
தி. நகர் • புரசை • அண்ணா நகர்
அண்ணா நகர் C36 இரண்டாவது அவென்யூ போன் 26267600 12 வது மெயின் ரோடு அருகில்

உள்ளே...



வட்டமே

'**க**லைஞர் ரெடி' கட்டுரையும் புகைப்படங்களும் வித்தியாசமாக இருந்தன.

- அ. சம்பத், ஸ்ரீரங்கம்

'**கு**டும்பத்துடன் களிக்க' என்று குறிப்பிட்டுள்ளது உண்மைதான். ஏ டு இசட் கல்கி அசத்தல்!

- ஆர். ரெங்கநாதன், சென்னை - 17

அமிதாப்பின் நிழல், ரவி என்பதை முதலில் வெளியிட்டது கல்கிதான்.

- இரா.சு. பிரகாசம், திருச்சி

கல்கியில் வரும் நகைச்சுவைத் துணுக்குகள் உண்மையாகவே சிரிப்பூட்டுகின்றன. கீப் இட் அப்.

- பிச்சை சுவாமிநாதன், தாம்பரம் சானடோரியம்

வாரம் ஒரு வாசக குடும்பத்தை அறிமுகப்படுத்தும் தங்களின் பணி தொடர்க!

- கோவர்த்தனன், வேளச்சேரி.

'**பெ**யரில்லா பந்தங்கள்' பரிசுக்கதை சிறப்பான படைப்பு. மனத்தில் தங்கிவிட்டது.

- எஸ். சீனிவாசன், மதுரை.

'**கி**ழக்குக் கடற்கரைச் சாலை க்ரைம்' மேட்டர் செம ஹாட் மச்சி!

- எஸ். கண்ணன், நெய்வேலி

இந்த வாரத் தலையங்க வரிகள் சத்தியமானவை. உணருமா அரசியல் கட்சிகள்?

- பூ. சினிவாசன், கல்பூண்டி

சுத்தம் பற்றி சுண்ணாம்பு மூலம் எடுத்துரைத்த கல்கி கலக்கிவிட்டார். அவருக்கு நிகர் அவர்தான்!

- செ. சத்தியசீலன், கிழவனேரி

டாப் கியரில் பயணிக்கிறது 'வெற்றி உங்கள் சாய்ஸ்.' தொடரட்டும் வேகம்!

- இராபர்ட் கென்னடி, திண்டுக்கல்.

ஆபாசப் படமெடுப்பதை விட்டுவிட்டு இனியாவது எஸ்.ஜே. சூர்யா திருந்த வேண்டும்.

- டி. சந்திரன், ஈரோடு

'**தா**ஸ்' பட விமர்சனம் சோக்கா இருந்துச்சு வாத்யாரே!

- த. சத்தியநாராயணன், அயன்புரம்



சோக்கா இருந்துச்சு

வாரம் ஒரு வாசகர்

வரதட்சணைக் கொடுமை பற்றிய அலசல், இன்றைய தலைமுறையினருக்கு பவர்ஃபுல் ட்ரிப்ஸ்!

- சாந்தி கல்யாண்குமார், ஈரோடு



அடாணா ராக 'மும்மூர்த்தலு' கீர்த்தனை பற்றி பாம்பே ஜெயஸ்ரீ கூறியிருந்ததைப் படித்ததும், உடனே கேட்க வேண்டுமென்கிற ஆவல் மிகுந்தது.

- க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

வாரா வாரம் தராசார் பதிலில் சூடு கூடுகிறது. சூப்பரப்பு!

- கே.கே. பாலசுப்ரமணியன், குனியமுத்தூர்

'வலி' ஒருபக்க சிறுகதையைப் படித்து என் மனம் வலித்தது. இருபத்தைந்து வருடங்கள் வாழ்ந்த வீட்டை விற்ற பின்பும் மனம் அந்த வீட்டில்தான் வசிக்கும் என்பது நிஜம்!

- ஆர். ராஜலட்சுமி, கரூர்

கல்கி மருத்துவ மலர் என்று சொல்வதைக் காட்டிலும், 'கல்கி மருத்துவமனை' என்று சொல்லக்கூடிய அளவுக்கு, மருத்துவம் சம்பந்தப்பட்ட அத்தனை விவரங்களையும் உள்ளடக்கி இருந்தது கல்கி மருத்துவ மலர். ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய வாடா மலர்!

- எம். செல்லையா, சாத்தூர்

வாத்யாரே!

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522, 22250623,
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

'நீங்களும் ரஜினியும் இணைந்து எப்போ படம் பண்ணுவீங்க?' - இயக்குனர் ஷங்கரின் எல்லாப் பேட்டிகளிலும் கட்டாயம் இடம்பெறும் கேள்வி இது. "ஷங்கர்னா ரசிகர்கள்கிட்டே ஒரு எதிர்பார்ப்பு! ரஜினின்னா அதுக்குத் தனி எதிர்பார்ப்பு. இந்த இரண்டையும் ஒரே படத்துல சாத்தியமாக்குறது ரொம்பக் கஷ்டம். இருந்தாலும் நாங்க அப்பப்போ பேசிக்குவோம். எப்போ படம் பண்றதுங்கற தயக்கம் இருந்துக்கிட்டே இருக்கும். அதுக்குள்னு ஒரு நேரம் வரும், பார்க்கலாம்" - இது ஷங்கர் ரெடிமேட் பதில். இப்போது நிஜமாகவே இந்த ஜோடி இணைந்து விட்டது. முடிச்சுப் போட்டவர்கள் ஏவி.எம். குறிப்பாக ஏவி.எம். சரவணனின் புதல்வர் குகன். தமிழ் மக்களின் மனதில் கல்வெட்டு மாதிரி பதிந்துவிட்ட தலைப்பு! சிவாஜி!

"எங்க ஏவி.எம்முக்கு இது வைர விழா ஆண்டு. இந்த நேரத்துல நாம தயாரிக்கப் போற படம் ஒரு மைல்கல்லா இருக்கணும்னு யோசிக்க ஆரம்பிச்சேன். எனக்கு ஷங்கரை ரொம்பப் பிடிக்கும். அதே மாதிரி நான் சின்ன வயசுலேர்ந்து ரஜினி ரசிகன். இந்த இரண்டு பேரையும் இணைச்சா என்னன்னு ஒரு எண்ணம். அப்பாகிட்டே சொன்னேன். 'உன் மேலே நம்பிக்கையிருக்கு, பேசுப்பா'ன்னு அனுமதி கொடுத்தார். முதல்ல ஷங்கர்கிட்டேதான் நேரில் பேசினேன். 'ரொம்ப சந்தோஷம்! ஆனால் திருப்பதி பிரசாத்துங்கற தெலுங்குப் படத் தயாரிப்பாளருக்கு அடுத்த படம் பண்ணுவதா அட்வான்ஸ் வாங்கிட்டேன். நாம படம் பண்ணும்போது இன்னொருத்தர் மனக்கசப்புடன் ஆரம்பிக்கக் கூடாதுன்னு ஷங்கர் சொன்னார்.

யார் இந்த



* அப்பாவுடன் குகன்...

'கவலையேபடாதீங்க. திருப்பதி பிரசாத் எனக்கும் அப்பாவுக்கும் நல்ல நண்பர். எங்க ஜெமினி படத்தின் திருப்பதி விநியோக உரிமையை அவர்தான் வாங்கி வெளியிட்டார்.

சிவாஜி?

நாங்கள் தயாரித்த 'ப்ரியமான தோழி'யின் தெலுங்கு உரிமை பெற்று, அங்கே 'வசந்தம்' என்ற பெயரில் தயாரித்தார். அவரைப் பார்த்துப் பேசுகிறேன். அவருக்கு 'சிவாஜி' படத்தின் தெலுங்கு 'டப்' உரிமையைக் கொடுத்து விடலாம்.

நீங்கள் இன்று 'எஸ்'ஸும் சொல்ல வேண்டாம். 'நோ'வும் சொல்ல வேண்டாம். ஒரு வார அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அடுத்து திருப்பதிக்குப் போய் தயாரிப்பாளர் பிரசாத்தை சந்தித்துப் பேசினேன். அவருக்கு இரட்டை மகிழ்ச்சி. கையோடு என்னுடன் சென்னைக்குக் கிளம்பி விட்டார்'' என்று அப்பா சரவணன் முன்னால் அடக்கமாகக் கைகட்டி அமர்ந்தபடி பேசுகிறார் குகன்.



திருப்பதி பிரசாத்துடன் ஷங்கரைப் போய்ப் பார்த்த குகன், அவரது சம்மதத்தை வாங்கிக்கொண்டு அடுத்து ரஜினியைச் சந்தித்திருக்கிறார். " 'அப்பாவிடம் முழுச் சம்மதம் வாங்கி விட்டீர்களா?' என்று கேட்ட ரஜினி, 'ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி திருப்பதி போனேன். அதுவரைக்கும் மைண்ட் ரொம்ப ப்ளாங்கா இருந்தது. அடுத்து என்ன படம் பண்ணப் போறோம், எப்போ பண்ணப் போறோம்னே தெரியல. இப்போ திடீர்னு ஃபிக்ஸ் ஆயிடுச்சி. இதுதான் தெய்வ சங்கல்பம்' என்று நெகிழ்ந்து போனார்'' என்று குகன் பேசி முடிக்க, அடுத்து சரவணன் ஆரம்பித்தார்...



* ஷங்கர்

"இத்தனை பெரிய டீமை இணைச்சது முழுக்க முழுக்க குகன்தான். அட்வான்ஸ் கொடுக்கும்போதுதான் ஷங்கரையும், ரஜினியையும் நான் நேரில் சந்தித்தேன். அப்போது ரஜினி, 'நானே ரொம்ப ஃபாஸ்ட். என்னை விட குகன் ரொம்ப ஃபாஸ்ட்' என்று பாராட்டினார். உடனே எனக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு 'முரட்டுக் காளை' படப்பிடிப்பில் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்துவிட்டது.

பொள்ளாச்சியில் 'முரட்டுக் காளை' படப்பிடிப்பை முடித்துவிட்டு கோவையிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டோம். ரஜினி வருவதை அறிந்து ரயில் நிலையத்தில் கட்டுக்கடங்காத கூட்டம். ரஜினியோ ஒரு சாமான்ய மனிதனாகத் தலையில் துண்டைக் கட்டிக் கொண்டு படுஸ்பீடாக நடந்து போய் கம்பார்ட்மெண்டில் ஏறி அமர்ந்து விட்டார். ரசிகர்களோ ரஜினி வருவார் என்று காத்திருந்தார்கள். அவரது அந்த வேகம் இப்போதும் குறையவில்லை" என்றவர்,

''இப்போதைக்கு அஜீத்தை வைத்து நாங்கள் எடுக்கவிருக்கும் 'திருப்பதி' படத்துக்கு செப்டம்பர் பதினைந்தாம் தேதி பாடல் பதிவு நடக்கிறது. அந்தப் படத்தை 2006 ஏப்ரல் பதினாறாம் தேதி வெளியிடுகிறோம். வெளியீட்டுத் தேதியை முன்னரே அறிவித்து படத்தை ஆரம்பிப்பது தான் ஏவி.எம்.மின் பாரம்பர்யம். ஆனால் சிவாஜி படத்தின் முழுப் பொறுப்பையும் ரஜினி - ஷங்கரிடம் ஒப்படைத்து விட்டோம். ஷங்கர் முதலில் கதையை இறுதி செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார். அவருக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து விட்டோம். அதே போல இருவருக்கும் தலா ஆயிரத்து ஒரு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்திருக்கிறோம். ஆனால் சில பத்திரிகைகள் நூறு கோடிக்கு பிசினஸ் என்று தவறான செய்திகளை எழுதியிருக்கிறார்கள்'' என்கிறார்.



ரஜினியும் ஷங்கரும் 'இந்தியனு'க்கு முன்பே இணையவிருந்த நிலையில், அப்போதே பேசித் தேர்வு செய்யப்பட்ட டைட்டில்தான் 'சிவாஜி'. ஆனால் ஷங்கர் தேர்வு செய்த கதையைப் போன்ற சாயலோடு தெலுங்கு, ஹிந்தியில் தலா இரண்டு படங்கள் வந்துவிட, அப்போதைய முயற்சியைக் கைவிட்டு விட்டார்களாம். இந்த முறை சிட்னி ஷெல்டனின் நாவல் (கடந்த பிறவியின் ரகசியத்தை அறிய முயற்சிக்கும் ஹீரோவுக்கு ஏற்படும் பிரச்சனைகள்) ஒன்றுக்கு அற்புதமாக தமது மெசேஜ் ஸ்டைல் பூச்சைக் கொடுக்கப் போகிறார் ஷங்கர் என்கிறது அவரது நட்பு வட்டாரம். இதில் ரஜினி போடும் பல கெட்-அப்புகளில் ஒன்று பேருந்து நடத்துனர் என்று அடித்துச் சொல்கிறார் கதை விவாதத்துக்கு அழைக்கப்பட்டிருக்கும் ஒரு வி.ஐ.பி கதாசிரியர்.

- ஸ்ரீ

SRI LAXMI MUTHU MAALIGAI

SPECIAL SALE

Upto 35% Discount! Limited Offer Hurry!!



Buy Rs.999/- and above
Get 1 No. ½ gm Gold Forming Chain
FREE

பல ரகங்களில் முத்து, பவளம் அமெரிக்கன் டைமண்ட் நவரத்தின மற்றும் ஜெயப்பூர் மாலைகள் ஸ்படிக மாலைகள்

Polki, Kundan, 1 gm & 2 gm Gold Forming Jewellery

All Credit Cards Purchasers will Get Extra Surprise Gift

LMM LAXMI MUTHU MAALIGAI

Shop No.8, 9, Ground Floor,
Kasi Arcade,
No.116, Thiyagaraya Road, T.Nagar,
Chennai - 17.
Ph : 28150856 / 28155650

Also at : Sri Sakthi Plaza,
Shop No.1 Basement No.70,
Pondy Bazzar, Next to Maya's Plaza
T.Nagar, Chennai - 17
Ph : 28153383 / 28153393

இதே போன்ற பெயர் உள்ள வேறு கடைகளுக்கு சென்று ஏமாற வேண்டாம். எங்கள் ஆதரவு உங்களுக்கு எப்போதும் உண்டு.

Wanted Sales Commission Basis Agents (Women)

"நடிகைகள் கலைச்சேவை



* பூஜா

எப்போதுமே சர்ச்சைகளின் நாயகனாக இருக்கிறார் தங்கர் பச்சான். லேட்டஸ்ட்டாக அவர் தயாரித்து இயக்கும் 'சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி' ஒலிநாடா வெளியீட்டு விழா மேடையில், தம் படத்தின் கதாநாயகியான நவ்யா நாயர் மீது சராமாரியாக குற்றச்சாட்டுகளை வீசியிருக்கிறார்.

"படத்தின் இறுதிக்கட்டத்தில் கதாநாயகி நவ்யா நாயர் நடிக்க வரமாட்டேன் என்று உட்கார்ந்து விட்டார். அவரது ஹேர் ட்ரஸ்ஸருக்கு 600 ரூபாய் தரவில்லை. முதலில் அதைக் கொடுங்கள் என்கிறார். ஒரு நடிகைக்கு தலை சீவி விடும் ஒரு பெண், படப்பிடிப்பையே நடத்தவிடாமல் செய்கிறார். இன்று தமிழ் சினிமாவில் ஒரு தயாரிப்பாளருக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?" என்று குமுறியிருக்கிறார்.

'நடிகைகளுக்குப் பணம் மட்டும் தான் குறியா? தயாரிப்பாளரின் கஷ்ட நஷ்டங்களை அறியாதவர்களா அவர்கள்?'

பாரதிராஜாவின் அறிமுகமான ப்ரியாமணி பொரிந்து தள்ளி விட்டார்.

"நமது உரிமைகளை நாம் தட்டிக் கேட்காவிட்டால் இங்கு நியாயம் கிடைக்காது. வரவேண்டிய சம்பள பாக்கியை நாம் கேட்காவிட்டால், தாமாகத் தருகிற மனோபாவம் இங்கு எந்தத் தயாரிப்பாளருக்கும் கிடையாது. நான் நடித்த மூன்று படங்களில், சம்பளத்தை முழுதாகச் சரியான நேரத்தில் வாங்குவதில் பிரச்னை ஏற்பட்டது. முழுச் சம்பளமும் கைக்கு வரவில்லை. நவ்யா நாயரைப் பொறுத்தவரை அவர் மலையாளத்தில் நம்பர் ஒன் நடிகை. யாருக்கும் பயப்படத் தேவையில்லை.

"நான் நடித்த மூன்று படங்களில் சம்பளம், சரியான நேரத்தில் வரவில்லை!"



* ப்ரியாமணி

இந்தப் பிரச்னையை தமிழ் சினிமாவில் இவர் மட்டும்தான் கிளப்பியிருப்பார் என்று சொல்ல முடியாது. பெரிய நடிகைகளும் பணம் தராவிட்டால் படப்பிடிப்புக்கு வராமல் இருந்த சம்பவங்களும் நடந்திருக்கும். நவ்யா நாயர் தமிழில் புது முக நடிகை என்பதால்,



• 'சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி' படக்காட்சி...

செய்ய வரவில்லை!”

பிரச்னை வெளியே வந்திருக்கிறது. இங்கு யாரும் கலைச்சேவை செய்ய வரவில்லையே! படம் எடுப்பதே பணம் சம்பாதிக்கத்தானே! நடிகைகள் தங்கள் சம்பளத்தைத் தட்டிக் கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?” என்றார்.



• நமீதா

'அடுத்த சிம்ரன்' என்று வர்ணிக்கப்படும் நமீதா சில விஷயங்களை மறுக்கிறார். “நான் நடித்த ஒரு சூப்பர்ஹிட் படத்தின் முழுச் சம்பளமும் இன்னமும் கைக்கு வரவில்லை. நான் நிச்சயம் பணத்துக்காக மட்டும் நடிக்க வரவில்லைதான். அதற்காக எனக்கான உரிமையை விட்டுத் தர முடியாது. ஷூட்டிங்கின் கடைசி நாளின்போது, என் முழுச் சம்பளத்தையும் ஒப்படைத்துவிட வேண்டும் என்றுதான் அக்ரிமெண்டில் கையெழுத்துப் போடுவேன். அதேசமயம் நட்டநடுவில் சம்பளம் தரவில்லை என்பதற்காக, படப்பிடிப்பை நிறுத்துவது அநியாயம். நடிகைக்கும், படத் தயாரிப்பாளர், இயக்குனருக்கும் நல்ல அண்டர்ஸ்டாண்டிங் இருப்பது அவசியம். தமிழில் நான் நடித்த மூன்று படங்களின் போதும், உடல்நலம் சரி



• மனோரமா

யில்லாமல் மருத்துவமனையில் அட்மிட் ஆக வேண்டியிருந்தது. அப்பொழுது நட்பின் அடிப்படையில் காலதாமதங்கள் பெரிய விஷயமாகவில்லை. சில சமயங்களில் தயாரிப்பாளர்கள் தரும் முன்பு, உதவியாளர்களுக்கு நானே சம்பளம் தந்துள்ளேன். ஆனால் ஒன்று, இங்கு யாரும் கலைச்சேவை செய்ய வரவில்லை" என்றார்.

பெங்களூர் பெண்ணான நடிகை பூஜாவோ, "முதலில் தங்கர்பச்சான் ஷூட்டிங்கில் என்ன நடந்ததென்று தெரியாதபோது, யாரையும் என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது" என்றவர், தொடர்ந்து, "எனக்குத் தெரிந்து சினிமாவில் நடிப்பவர்கள் யாருமே பணத்துக்காக மட்டுமே நடிக்க வருவதில்லை. நான் நடிக்க வந்தது ஒரு விபத்து. இன்று என் குடும்பத்தைப் பாதுகாக்க நான் சம்பாதிக்கிறேன். அதேசமயம் சினிமா மீது 'ஃபேஷன்' இருப்பதால், தொடர்ந்து ஈடுபாடு காட்டுகிறேன். உலகில் எந்த வேலை செய்தாலும் பணத்தை எதிர்பார்த்துத்தானே செய்கிறோம்? இதை உரிமையோடு கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?" என்றார்.

மூத்த நடிகையான மனோரமா இந்தப் பிரச்னை பற்றிக் கூறும்போது, "இன்னைக்குத் தமிழ் சினிமாவுல யாருப்பா தமிழ் நடிகை? எல்லாம் வெளியூரிலிருந்து வர்ற வங்கதான். கலைச்சேவை செய்யறதா இவங்க வேலை? நீங்களாகப் போய்த் தானே கூப்பிடறீங்க! எங்க காலத்துல தயாரிப்பாளரைத்தான் தெய்வமா மதிப்போம். படக் கம்பெனியோட மேக்கப்-மேன், ஹேர் ட்ரஸ்ஸரைத்தான் நாங்களும் பயன்படுத்துவோம். நவ்யா நாயர் பக்கம் ஆயிரம் நியாயங்கள் இருந்தாலும், ஒரு தயாரிப்பாளரை நிர்க்கதியில விட்டது ரொம்பத் தப்புதான். அதுக்காக தங்கர்பச்சான் தம்பி இதை மேடை போட்டுச் சொல்றதும் நியாயமில்லையே" என்றார்.

இந்தச் சம்பவத்தின் மையப் புள்ளியான நவ்யா நாயர் தரப்பு என்ன சொல்கிறது? "பணத்துக்காக ஏற்பட்ட பிரச்னைகளுக்கும், தாமதத்திற்கும் நவ்யா காரணமில்லை. கடைசி ஷெட்யூலின் போது பணத்தைக் கேட்டால் தவறா? ஹேர் ட்ரெஸ்ஸர் தமது பேட்டா கிடைக்கவில்லை என்பதற்காக, அவர் சார்ந்துள்ள 'ஃபெப்ஸி' (FEFSI) மூலமாகப் படப்பிடிப்பை நிறுத்துகிறார். இதில் நவ்யா மீது குற்றம் சொல்வதில் என்ன நியாயம் இருக்க முடியும்?" என்கின்றனர்.

- ச.ந. கண்ணன்


படம்: ஸ்ரீஹரி



மெஜஸ்டிக் டூர்


பஞ்ச துவாரகா யாத்திரா

Somnath



17.9.2005

Dwaraka



GUJARAT TOURISM

(A Govt. of Gujarat Undertaking)

Tourism Complex, Wallajah Road, Chennai - 600 002.

Tel No. 25366613 Res : 24794159 E-mail : gujarattourism@vsnl.net

சென்னையிலிருந்து புறப்படும் நாட்கள் : 17.9.05, 14.10.05

மெஜஸ்டிக் டூர் : 6 நாட்கள் - அகமதாபாத்தில் இருந்து புறப்படும்.

பார்க்கும் இடங்கள் : காந்தி நகர், அகமதாபாத், துவாரகா, கோண்டல், கீர்வனம், சோம்நாத், மாதவ்பூர்

கட்டணம் 1 : ரூ.7,500/- (ஏ.சி. பஸ், ஏ.சி. தங்கும் வசதி மற்றும் உணவு)

புறப்படும் நாள் : பிரதிவாரம் ஞாயிறு காலை 8.30 மணிக்கு அகமதாபாத்திலிருந்து புறப்படுதல்

கட்டணம் 2 : ரூ.3,800/- (Non A/c பஸ், Non A/c தங்கும் வசதி மற்றும் உணவு)

புறப்படும் நாள் : பிரதிவாரம் திங்கட்கிழமை

14 நாட்கள் கொண்ட புனித யாத்திரையில் பார்க்கும் இடங்கள் : - தாகோர், துவாரகா, பெய்ட் துவாரகா, கங்கரோலி, நாத் துவாரகா (அனைத்து துவாரகை), சோம்நாத் ஜோதிர்லிங்கம், உதய்ப்பூர், புஷ்கர், மவுண்ட் அபு, அம்பாஜி மற்றும் அகமதாபாத்.

கட்டணம் : நபர் ஒருவருக்கு ரூ.9,200/- (சென்னை - பரோடா, அகமதாபாத் - சென்னை நவஜீவன் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதியுடன், சொகுசு பேருந்து, டீலக்ஸ் டபுள் ரூம் (இரண்டு நபருக்கு), தென்னிந்திய சைவ உணவு, கைடு சர்வீஸ், நுழைவு கட்டணம் ஆகியவை இதில் அடங்கும்.

இதர விவரங்களுக்கு Deputy Manager (Marketing) -ஐ மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

Amar Tours, Salem : Ph.2416647 or Cell : 9842713222 ★ Sree Sudha Travels, Bangalore : Ph.26529289, 94481 19290 ★ Siva Gowri Travels, Tirupur : 5325800, 9443380150 ★ Travel Times, Chennai : Ph. 28461579, 31150567, 28461213

Opening Shortly at MADURAI

J.C. முதியோர் இல்லம்



(A Unit of Janakiammal Trust) Regd.

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (I.T. Act 80G excemption) உண்டு.

இயற்கை சூழ்நிலை, படுக்கை வசதிகள், சுவையான சைவ உணவு, இலவச மருத்துவம், தூய்மையான பராமரிப்பு, குறைந்த கட்டணம், அன்பான கவனிப்பு, மனம் குளிரும் சேவை.

ஊனமுற்றவர்களுக்கும், படுத்தபடுக்கையில் உள்ளவர்களுக்கும் சேவை செய்ய எங்கள் இல்லம் காத்திருக்கிறது!

ENJOY YOUR SECOND CHILDHOOD DAYS AT :

Plot No.30 & 31, D.No.4, Murugan Kovil First Street, (Near Jain Temple) Vivekananda Nagar, Kolathur, Chennai - 99. Phone : 5517667, 26208400 Mobile : 9282173089

Donations accepted for Home under Public Charitable Trust

● தற்போதைய மத்திய அமைச்சரவையில், தமிழகத்தைச் சேர்ந்த இஸ்லாமியர் ஒருவருக்குக்கூட இதுவரை வாய்ப்புத் தரப்படாததால், அடுத்த அமைச்சரவை விரிவாக்கத்தின்போது ஜே.எம்.ஆருனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம் என்ற பேச்சு, சத்தியமூர்த்தி பவனில் கிளம்பியிருக்கிறது.

● சுதந்திர தினத்தின்போது 'அம்மா'வே



* அதிர்ஷ்டம்!



* நோட்டம்!



* மகுடம்!

தொடர்ந்து நான்காண்டுகள் கொடியேற்றாத நிலையில், சென்னை மாநகராட்சி துணைமேயர் கராத்தே தியாகராஜன், நான்காண்டுகள் தொடர்ந்து கொடியேற்றி விட்டதை, பெருமை பொங்கப் பேசி வருகிறார்கள் அவரது ஆதரவாளர்கள். ஆனால், இதை கவனமாக நோட்டமிட்டு வருகிறது தோட்டம்.

● அமைச்சர் பதவி ஆசையில் அவ்வப்போது சூடு கிளப்பி வரும் எல். கணேசனுக்கு, கட்சிக்குள் பலமாக ஆதரவுக் குரல் கிளம்பியிருப்பது வைகோவை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாம். இதனால் மாநாடு, பேரணி என்று தொண்டர்களை வேறு பக்கம் திசை திருப்ப முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.



* உத்தரவு!

● அம்மாவுக்கு மேடைப் பிரசங்கங்களைத் தயாரித்துத் தரும் இளந்தேவனைப் போல, காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசனுக்குத் தயாரித்துத் தருவது தமிழருவி மணியன்தானாம்.

● சுயநிதிக் கல்லூரிகள் விவகாரத்தில் பா.ம.க


கண்காணிக்கப்படும் பா.ம.க!

பாலிடிக்ஸ் பஜார்

நடந்துகொள்ளும் முறையை உன்னிப்பாகக் கண்காணித்து, உடனடியாகத் தகவல் கொடுக்கச் சொல்லி மாவட்ட நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாம் தி.மு.க தலைமை. காரணம், இந்தப் பிரச்னையில் அ.தி.மு.கவுடன் பா.ம.க காட்டும் ஒற்றுமை, கூட்டணியையே அசைத்துவிடும் என்று தி.மு.கவினர் நம்புவதுதான் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்.

● திராவிடக் கட்சி பாணியில் தேர்தலை எதிர்கொண்டால் மட்டுமே மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பதால், விரைவில் திருநாவுக்கரசருக்கு மகுடம் சூட்டப்படும் என்கிறார்கள் கமலாலயத்தினர்.

- முராரி



வில்லனாக்கப்பட்ட குரானா!

"குரானா மன்னிப்புக் கேட்டால் அவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வோம்" என்று பா.ஜ.க தலைவர்கள் கோடி காட்டியுள்ளனர். "உமாபாரதியைக் கட்சியிலிருந்து நீக்கிவிட்டு, அவர் தமது செயல்களுக்கு மன்னிப்புக் கேட்ட பிறகு மீண்டும் சேர்த்துக் கொள்ளவில்லையா...? அதேபோல் குரானாவையும் சேர்த்துக் கொள்வோம்" என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உமாபாரதி, ஆத்திரப்பட்டு கட்சி மேலிடத்தை அநியாயமாக அவமதித்ததற்காக தண்டிக்கப்பட்டார். அந்த தண்டனையை ரத்து செய்ய பா.ஜ.க தயாராயிருந்தது. அவரது ஆத்திரம் எவ்வளவு அர்த்தமற்றதாக இருந்ததோ, அவ்வளவு அர்த்தமற்றதாக அமைந்தது அவர் கோரிய மன்னிப்பும். அதைத் தொடர்ந்து பா.ஜ.க அவரை மீண்டும் கட்சியில் ஏற்க எடுத்த நடவடிக்கையும் அத்தகையதே!


குஜராத் முதல்வர் மோடியைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற குரானாவின் கோரிக்கையில் பழுது காண முடியாது. "குஜராத் கலவரங்கள் நிகழ்ந்தபோது மோடி, ரோம் பற்றி எரிகையில் வயலின் வாசித்துக் கொண்டிருந்த நீரோ அரசனைப் போல் அலட்சியம் காட்டினார்" என உச்சநீதிமன்றமே கண்டனம் தெரிவித்துள்ளது. இன்னும் ஒருபடி மேலே போய், நடந்த கலவரங்களைக் கண்டும் காணாதிருந்ததோடல்லாமல், அக் கலவரங்கள் நிகழத் தூண்டுதலாகவும் இருந்தார் என்பது, மனித உரிமை அமைப்புகளால் கண்டறியப்பட்டுள்ளது. குஜராத் கலவரங்கள் குறித்து நானாவதி கமிஷன் அறிக்கை வெளிவரும் முன்னரே, மோடி நீக்கப்பட



கல்கி



2005 செப்டெம்பர் 4
பார்த்திப ஆவணி 19
மலர் : 64
இதழ் : 5



வேண்டும் என்று கேட்டுள்ளார் குரானா. பிரதமர் மன்மோகன்சிங், சீக்கியர்களின் உணர்வுகளுக்குத் தலைவணங்கி, ஜகதீஷ் டைட்லரின் ராஜினாமாவைக் கேட்டுப் பெற்றதைச் சுட்டிக் காட்டுகிறார். 'டைட்லருக்கு எதிரான நடவடிக்கையை வற்புறுத்திக் கேட்ட பா.ஜ.க தலைமை, மோடியை நீக்கவும் தயங்கக் கூடாது' என தர்க்க ரீதியாகவும், தார்மிக அடிப்படையிலும் வலுவான வாதங்களை முன் வைத்திருக்கிறார்.


குரானாவின் கோரிக்கைக்கு உள்நோக்கமோ, சுயநல நோக்கமோ உள்ளது என்று வைத்துக் கொண்டாலும், அக் கோரிக்கைக்கு உரிய கவனம் தந்து, மூத்த தலைவரும், முன்னாள் முதல்வருமான குரானாவை அழைத்துப் பேசி, விவாதிப்பதே பா.ஜ.க தலைமைக்கு அழகு.

ஆனால், விவாதத்துக்கே இடமின்றி குரானா பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்! பா.ஜ.கவில் கருத்துச் சுதந்திரமும், உட்கட்சி ஜனநாயகமும் நலிந்து வருவதையே இது உணர்த்துகிறது. அக் கட்சியின் உள்கட்டமைப்பு மெல்லச் சிதைந்து வருவதைக் காண முடிகிறது.

மோடியால் குஜராத்தில் விளைந்த இன்னல்கள் உலகையே உலுக்கின. சர்வதேச மனித உரிமைக் கழகம் உள்பட, பல மனித உரிமை இயக்கங்கள் குஜராத் கலவரங்களின் பின்னணியை விசாரணை செய்தன. யாவுமே மோடியின் ஆட்சியைக் கண்டனம் செய்தன. அதற்காக மோடி பதவி விலகினாரா? அல்லது பா.ஜ.க தலைமை அவரைப் பதவி விலகும்படி வற்புறுத்தியதா? இரண்டுமே நடக்கவில்லை.

பாகிஸ்தானுக்குச் சென்ற அத்வானி, ஜின்னாவைப் புகழ்ந்து பேசிவிட்டுப் பெரும் சர்ச்சையில் சிக்கினார்! அதற்காக அவர் பரிவார் அமைப்புகளிடம் மன்னிப்பா கேட்டுவிட்டார்!? தமது கூற்றை நியாயப்படுத்தவே அவர் முயன்றார்; இன்னமும் முயன்று கொண்டிருக்கிறார்.

ஆனால், மோடியைப் போலவோ, உமாபாரதியைப் போலவோ தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளாமல், முறைப்படி தலைமைக்குக் கடிதம் எழுதி ஒரு நியாயமான கோரிக்கையை முன் வைத்த குரானாவுக்கு மட்டும் தண்டனை! அத்வானியைப் போல், பேசிய வார்த்தைக்குக் கஷ்டப்பட்டும், சுற்றி வளைத்தும் நியாயம் கற்பிக்க நினைக்காமல், தர்க்க ரீதியாக



எடுத்துரைத்த குரானா இன்று வில்லனாக்கப்பட்டுள்ளார்!

இத்தனைக்கும் குஜராத் பா.ஜ.கவில் ஏற்கெனவே உட்பூசல் நிலவுகிறது. மோடி நீக்கப்பட வேண்டும் என்று கேசுபாய் படேல் பிரிவினர் ஏற்கெனவே கேட்டு வருகின்றனர். முதல் எதிர்ப்புக் குரல் குரானாவுடையது அன்று.

குரானா நீக்கப்பட்ட கையோடு குஜராத் சென்ற அத்வானி, அங்கு மோடியையும், படேலையும் ஒரே இடத்தில் அழைத்து, அவர்களுக்குள் 'வேறுபாடுகளே இல்லை' என்பது போன்ற மாயத் தோற்றத்தை உண்டு பண்ண முயன்றிருக்கிறார்! கட்சித் தலைவர் போய் கோஷ்டித் தலைவர்களோடு சேர்ந்து போட்டோ எடுத்துக் கொள்வதால் மட்டும் கட்சிப் பூசல்கள் ஒழிந்துவிட மாட்டா. உட்கட்சி ஜனநாயகமும் கருத்துச் சுதந்திரமும் ஊக்குவிக்கப்பட வேண்டும்; நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, பல்வேறு தரப்பினரின் கருத்துகள் கேட்டறியப்பட வேண்டும். ஒரு மாநில முதல்வர் கட்சித் தலைமையில் நியமனம் செய்யப் பெறாமல், கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எதிர்ப்புக் குரலுக்கும், மாற்றுக் கருத்துக்கும் உரிய கவனம் தரப்பட வேண்டும். அப்போதுதான் கட்சியில் கட்டுக்கோப்பும், ஆட்சியில் சிறந்த செயல்பாடும் இருக்கும்.

இது விஷயத்தில் ஓரளவு கவனமும், அக்கறையும் காட்டிவந்த கட்சிதான் பா.ஜ.க. ஆனால், சமீப காலங்களில் அதன் கட்டுக்கோப்பு கலைந்துவிட்டதால், அதுவும் இன்னொரு காங்கிரஸ் போல் ஆகிவருகிறது.

காங்கிரஸில் உட்கட்சிப் பூசல்கள் மிகுந்துள்ளன. கட்டமைப்புச் சிதறிவிட்டது என்கிற நிலையில்தான் மக்கள் பா.ஜ.க பக்கம் திரும்பி, அக்கட்சியை ஆதரிக்க ஆரம்பித்தார்கள். மத அடிப்படைவாதம் என்கிற 'மைனஸ்' இருந்தாலும், வலுவான கட்டமைப்பு, சீரிய தலைமை என்ற 'பிளஸ்'கள் இருந்தன. ஆனால், இன்று பா.ஜ.கவும் காங்கிரஸின் பாதைக்கு மாறிவிட்டது!

ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் என்பவை வோட்டுச் சாவடியில் மட்டுமல்ல; கட்சி மேடைகளில் மட்டுமல்ல; கட்சிக்குள்ளேயும் இருக்க வேண்டும் என்பது உணரப்படும்போதுதான், நாட்டில் மெய்யான ஜனநாயகம் மலரும். ○

பிட்டா பிடிங்க!

பிரஜன் முழுமூச்சாக சினிமாவில் இறங்க விருக்கிறார். அதனாலேயே 'இது ஒரு காதல் கதை'க்கு டாட்டா காண்பித்து விட்டார். ஆனால் சீரியல் நாயகி ஸ்ருதிக்கு அந்த ஆசை இல்லையாம்.

சன் மியூசிக் மஹாலட்சுமி, பத்திரிகையாளர்களைக் கண்டால் காத தூரம் ஓடுகிறார்.

'**போ**ஸ்' வெங்கட் டீ.வியிலிருந்து முழுவதுமாக விலகி சினிமாவில் தனி ஹீரோவாக விரைவில் நடிக்கவுள்ளார். கதாநாயகியாக ஸ்னேகா நடிக்கலாம் எனத் தெரிகிறது.

தீபாவெங்கட் எந்தப் பேட்டியென்றாலும் தனது அப்பாவை கலந்தாலோசிக்காமல் பேசுவதில்லை. அப்பா 'ம்ஹூம்' என்றால், இவரும் 'ம்ஹூம்' தான்!

பல வருடங்களாக ஜெயா டீ.வியின் 'கவுண்ட் டவுன்' நிகழ்ச்சியை, சேனலின் செல்லப் பெண்ணாக உஷாதான் தொகுத்து வழங்கி வருகிறார். தம் மன எண்ணங்களை கவுண்ட்டவுனாகவே நமக்குத் தொகுத்து வழங்கினார்.

5. தமிழ் சினிமா

நான் டீ.வி பைத்தியம் கிடையாது. ஆனா சினிமான்னா எனக்கு உயிர். தமிழ்ப் புத்தாண்டின் போது செமஸ்டர் தேர்வுகள் இருந்தும், வரிசையா நைட்ஷோ போய் ரஜினி, கமல், விஜய் படங்களைப் பார்த்தேன்னா பார்த்துக்கோங்க.

4. காம்பியரிங் தமிழ்

மாடலிங் பண்றவங்களை காம்பியரிங்

"மறக்க முடியா

பண்ண விடறதால வந்த வினைதான் 'தொகுப்பாளினிகள் தங்கிலீஷ்ல பேசறாங்க'ங்கிற குற்றச்சாட்டு. முக அழகைப் பார்க்கிறது மாதிரி, உச்சரிப்பு அழகையும் பார்க்கணும் இல்லையா! எனக்குக் கூட தமிழ் தகராறுதான். ஆனா, நான் நல்லா தமிழ் பேசலை?

3. புதிய பாதை

நான் இப்போ பி.ஈ. கடைசி வருஷம் படிக்கிறேன். ஒரு அமெரிக்க கம்பெனி இப்பவே என்னை வேலைக்கு எடுத்துக்கிட்டாங்க. வருங்



• காதல் கதை!

சில யோசனைகள்...

● 'நீங்கள் கேட்ட பாடல்' நிகழ்ச்சியில் இடம்பெறும் நேயர்களிடம், தொகுப்பாளர் விஜயசாரதி, 'உங்களுக்குப் பிடிச்ச நடிகர், நடிகை, படம்?' என்று அரதப்பழசான கேள்விகளையே கேட்காமல், பிடித்த புத்தகம், தலைவர், நாடு என அவ்வப்போது டாபிக் மாற்றலாமே...

● 'சித்தி' போன்ற சீரியல்களையே மறு ஒளிபரப்புச் செய்யாமல், சொந்தமாக நல்ல சீரியல் தயாரித்து ஒளிபரப்பலாமே



• ஹீரோ!

காலத்துல எம்.பி.ஏ. முடிச்சு ஏதாவது சாதிப்பேன். டீவியே கதின்னு எல்லார் மாதிரியும் இருக்காம, புதிய பாதைல நடைபோடுவேன்.

2. என் கல்லூரி

தினமும் காலேஜுக்கு கும்மிடிப் பூண்டி போயிட்டு வர்றேன். எங்க காலேஜ்ல ஆணும் பெண்ணும் பேசிக்கக் கூடாது. எங்களைத் தீவிரமா கண்காணிச்சுட்டே இருப்பாங்க. ஆந்திராவிலிருந்தெல்லாம் தைரியமா பெண்களைப் படிக்க அனுப்பறாங்க.

நான்!"

1. பாய்ஸ் பாதிப்பு

அந்த நாளை மறக்கவே முடியாது. ப்ளஸ் டு தேர்வுக்கு நான் படிச்சிட்டிருந்தபோது இயக்குனர் ஷங்கர் அலுவலகத்திலிருந்து சில பேர் வந்து 'பாய்ஸ்' படத்துக்காக என்னை நடிக்கக் கேட்டாங்க. எனக்குத்தான் நடிப்பு மேலே ஆசையே கிடையாதே! உடனே மறுத்துட்டேன். ஆனாலும் என்னை ஹேண்டிகேமால 'சும்மாதான் மேடம்'னு சொல்லி ஸ்கிரீன் டெஸ்ட் எடுக்க, அன்னைக்குப் படிக்கவே முடியலை. விளைவு? கெமிஸ்ட்ரில கம்மியா மார்க் வாங்கி, நான் ஆசைப்பட்ட டாக்டர் படிப்புக்குப் போக முடியாமப் போச்சு.

சேனல்

தொகுப்பு:
நீலாவள்ளி

அட்டை, படம்:
ஸ்ரீஹரி



பொதிகை...

● குஷ்புவின் ஜாக்கெட்டுக்குத் தரும் முக்கியத்துவத்தை விளையாட்டுக்குத் தேர்ந்தெடுக்கும் ஆட்களிடத்திலும் காட்டலாம், 'ஜாக்பாட்' நிகழ்ச்சியில். அரங்கிற்கு வந்து சாதாரணக் கேள்விகளுக்குக் கூட சிலர் பதில் தெரியாமல் விழிக்கும்போது கடுப்பாக இருக்கிறது.



மாமனார் வீடு

"நீ என்னதான் சொல்லு... மாமனார் வீடு வசதியா அமைஞ்சா, அதன் சுகமே தனிதான். இப்ப என்னையே எடுத்துக்க! பொண்டாட்டி புள்ளைக்குன்னு ஒத்த பைசா செலவழிக்க வேண்டியதில்ல. செருப்புலருந்து துணிமணி வரைக்கும் அவரே எடுத்துக் குடுத்துடறார். ஐயா பாடு ஜாலிதான்...'' ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான் வசந்த். தொடர்ந்து பேசினான் குமார்.

"பெரிய புரட்சி, அது இதுன்னு பேசி ஏழைப் பெண்ணாத்தான் கல்யாணம் செஞ்சிப்பேன்னு அடம் புடிக்காதே... நான் அனுபவப் பட்டவன். அனுபவிச்சுக்கிட்டு இருக்கறவன். பொழைக்கற வழியப் பாரு... நாமளே சுமாரான வசதி... நம்மளவிட சுமாரான எடத்துல பொண்ணு எடுத்துட்டு, எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கறது, யோசிச்சுக்கோ..."

ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றான் வசந்த்.

"சரி வந்ததுதான் வந்தே, வீட்டுக்குப் போயிட்டுப் போலாம் வா. அங்க வந்து என்னோட வசதி வாய்ப்பப் பாத்தாத்தான் உனக்குப் புரியும்... நான் எதுக்கு சொல்றேன்னு!"

வீடு அழகாய், அம்சமாய் இருந்தது. பெருமையோடு வீட்டை நெருங்கிய குமார், காலிங்பெல்லை அழுத்தினான். கதவைத் திறந்த அவன் மனைவியின் பின்னால் அழுது கொண்டிருந்த மகனை வாரியணைத்தவன்... "அச்சச்சோ... குட்டி எதுக்கு அழுவுது...?" என்றான் கண்ணீரைத் துடைத்தபடி.

''அம்மா அடிச்சுட்டாங்கப்பா'' என்றது குழந்தை குற்றம் சாட்டும் குரலில்.

"குட்டிய எதுக்கு லலிதா அடிச்சே...?

''புதுச் சட்டையை இப்பத்தான் போட்டு விட்டேன். சொல்லச் சொல்ல கேக்காம, பின்னாடி தோட்டத்துக்குப் போய் ஏணி மேல ஏறி கிழிச்சுக்கிட்டு வர்றான். அடிக்காம என்ன பண்ணறது...?" என்ற மனைவியிடம்,

"சட்டைதானே, போனாப் போகுது... இன்னொண்ணு வாங்கிக்கிட்டாப் போச்சு... அதுக்காக பையனைப் போட்டு இப்படியா அடிக்கறது...? எப்படி அழறான் பாரு..." என்றான்.

"சொல்ல மாட்டீங்க பின்ன! நீங்களா வாங்கித் தரப்போறீங்க! வாங்கித்தரப் போறது எங்கப்பாதானே..."

பளீரென்று வந்த மனைவியின் பதிலில், குமாரின் தலை சடாரெனக் கவிழ்ந்தது.

சுரபி விஜயா செல்வராஜ்



புடவைகள், சுரிதார்களின்

லேட்டஸ்ட் கலெக்ஷன்ஸ்....

உயர்ரக கைத்தறி புடவைகள்... வேஷ்டிகள்...

பாரம்பரிய கலவையுடன்...

10% தள்ளுபடி... 100% மனதிருப்தி

சென்னை	கோவை	பெங்களூர்
31.8.2005 to 7.9.2005	1.9.2005 to 10.9.2005	24.8.2005 to 7.9.2005

RCS

ரங்காச்சாரி

க்ளாத் ஸ்டோர்

55, லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004

போன் : 24994545, 24994343

கோவை : 123, செங்குப்தா தெரு, கோயம்புத்தூர் 641 009

போன் : 2234429 / 2232520

பெங்களூர் : ரங்காச்சாரி டெக்ஸ்டைல்ஸ் பி. லிட்.,526, சம்பெகி ரோடு, மல்லேஸ்வரம், பெங்களூர் - 3, போன் : 3310402

ஞாயிறும் விற்பனை ◆ விசா / மாஸ்டர் டெபிட் / கிரெடிட் கார்ட்ஸ் ஏற்றுக் கொள்ளப்படும்

◆ உணவு இடைவேளை இல்லை. காலை 9 மணி முதல் இரவு 8 வரை

அப்துல் கலாம் பாராட்டும் வரை ஓயமாட்டோம்!

காஞ்சிபுரம் மாவட்டத்தின் கடைகோடியில் இருக்கிறது, நெடுங்கல் கிராமம். சென்னை - விழுப்புரம் சாலையில் உள்ள அச்சிறுப்பாக்கத்தில் இறங்கிச் செல்ல வேண்டும். பதினாறு கிலோமீட்டர் தூரம். ஒரே ஒரு மினிபஸ் மட்டும்தான்.

நெடுங்கல் ஊராட்சி, தூய்மையான கிராமமாக தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சுதந்திர தினத்தன்று ஐந்து லட்ச ரூபாய் பரிசுத்தொகையை அதன் ஊராட்சி மன்றத் தலைவரிடம் வழங்கினார் தமிழக முதல்வர்.

பார்க்கும் இடமெல்லாம் பளிச் தூய்மையிலும், பசுமை வளர்ப்பிலும் ஜொலிக்கிறது நெடுங்கல். கான்க்ரீட் சாலைகள். சுவர்களில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள். அரசியல், மது வாடை அடங்கிக் கிடக்கிறது. ஆரோக்கியமான கிராமம் ஒன்றில் நுழைந்துவிட்ட திருப்தி.

'எப்படி சாத்தியமானது இத்தனை மாற்றங்கள்?' கேள்விக்கு பதிலாய் கிராம வாசிகள் கைகாட்டியது... ஊராட்சி மன்றத் தலைவர் சுமதி தேவநாதனை.

"எனது சொந்த ஊர் சென்னை. என் கணவர் தேவநாதனுக்கு நெடுங்கல் தான் பூர்வீகம். 2001ல் உள்ளாட்சி மன்றத் தேர்தல் வந்தது. நெடுங்கல் கிராமம், பெண் உறுப்பினர் தொகுதி. என் கணவர் என்னைத் தேர்தல்ல போட்டியிடச் சொல்லவும், சுயேட்சையா நின்னேன். தேர்தல்ல ஜெயிச்சா மெட்ராஸ் போயிடுவேன்னு எதிர்கட்சிக்காரங்க பிரசாரம் பண்ணினாங்க. கொஞ்சம் கொஞ்சமா எனக்குள்ளேயே வைராக்கியம் பிறந்தது. ஜெயிச்சதும் முழுமூச்சா கிராம முன்னேற்றத்துக்குப் பாடுபடத் துவங்கினேன்.

கிராமத்துல டாய்லெட் பழக்கம் இல்லை. என் மாமனார் வீட்டிலேயே இல்ல. முதல்ல இதை மாற்ற நினைச்சேன். ஆனா அது அவ்வளவு எளிதா இல்ல. 'கிராமத்துக்கு எதுக்கு டாய்லெட்'னு கடுமையா எதிர்த்தாங்க. ஊரக வளர்ச்சித் துறை வைத்திருக்கும் சி.டி.க்களை மக்கள்கிட்ட போட்டுக் காட்டினோம். ஊராட்சிப் பள்ளியில் கழிவறை கட்டி, மாணவ - மாணவிகளைப் பழக வைத்தோம். பிறகு அந்தப் பிள்ளைகள் வழியா பெரியவங்களை மாத்தினோம். எங்க பிடிவாதத்தால வீடுகளில் கழிவறை கட்டினாங்க. ஆனா, பயன்படுத்தாம இருந்தாங்க. அப்புறம் அதையும் மெதுவா மாத்தினோம்.

கிராம சபையின் முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டு போனோம். ஊரக வளர்ச்சித்துறை வானொலியில் வழங்கும் தகவல்களைப் பதிவு செய்து, பஞ்சாயத்து ஒலிபெருக்கியில் காலையிலும் மாலையிலும் ஒலிபரப்புவோம். கிராமத்துல உள்ள ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் தகவல் அறிக்கை தயாரித்தோம். எம்.எஸ். உதயமூர்த்தி, இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார், தென்கச்சி


• தேவநாதன்




• பனையன்



• ரத்தினக் கவுண்டர்



• வரதப்பிள்ளை





• சுமதி

சுவாமிநாதன் போன்ற விருந்தினர்கள், அரசு அதிகாரிகளை அடிக்கடி அழைத்து, மக்களிடம் பேச வைத்தோம்.

வனத்துறையின் உதவியோடு கிராமத்தில் வெள்ளாடு வளர்ப்பை ஒழித்து, அவர்களுக்குக் கறவை மாட்டுக் கடன் கிடைக்கச் செய்தோம். இப்ப கிராமத்தைச் சுத்தி மழை



• முதல்வரிடம் பாராட்டு...

தரும் காடுகள் வளர்ந்து வருது" என்றார் சுமதி தேவநாதன்.

மக்கள் சக்தி இயக்க உறுப்பினரான ஆனந்த வேலு,

''ஆரம்பத்துல, இங்க போன் வசதியே கிடையாது. தனி எக்ஸ்சேஞ்சோ, மலை குறுக்கிடுவதால் வில் போனோ வழங்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க. நீண்ட முயற்சிக்குப் பிறகு TDMA - PMP தொழில் நுட்பத்தால் எங்க கிராமத்துக்கு சமீபத்துலதான் போன் வசதி வந்தது. கொடைக்கானலுக்குப் பிறகு எங்க கிராமத்துலதான் இந்த டெக்னாலஜி பயன்படுத்தப்பட்டிருக்கு" என்றார்.

"நிறைய போராட்டத்துக்குப் பிறகுதான் எதையும் செய்ய முடிஞ்சது. இப்ப மக்களே ஒத்துழைக்க முன் வராங்க. ஊருக்கு நல்லது நடக்க பலர் தங்களோட நிலங்களை தானமா அரசுக்குக் கொடுத்திருக்காங்க'' என்ற சுமதி தேவநாதன், வரதப்பிள்ளை, பனையன், ரத்தினக் கவுண்டர் மூவரையும் நமக்கு அறிமுகப்படுத்தினார். இதில் வரதப் பிள்ளையும் ரத்தினக் கவுண்டரும் நெடுங்கல் - தொழுப்பேடு இணைப்புச் சாலை போடவும், பனையன் குடிநீர்த் தொட்டி கட்டவும் இலவசமாக இடம் தந்தவர்கள்.

''உயர்நிலைப் பள்ளி, சொந்தமாக மின் உற்பத்தி போன்ற திட்டங்களை வருங்காலத்தில் சாதிக்கும் எண்ணம் இருக்கு. குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நேரில் வந்து பாராட்டும் வரை ஓயமாட்டோம்'' என்ற சுமதி, ''எனது வெற்றிக்குப் பின்னால் இருக்கும் ஆண்'' என்று தமது கணவர் தேவநாதனைக் குறிப்பிட்டார்.

''இந்த வெற்றிக்குப் பின்னால் நான் மட்டுமில்லீங்க... எங்களை ஊக்கப்படுத்திய கிராம மக்கள், அரசு அதிகாரிகளின் பங்குதான் அதிகம். உண்மையான உழைப்புக்கு எங்க நெடுங்கல் கிராமம் ஓர் உதாரணம். இதே மாதிரி தமிழகத்தோட எல்லா கிராமமும் சிறந்து விளங்கணும்ங்கறதுதான் எங்க ஆசை'' என்றார் தேவநாதன்.

- யாணன்

–பரிசு பெற்ற பஞ்சாயத்துத் தலைவி

படிக்கும்போது எட்டிப் பார்க்கலாமா?

பிறர் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அதை நைஸாக ஒளிந்திருந்து எட்டிப் பார்த்தால், எட்டிப் பார்ப்பவரின் கழுத்துப் பகுதி பலமாகும், இரத்த ஓட்டம் சீராகும், கண் பார்வை கூர்மையடையும். இது ஐரோப்பியர்களின் பண்டைய கால நம்பிக்கை. சரி, ஒருமுறை முயன்று பார்த்தால் என்ன என்று கழுத்தைத் தடவிய படியே, சின்னாளப்பட்டி மெயின் ரோடில் 'வாக்'கினோம். நம் கண்ணில் பட்டது ஓர் அப்பாவிச் சிறுவன். மரங்கள் அடர்ந்த வீடு. பின்புறத் தோட்டத்தில் அமர்ந்து மும்முரமாக ஒரு புத்தகத்தை மடக்கி வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். பூனை போல சத்தமிடாமல் நெருங்கி கழுத்தை நீட்டி எட்டிப் பார்த்தால்... அட! அவன் படித்துக் கொண்டிருந்தது கல்கி!

மிரண்டு போய் விழித்தவனை அமைதிப்படுத்தி, இரண்டு வார்த்தைகள் பேசுவதற்குள் சத்தம் கேட்டு வெளியே வந்தார் சந்திரசேகரன். கிராமிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல நிறுவனத்தில் எழுத்தர் - தட்டச்சராகப் பணி புரிந்து வருபவர். 'சத்தியமாக பிள்ளை பிடிப்பதற்காக வரவில்லை' என்று உறுதி கூறியவுடன் பேசத் தொடங்கினார். கல்கி என்றதும் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. பையனின் கண்களில் ஆயிரம் வாட்ஸ் பல்பு! "இவன் என் இரண்டாவது பையன் கௌரிசங்கர். ப்ளஸ்டூ படிக்கிறான். சொன்னா நம்ப மாட்டீங்க, செவன்த் ஸ்டாண்டர்ட்லேர்ந்து தொடர்ந்து கல்கி படிச்சிட்டிருக்கான்" என்றார். "இன்னிக்கு வீட்டுல ஒரு முக்கியமான தினம். நான் அப்புறம் வந்து பார்க்கறேன். நீங்க பையன்கிட்ட பேசிட்டிருங்க" என்று கிளம்பினார்.

புன்னகை செய்து கொண்டிருந்த



வாரம் ஒரு வாசக குடும்பம்

கௌரிசங்கரிடம் திரும்பினோம். "நான் தேவாங்கர் ஹைஸ்கூல்ல கம்ப்யூட்டர் சயின்ஸ் படிச்சிட்டிருக்கேன்" என்று எடுத்தவுடன் பயமுறுத்தினான். "ஓஹோ அப்படின்னா, டெய்லி இன்டர்நெட்ல சாட்தானா?" என்றால், "அய்யய்யோ, அப்படின்னா என்னன்னே தெரியாது" என்று அவசர அவசரமாக மறுத்தான்.

"எனக்கு கல்கிதான் பொழுதுபோக்கு. செவ்வாய்க்கிழமை சாயந்திரம் திண்டுக்கல்லுல கல்கி கிடைச்சுடும். டென்த் படிக்கிற வரைக்கும், ஸ்கூல் விட்டு கிளம்பி நேரா கல்கி வாங்கிட்டு தான் வீட்டுக்குப் போவேன். ஆனா இப்போ ரெண்டு வருஷமா சின்னாளப்பட்டியில படிக்கிறதால, கல்கி படிக்கிறதுக்கு ரொம்ப டிலே ஆகுது" என்றான் வருத்தத்துடன். வீட்டுக்குள் நுழைந்தால் உள்ளே பொன்னியின் செல்வனிலிருந்து சில காட்சிகள் ஓவியமாக மாறி, சுவரை அலங்கரித்துக் கொண்டிருந்தன. நாம் வாயைப் பிளந்ததைப் பார்த்ததும், "இது நான் வரைஞ்சதுதான்" என்று பெருமையுடன் சிரித்தான் கௌரிசங்கர்.



கம்ப்யூட்டர் சயின்ஸ் கல்கி வாசகருக்குப் பிடித்த பகுதி, வலை பாயுதே (ஒரு கையில் கல்கி, மறு கையில் கண்டெலி என்று நெட்டில் ஜாலியாக மேய்ந்து கொண்டிருப்பாராம்). அவ்வப்போது வரும் கல்வி தொடர்பான கட்டுரைகளும், சிறு கதைகளும் ரொம்பப் பிடிக்குமாம். பண்டைய ஐரோப்பியர்களைப் பற்றி பையனிடம் எதையாவது கேட்கலாம் என்று நினைத்து வாயெடுத்தபோது, உள்ளே நுழைந்தார் சந்திரசேகரன். இவர் தலையங்கப் பிரியராம். 'அரசியல் செய்திகளைத் தெரிந்துகொள்வதில் அலாதிப் பிரியம்' என்றார்.

"சரி, இன்றைக்கு வீட்டில் என்ன நிகழ்ச்சி?" என்றதும் சட்டென்று கண் கலங்கினார். இவரது முதல் மகன் செந்தில் வீரக்குமார் 'மெனிங்கோமைலோசெல்' எனும் அபூர்வ வியாதியால் அவதிப்பட்டு, தனது 22வது வயதில் இறந்துவிட்டிருக்கிறார். செந்தில் வீரக்குமார் தீவிர கல்கி வாசகராம். அவரது வாசிப்பு ஆர்வத்தைக் கண்டு பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், அலை ஓசை என்று புத்தகங்களாக வாங்கிக் குவித்திருக்கிறார்கள். அத்தனையையும் ஆவலுடன் படித்து வருவதுதான் அவனது ஒரே பொழுதுபோக்காக இருந்ததாம். "இன்னிக்கு என் பையனோட தலை திவச நாள்" என்றவர், சிறிது இடைவெளி விட்டு சொன்னார்... "அவன் ரொம்பவும் விரும்பின கல்கியில எங்களைப் பத்தி எழுதறது தெரிஞ்சா ரொம்ப சந்தோஷப் படுவான்".

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

உனக்கென

5 கவிமொழி

அறிவின் செருக்கும்
இளமையின் உறுதியுமாய்
நீ வலம் வருகையில்
உனக்காகவென ஒரு
பரிசை வார்த்தெடுக்க விழைகிறேன்.

பளபளத்து அலையும்
கருங்கூந்தலுக்கு
மலர்களைத் தரலாம்,
தடைகளற்றுத் திரியும்
அதை ஒரு கட்டுக்குள்
கொண்டு வர விருப்பமில்லை.

வளையல்கள் விலங்குகளாய்
மாறும் அபாயமிருக்கிறது.
சங்கிலிகளும் அடிமைத்தளையின்
முன்னோட்டம்தானே?

பருவத்தின் முதற்படியில்
நிற்கும் உனக்கு
பாதையின் துணையாய்
எடுத்துச் செல்ல
எதைத் தருவது?

காலணிகள்,
பாதங்களுக்கும் புல்வெளிகளுக்கும்
இடைவெளி எதற்கு?
முட்களே போதி மரங்கள்

சில நேரங்களில்
புத்தகங்கள்கூட
சுமையாகி விடுவதுண்டு.

அறிவுரைகள் கூறி
வாழ்க்கையை உன்மீது
திணிக்கும் ஆர்வமில்லை.
பழைய பாட்டைகள்
வேண்டாம் உனக்கு.


எல்லையற்ற வானில்
சில வெண்புறாக்களைப்
பறக்க விடுவோம்
அவை தவறவிட்ட
சிறகு ஒன்றை எடுத்துத் தருகிறேன்

புன்னகைகளையும்
நினைவுகளையும் விட
வேறு எதைத் தர முடியும்!

ஓவியம்: மருது



ஏதேனுமொரு தமிழ் சினிமாவில் இளம்நாயகன் அல்லது நாயகி இருவரில் ஒருவர் சோகமாக வசனங்கள் பேசினால் முடிந்தது. "இடைவேளைக்கு முன்னால, ஹீரோவுக்கு ப்ரெய்ன் டியூமர்னு காட் டப் போறான்யா... அதுக்குத்தான் டைரக் டர் இப்படி 'வீட்' விடுறார்" என்று தியேட் டரில் கமெண்ட் பறக்கும். க்ளைமாக்ஸில் ஆபரேஷன் தியேட்டருக்குள் ஹீரோவை அழைத்துச் செல்லும் காட்சி. கடைசி ஷாட், ஹீரோயின் முகத்தில் நிலை நிறுத்தப்பட்டு, "இந்த தேவதையின் கண்ணீர் உலர்வதற்கு முன், அவன் கரம்பிடிக்கக் கண்டிப்பாய்



ஓடி... ஓடி... உழைப்பவரா

திரும்பி வருவான்" என்ற இயக்குனரின் பஞ்ச் வசனம் திரையில் ஓட, "கொன்னுட் டான்யா" என்று புலம்பியபடி தியேட்டரை விட்டு வெளியே வருவார்கள்.

"இது கற்பனை. நிஜத்திலோ முப்பது முதல் நாற்பது வயதுக்குட்பட்ட இளைய சமுதாயத்தை மூளைக்கட்டி, முதுகுத் தண்டுப் பிரச்னை உட்பட பல நரம்பியல் நோய்கள் தாக்குவது சகஜமாகி விட்டது. ஆனால் இது குறித்த விழிப்புணர்வு மட்டும் அறவே இல்லை" என்கிறார் சென்னை நந்தனம் அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் தலைமை நியூரோ சர்ஜன், டாக்டர் சித்தார்த் கோஷ்.

நூறு பேரில் பதினைந்து முதல் இருபது பேருக்கு, வாஸ்குலர் வகை தலைவலிகள் மண்டையிடிப் பிரச்னையாக இருக்கின்றன. இவர்களில் பாதிப் பேர் இளைஞர்கள். நமது இரத்தத்தில் செரட்டோனின், நியூரோகைனின், குளுட்டோமேட் ஆகிய இரசாயனப் பொருள்கள் அதிகம் உண்டாகி, மூளைக்குச் சென்று, முதலில் இந்தக் குழாய் களைச் சுருக்கி பிறகு விரிவடையச் செய்கின் றன. இப்படி மூளை நரம்புகள் இயல்புக்கு மாறாகத் தூண்டப்படும் பொழுது தலைவலி உண்டாகிறது. இந்த இரசாயனங்களின் அளவு அதிகரிக்காமல் இருக்க, உணவுப் பொருள்களில் வெங்காயம், வெண்ணெய், சாக்லெட் மற்றும் மது போன்றவற்றைத் தவிர்த்து விடுதல் அவசியம். குறிப்பாக ஓடி ஓடி உழைக்கும் இளைஞர்கள், வெயிலில் நீண்ட தொலைவு இரு சக்கர வாகனங்களை ஓட்டுவதாலும், நிறுவனம் வரையறுத்த 'டார் கெட்டை' முடிப்பதற்காக தூக்கத்தை குறைத்துக் கொண்டு கடினமாய் உழைப்ப தாலும், வாஸ்குலர் வகை தலைவலிகள் ஓடி வந்து தாக்குகின்றன.

இந்த வகைத் தலைவலிகளை மைக்ரேன் தலைவலி, டென்ஷன் தலைவலி என இரண் டாகப் பிரிக்கலாம். இவ்வகை பாதிப்புக்கு ஆளான பெரும்பாலான இளைஞர்களுக்கு வாந்தி வரலாம். உணவின் மீது ஈடுபாடு இல்லாமை, மலச்சிக்கல், உடல் கனமாகத் தோன்றுதல், தெளிவாகச் சிந்திக்க இய லாமை போன்றவை ஏற்படலாம்.

இந்த அறிகுறிகளுக்காக பயப்படத் தேவையில்லை. உடனடியாக சி.டி. ஸ்கேன், ஈ.ஈ.ஜி, எனப்படும் எலெக்ட்ரோ என்செபலோகிராம் போன்ற பரிசோதனை கள் மூலம் எவ்வகை வாஸ்குலர் தலைவலி என்பதைக் கண்டறிந்து மாத்திரைகள் மூலம் குணமாக்கி விடலாம். ஆனால் ஒற்றைத் தலைவலி, சாதாரணத் தலைவலிதானே என அலட்சியமாக விட்டுவிடுவதும், வருடக் கணக்கில் பிரச்னையோடு போராடுவதும் மூளைக்கும், மூளை நரம்புகளுக்கும் நல்ல தல்ல. ஏனென்றால் வாஸ்குலர் தலைவலி எனும் பிரச்னையோடு வரும் ஐந்நூறு பேரில் ஒருவருக்கும், மக்கள் தொகையில் பத்தா யிரம் பேரில் ஒருவருக்கும் மூளைக்கட்டி



இருப்பதைக் கண்டுபிடிக்கிறோம்" என்று சொல்கிறார் டாக்டர் கோஷ்.

தலைவலிக்கான அறிகுறிகளுக்கும், அதுவே மூளைக் கட்டி என்பதற்கான

நீங்கள்?

அறிகுறிக்கும் துல்லியமான வேறுபாடுகளை அறிய முடியுமா? என்றால், "நிச்சயமாக" என்று தொடர்கிறார்...

"முப்பது முதல் நாற்பது வயதுக்குட்பட்டவருக்கு இருவகைக் கட்டிகள் மூளையில் தோன்றலாம். ஒன்று கேன்சர் இல்லாத கட்டிகள். இரண்டாவது கேன்சர் சார்ந்தது. இந்த இரு வகை மூளைக் கட்டிகளுக்கும் பொதுவான அறிகுறிகளாக தலைவலியும் ஒருமுகப்படுத்தி எந்த வேலையும் செய்ய முடியாத தன்மையும் இருக்கும். கேன்சர் இல்லாத 'காமன் ட்யூமர்' எனப்படும் 'பிட்யூட்டரி கிளாண்ட்ஸ் கட்டி' ஏற்பட்டால், கண் பார்வை குறையும். பக்கவாட்டுப் பார்வை சரியாக இருக்காது. கேன்சர் அல்லாத கட்டியில் இரண்டாவது முக்கியமான கட்டி 'மெனிஞ்சியோமா'. மனித மூளையை, போர்வை போன்ற ஓர் அமைப்பு மூடியிருக்கும். அதிலிருந்து தோன்றுவதுதான் இந்த மெனிஞ்சியோமா. இதற்கும் தலை வலியே அறிகுறி. மெனிஞ்சியோமா முற்றிவிட்டால், தீவிர வலிப்பு வரும். வலிப்பு வந்தவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்து, சர்ஜரி மூலம் நிரந்தரத் தீர்வு பெறலாம்.

முப்பது முதல் ஐம்பது வயதுக்குள் ஏற்படும் கேன்சர் வகைக் கட்டிகளை லோ கிரேட் (Grade-2) கட்டி என்கிறோம். இது வளரும் தன்மை கொண்டது. இதை சர்ஜரி மற்றும் ரேடியேஷன் மூலம் குணப்படுத்த முடியும். கீமோதெரபி தேவையில்லை.

இவை தவிர இதே வயதில் காணப்படும் மற்றொரு முக்கியப் பிரச்னை மூளையின் இரத்தக் குழாயில் ஒரு கொப்பளம் போல ஏற்படும் வீக்கம். இதை அனியூரிஸம் என்கிறோம். இந்தக் கொப்பளம் வெடித்தவுடன் வாந்தி ஏற்படலாம். நினைவிழப்பு, மயக்கம் உண்டாகலாம். இவை தவிர சப்-அரக்நாய்டு ஹெமரேஜ், ஆர்ட்டீரியோவீனஸ் மால்ஃபார்மேஷன் போன்ற பிரச்னைகளும் இளைஞர்களைத் தாக்குகின்றன. இவை அனைத்துக்கும் அறுவை சிகிச்சையே அற்புதத் தீர்வாக இருக்கிறது" என்றவர்,



• சித்தார்த் கோஷ்

"இன்றைக்கு முதுகுத் தண்டு வலி, கழுத்து வலி, இடுப்பு வலி ஆகியவை சர்வ சாதாரணம். இவற்றுக்கு சர்ஜரி இல்லாமலே தீர்வு பெற முடியும். ஆனால் இவற்றை அலட்சியம் செய்வது சர்ஜரி வரை இழுத்துச் செல்லலாம்" என்று எச்சரிக்கிறார்.

மூளைக் கட்டிகள், முதுகுத்தண்டு அறுவை சிகிச்சைகளைச் செய்ய முடியாமல் துன்புறும் ஏழைகள் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவு மக்களுக்கு இலவச அறுவை சிகிச்சைகள் செய்து வரும் டாக்டர் கோஷ், இதற்காகவே டாக்டர் கோஷ் சாரிட்டபிள் டிரஸ்ட் எனும் அற நிறுவனத்தை நடத்தி வருகிறார்

- ஸ்ரீசக்கரப்

வீடு

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2005ல் ஆறுதல் பரிசு ரூ. 2,000 பெற்ற கதை

எங்கள் தெருவில் சுந்தர்ராஜன் மாமா வீடுதான் தனி வீடு. அதை பங்களா என்று அந்த நாளிலோ, இந்த நாளிலோ சொல்ல முடியாது. அது ஒரு சாதாரண வீடு. ஆனால் பெரிய வீடு.

அடையாறில் இருந்த பெரிய பெரிய பங்களாக்களும், சிறு சிறு வீடுகளும் இடிபட்டு அடுக்கு மாடிகளாகிக் கொண்டிருக்கையில், சுந்தர்ராஜன் மாமா வீடு மட்டும் எப்போதும் போல் இரண்டு கதவுகளும், கதவுகளில் சாதாரணக் கம்பிகளுமாக எந்தவிதப் புதுமைப் பூச்சுகளும், ஒப்பனைகளும் அற்று இருந்தது. ஆனால், அதிலும் ஏதோ ஒரு அழகும், கம்பீரமும் இருப்பதுபோல் எனக்குத் தோன்றும்.

நான் அந்த வீட்டின் வழியாகப் போகையில், எப்போதும் என்னை நின்று ரசிக்க வைக்கும்.

சுந்தர்ராஜன் மாமா மட்டும் தனியாக அந்த வீட்டில் வசித்து வந்தார். அவருடைய மனைவி இறந்து போய் நாளாகி விட்டது. மாமா அந்தக் காலத்து ஆங்கில எம்.ஏ. அற்புதமாக ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் தெரிந்தவர்.

இந்த எழுபத்தெட்டு வயதிலும், அவரே குக்கரில் சாதம் வைத்துக் கொள்வார். பக்கத்திலிருக்கும் மெஸ்ஸிருந்து அவருக்கு சாம்பார், ரசம், கறி வரும்.

தனியாக வாழ்ந்தாலும், அநாவசியமாகப் பொழுதை வீணாக்க மாட்டார்.

தோட்ட வேலை செய்வார்; புத்தகம் படிப்பார்; எழுதிக் கொண்டிருப்பார். மாலை வேளைகளில் மைலாப்பூர், அடையாறு என்று கச்சேரிகளுக்குப் போவார். சில நாட்களில் வாசலில் நண்பர்களுடன் ஈஸிசேரில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்.

நானும் அவரும் வயது ஒத்த நண்பர்கள் அல்ல. இருந்தாலும் விளையாட்டில், குறிப்பாக கிரிக்கெட்டில் எங்கள் இருவருக்கும் இருந்த ஆர்வம்தான் எங்களை நண்பர்களாக்கியது.

அந்த நாள் கிரிக்கெட் ஆட்டக்காரரிலிருந்து இந்த நாள் வீரர் வரை தெரிந்து வைத்திருந்து, அவர்களின் பலம், பலவீனங்களை மிக அழகான ஆங்கிலத்தில் சுந்தர்ராஜன் மாமா அலசுவதைக் கேட்க மிகமிக சுவாரஸ்யமாக இருக்கும்.

ஒரு நாள் பேச்சினூடே என் ஆர்வத்தை அடக்க முடியாமல் கேட்டு விட்டேன்.

'நீங்க ஏன் மாமா இன்னும் பிடிவாதமா இந்த வீட்டை விற்காமல் வச்சிட்டிருக்கீங்க?'

தமது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார். கொஞ்ச நேரம் நட்சத்திரங்கள் மினுங்கும் நிர்மலமான வானத்தைப் பார்த்தார். உடனே ஏதும் பேசவில்லை.

எனக்குக் கூட என் வயதுக்கு மீறி அவரை அவமதிப்பது போல் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டேனோ என்று தோன்றியது. ஆனாலும் அவர் முகத்தில் கோபத்தின் சாயல் ஏதும் தெரியவில்லை. நானும் மௌனமாகவே இருந்தேன். திடீரென்று என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார். "உங்க எல்லோருக்கும் வீடு ஒரு ஜடப் பொருன்னுதானே எண்ணம்...?"

'தேவவிரதன்'



நான் ஒரு கணம் விழித்தேன். இருந்தாலும், சமாளித்துக்கொண்டு,

''பின்ன...?'' என்று எதிர்க்கேள்வி போட்டேன்.

"இதபார் கிருஷ்ணா... தாவரங்களுக்குக் கூட உயிர், உணர்ச்சிகள் இருப்பதா விஞ்ஞானம் கூறுகிறது. பாட்டுக் கேட்டால் செடி வளர்கிறது; வாடவில்லை... என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்படியானால் வீட்டுக்கு ஏன் உயிர் இருக்கக்கூடாது? அதை மட்டும் ஏன் நாம் வெறும் சிமெண்ட், கல் என்று நினைக்க வேண்டும்..?''

"செடி கொடிகள் வளர்கிறதே மாமா...

வீடு வளருகிறதா..?"

மாமா மீண்டும் தலையைத் தடவிக் கொண்டார்.

"வாஸ்தவம்தான்... ஆனால் வளர்ச்சி என்றால் கூட மனுஷன் எத்தனை தூரம் வளர்கிறான்... ஒரு வயசு வரைதானே... அப்புறம் என்ன... நரை, திரை, மூப்பு தானே...?"

"எனக்குப் புரியவில்லை மாமா..."

"உனக்குப் புரியாது... வீடும் மனுஷாளைப் போல்தான்..."

"அப்படீன்னா..?"

"வீட்டைப் பார்த்துப் பார்த்துக் கட்டுகிறோமில்லையா, அது



"நான் செத்தப் புறமும் இந்த வீடு மாறாது!"

தான் அதன் வளர்ச்சி.. ஒரு ஸ்டேஜுக்குப் பிறகு ரிப்பேர் செய்கிறோம்... நம்ம உடம்பும் அப்படித்தானே..? என்ன சொல்ற..?"

நான் சிரித்தேன்.

"மாமா... லாஜிக்கலாக நீங்க சொல்றது சரியாக இருக்கலாம்... ஆனால் மனுஷாளுக்கு மனசு, ஞாபகம், ஏக்கம், கோபம், தாபம்னு உணர்ச்சிகள் எல்லாமிருக்கே... வீட்டுக்கு உண்டா...?"

"உண்டுடா... வெளில காமிச்சாத் தானா உணர்ச்சிகள்...? உணர்ச்சிகளை வெளில காட்டாத மனுஷா எத்தனை பேர் இருக்கா தெரியுமா...?"

"போங்க மாமா... நீங்க ஏதோ ஆர்க்யுமெண்ட்டுக்காகச் சொல்றீங்க... வீட்டுக்கு உணர்ச்சிகள் உண்டாம்... க..ம்..மா..."

மாமா சிரித்தார்.

"உனக்குப் புரியாதுடா கிருஷ்ணா... உன் வயசு அப்படி... நீ வளர வளர உனக்குப் புரியும்... புரியணும்... இந்த வீடு என் அப்பா, நான் சின்னவனா இருக்கறப்போ கட்டியது... அவர் அதில் எத்தனை தீவிரமா இருந்தார்னு தெரியும்... எனக்கு அவர் சாகும்போது நாப்பது வயசு... 'சுந்தா, இந்த வீட்டை எதுவும் பண்ணிடாதேடா...' என்று சத்தியம் வாங்கிண்டார். அந்தச் சமயத்தில் எனக்கே இந்த வீட்டு மேல பாசம் பொறந்துடுத்து... எங்க வீட்ல நடந்த நல்ல, கெட்ட காரியங்களுக்கெல்லாம் மிகப்பெரிய சாட்சி இந்த வீடுதான். எத்தனை நாட்கள்... எத்தனை வைபவங்கள்... பண்டிகைகள்... எனக்கு ஒவ்வொரு அறையையும் பார்க்கறச்சே எல்லாம் ஞாபகம் வரும். மறக்கவேயில்ல... மறக்க முடியாது... இந்த வீடு என்னோட தோழன்... எங்குடும்பத்தில் ஒருத்தன்... அவனை எப்படி இன்னொருத்தன்கிட்ட வித்துட்டு, காசுக்காக, கூடு கூடாக இருக்கற ஃபிளாட்ல வாழணும்?" தொடர்ந்து பேசியதில் மாமாவுக்கு மூச்சு வாங்கியது. மாமா உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார் என்பது புரிந்தது. நான் பேசாமல் இருந்தேன்

"இந்த வீட்டுக்கு நான் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன்... மாத்த மாட்டேன்... இடிக்க மாட்டேன்னு. என் பெண்ணும், பிள்ளையும் இந்த வீட்டை வித்துடுன்னு எத்தனையோ முறை சொன்னா... வித்துட்டு காசை எடுத்துண்டு அவா கூடப் போய் இருக்கணுமாம்... காசு என்ன காசு... அதுதான் அவாகிட்ட வெளிநாட்ல வேலை பாத்து, நிறைய இருக்கே... அதான் வரமாட்டேன்... விக்க மாட்டேன்னுட்டேன்..."

"உங்க குழந்தைகளை விட இந்த வீடு பெரிசா மாமா...?" சட்டென்று இளமைத் துடுக்கில் கேள்வி விழுந்து விட்டது.

மாமா என்னை உற்றுப் பார்த்தார்.

"ஆமாம்... பெரிசுதான்..."

"எப்படிங்கறயா...? எனக்கு என் குழந்தைகளை என்னோட இருபத்தெட்டு வயசுக்கப்புறம் தான் தெரியும்... ஆனா இந்த வீட்டை எனக்கு எழுபத்தெட்டு வருஷமா தெரியும். எனக்கு இந்த வீட்டோட உள்ள தொடர்பு, ஒரு உறவு மாதிரி. அதை உதற என்னால முடியாது..."

மாமாவின் விளக்கங்களும், பிடிவாதமும் எனக்கு ஆச்சர்யமாக இருந்தன. கேட்க வந்த இன்னொரு கேள்வியை

அப்படியே விழுங்கிக் கொண்டேன். ஆனால் சுந்தர்ராஜன் மாமா என்னைப் போல எத்தனை பேரைப் பார்த்திருப் பார்...!

"என்ன சொல்ல வர... நான் செத்துப் போய்ட்டா இந்த வீடு என்ன ஆகும்னு தானே...?"

நான் அசட்டுச் சிரிப்பு சிரித்தேன்.

மாமா ஒரு நிமிஷம் கண்களை மூடிக் கொண்டார்.

"நான் செத்தப்புறமும் இந்த வீடு ஒண்ணும் மாறாது... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

'எப்படி' என்று நான் கேட்கவில்லை. ஆனால் மாமாவே சொன்னார்.

"தினம் தினம் ராத்திரி தூங்கறதுக்கு முன்னாலே நான் வீட்டோட பேசுவேன்... அப்ப இந்த வீடே சொன்னது. கவலைப் படாதேடா சுந்தா... எனக்கு ஒண்ணும் ஆகாதுன்னு..."

எனக்கு மேலே பேச பயமாக இருந் தது. மாமாவுக்குப் பைத்தியம் பிடித்து



"இந்த வீட்டுக்கு உயிர் இருக்கு. எங்கிட்ட பேசுச்சு."

விட்டதோ என்று.

'வீடாவது... பேசுவதாவது...?'

"சரி... விடுங்கோ மாமா... வேற ஏதா வது பேசலாம்..." என்று பேச்சை மாற்றி னேன்.

இந்த சம்பாஷணை நடந்த ஏழாம் நாள், சுந்தர்ராஜன் மாமா தூக்கத்தில் இறந்து போனார்.

பால்காரனும், பேப்பர்காரனும் கண்டு பிடித்துச் சொன்னார்கள். சுந்தர்ராஜன்

"என்னடா இது, பைத்தியக் காரத்தனமா இருக்கு!"



மாமாவின் பையனும், பெண்ணும் யு.எஸ்ஸில் இருந்து வந்து காரியங்களைச் செய்தனர்.

பிறகு புறப்பட்டுப் போனார்கள்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு மாமா வீடு பூட்டியே இருந்தது. நானும் பார்க்கும்போதெல்லாம் 'இந்த வீட்டை எப்போது இடிக்கப் போகிறார்களோ' என்று நினைத்து பெருமூச்சு விட்டுச் செல்வேன்.

திடீரென்று ஒரு நாள், நான் அந்த வழியாக வரும்போது வீட்டுக் கதவு திறந்திருந்தது.

மாமா உட்காரும் அதே வாசலுக்கு நேரே, ஈஸிசேரில் ஒருவர் கைகளை மேலே கட்டியபடி படுத்திருந்தார்.

நான் திகைப்புடன் பார்த்தேன். அவர் யு.எஸ்ஸில் உள்ள மாமாவின் மகன் ஸ்ரீவத்ஸன்.

'சரி... வீட்டை விற்கத்தான் இவர் வந்திருக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டேன். பின்னர் நானே,


"ஹலோ ஸார்..." என்றபடி கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே போனேன். அவர் புன்னகையுடன் "ஹலோ" என்றார் அமெரிக்க ஆங்கிலத்தில்.

"எப்போ வந்தீங்க...?" என்றேன்.

"இரண்டு நாள் ஆகிறது... நீங்க?" என்றார்.

"நான் இந்த தெருக்கோடியில் ஃப்ளாட்டில் இருக்கிறேன். சுந்தர்ராஜன் மாமா எனக்கு ரொம்ப ஃப்ரெண்ட்..." என்றேன்.

Mr. மெட்ராஸ்



என்னைப் பற்றி விசாரித்தார். சொன்னேன்.

"அப்ப... திரும்ப எப்ப யு.எஸ். போறாப்பல...?" என்றேன்.

அவர் தோள்களைக் குலுக்கினார்.

"வெல்... ஐ'ம் நாட் கோயிங்... ஐ ஹாவ் கம் டு இண்டியா ஃபார் குட்..." என்றார்.

நான் புருவங்களை உயர்த்தினேன்.

"ஏன்...?"

"ஐ ஹாவ் நோ லைஃப் தேர்... என் மனைவி போன மாசம் கார் விபத்தில் இறந்து விட்டாள். என் மகளும், மகனும் என்னுடன் இல்லை... நான் அங்கே இருந்து என்ன பண்ணப் போறேன்? எனக்கு அப்பாவோட இந்த வீட்டுல இருக்கணும்னு தோணித்து... புறப்பட்டு வந்துட்டேன்..." என்றார்.

எனக்கு வியப்புத் தாங்கவில்லை.

"இந்த வீட்டை நீங்கள் மாற்றப் போவதில்லையா...?" என்றேன்.

"வொய்... எதற்காக மாற்றணும்...? ஐ லைக் இட் அஸ் இட் ஈஸ். இப்படியே இருக்கறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு..."

"பட்..." என்று இழுத்தேன்.

அவர் ரகசியம் பேசுவது போல் என்னிடம் சொன்னார்.

"யு நோ ஸம்திங்... திஸ் ஹவுஸ் ஹேஸ் லைஃப்... இந்த வீட்டுக்கு உயிர் இருக்கிறது... அது என்னிடம் ஒரு நாள் ராத்திரி பேசியது... என்னோட இப்படியே இரேன்னு..."

நான் விழிகள் பிதுங்க அவரைப் பார்த்தேன்.

"யு திங்க் ஐம் க்ரேஸி...?" என்றார்.

நான் தலையசைத்தேன்.

"இல்லை... சுந்தர்ராஜன் மாமா சொன்னதையே நீங்களும் சொல்றீங்க... அதான் ஆச்சர்யமா இருக்கிறது..." என்றேன்.

"ஈஸ் இட்...? அப்படியானால் நீ அப்பாவுடைய ரொம்ப நெருங்கிய நண்பனாக இருக்க வேண்டும்... அப்ப எனக்கும் நண்பன்தான்... இந்த வீடு மாதிரி..." என்று கூறியபடி என்னை அணைத்துக் கொண்டார்.

நான் அந்த கோபியடித்த, இரண்டு வாசற்கதவுகள் கொண்ட, சாதாரண ஜன்னல்கள் கம்பிகளுடன் கூடிய, மரங்கள் அடர்ந்த மிகப் பழைய வீட்டை கண்கொட்டாமல் பார்த்தேன்.

சுந்தர்ராஜன் மாமா எங்கிருந்தோ சிரிப்பது போல இருந்தது. அது மாமா இல்லை... வீடு...!

வலைபாயுதே



நம்பிக்கை:

உங்கள் பார்ட்னருக்குப் பிடித்தமானவற்றைப் பற்றியும் பேச வேண்டும், உங்கள் பார்ட்னரின் ஜோக்குகளை ரசிக்க வேண்டும், நேரம் தவறாமை முக்கியம், ரொமான்ஸைக் கைவிடவே கூடாது. இவையெல்லாம் காதலில் செய்ய வேண்டிய சில. - இது ரொமான்ஸ் பகுதி. 'என் கண்ணிலிருந்து வழியும் துளி, மண்ணை அடைவதற்குள், அதை ஏந்திக் கொள்ளும் உன் விரல்கள். அதுதான் உன் நட்பின் மகத்துவம் - இது ஃப்ரெண்ட்ஷிப் பகுதி! உன்னுள் அவநம்பிக்கையை விதைப்பவர்களைப் பற்றிக் கவலைப்படாதே! வெளியேறுபவர்கள் வெற்றி பெறுவதில்லை, வெற்றிபெற நினைப்பவர்கள் வெளியேறுவதில்லை! - இது தன்னம்பிக்கைப் பகுதி. இப்படி பாஸிட்டிவ் எண்ணங்களுடன் வலம் வரும் வலைத்தளம் pravsworld.com நீங்களும் உறுப்பினராகி உங்கள் நம்பிக்கை விதைகளைத் தூவலாம் இங்கே! உங்களின் நல்வார்த்தைகள் சிலரின் வாழ்க்கையையே நல்லவிதமாய் மாற்றக்கூடும்தானே!

பேசும் அகராதி!

டௌன்லோட்:

ஓர் அகராதி, குறிப்பிட்ட வார்த்தைக்கு உண்டான பல்வேறு அர்த்தங்களைப் பொருளோடு, ஸ்பெல்லிங்கோடு வாசித்துக் காட்டினால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்! அப்படிப்பட்ட 'பேசும் அகராதி'யைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய முகவரி efreedown.com/soft_131087.html. இனி அர்த்தத்தோடு பேசுங்க!

வலைப்பதிவு:

அமெரிக்கா, தன் நாட்டுப் பாதுகாப்பை பல வகைகளிலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அந்த வரிசையில் நீர்மூழ்கிக் கப்பலுக்கான 'சோனார்' என்ற கருவியில் செய்யப்பட்டுள்ள சில மாற்றங்கள், பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. கடற்பாலூட்டிகளான திமிங்கலங்கள், ஓங்கிகள் (Dolphins) ஆகியவை, நீருக்கடியில் ஒலியெழுப்பி ஒன்றோடொன்று தொடர்புகொள்கின்றன. மேலும் ஒலி அலைகளின் எதிரொலி மூலம் அவை தத்தமது இருப்பிடங்களையும், வலசை போதலையும் நிர்ணயிக்கின்றன. ஆனால், தற்போது அமெரிக்கக் கடற்படையால் செய்யப்பட உள்ள மாற்றமானது, 18 கார் அளவு உள்ள ஸ்பீக்கர்கள் நீருக்கடியில் ஒலி அலைகளை எழுப்பினால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கும். சில மாதங்களுக்குப் பின்பு பஹாமாஸ் தீவுகளுக்கு அருகில் அமெரிக்கக் கடற்படை இந்த வகை சோனார்களை பரீட்சார்த்த முறையில் சோதனை செய்தது. சோதனையின் சில நாட்களுக்குப் பிறகு 16 திமிங்கலங்கள் திசை தெரியாமல் பஹாமாஸ் தீவுகளில் கரை ஒதுங்கி விட்டன. அவற்றுள் 7 திமிங்கலங்கள் செத்துவிட, மீதம் உள்ளவற்றை தீவுவாசிகள் கடலில் இழுத்துக் கொண்டுவிட்டனர். (ரா.சரவணன்-thinnai.com)

- வலைஞன்

அட!



முந்திரிக்கொட்டை!

சிரஞ்சீவிக்கு ஆசீர்வாதம். உன்னுடைய கடிதம் பெற்றேன். பத்திரிகைகளுக்கு எழுதுவது பற்றிப் பொதுவாக யோசனை சொல்லும்படி கேட்டிருந்தாயானால், எனக்கு மிகவும் சௌகரியமாயிருந்திருக்கும். ஆனால், குறிப்பாகச் சில கேள்விகள் கேட்டிருப்பது கஷ்டம் அளிக்கிறது.

'புனை பெயர் அவசியமா? சொந்தப் பெயரே போட்டுக் கொள்ளலாமா?' என்று கேட்டிருக்கிறாய். தம்பி! தர்ம சங்கடம் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? அப்படி ஒரு நிலைமை உண்டானால் அது இதுதான். இரண்டு தரப்பிலும் சாதக பாதகங்கள் அவ்வளவு நிரவலாயிருக்கின்றன!

சாதாரணமாய், உன்னைப் போல் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பிக்கிறவர்கள் எல்லோரும் முதலில் புனைபெயருடன்தான் ஆரம்பிக்கிறார்கள். ஏன்? முதலாவது அவர்களுக்குத் தங்களிடம் நம்பிக்கையில்லை. எழுதியது நன்றாயிருக்குமோ இல்லையோ என்று சந்தேகம். இரண்டாவது, பத்திரிகாசிரியர்களிடம் நம்பிக்கையில்லை. கட்டுரை நன்றாயில்லாதிருந்த போதிலும் அவர்கள் இடத்தை நிரப்புவதற்காக வெளியிட்டு விடுவார்களோ என்ற பயம். மூன்றாவது, தங்களைச் சுற்றியுள்ள பந்துக்கள், சிநேகிதர்களிடம் நம்பிக்கையில்லை. சொந்தப் பெயருடன் கட்டுரை வந்துவிட்டால், அவர்கள் அசூயை நோக்குடனே அதைப் பார்ப்பார்கள் என்றும், நன்றாயிருந்தாலும் சொல்லமாட்டார்களென்றும் யோசனை.


ஆனால், புனை பெயரில் மட்டும் தொல்லைகள் இல்லையென்கிறாயா? நிச்சயமாய் உண்டு. உன் கட்டுரை புனைபெயருடன் வெளியாகி விடுகிறதென்று வைத்துக் கொள். அதைப் பார்த்தவுடன் உன் மனம் துடிதுடிக்கிறது. அந்த சந்தோஷத்தை எல்லாரிடமும் சொல்ல வேண்டுமென்று தவிக்கிறாய். முதலில் உன் சிநேகிதனிடம் அவசரமாய்ச் சென்று, "ராமு, விகடனில் 'முந்திரிக்கொட்டை' எழுதியிருக்கிற கட்டுரையைப் படித்தாயா?" என்று கேட்கிறாய். "ஆமாண்டா, போடா! எவன் எவனோ எழுதுகிறதையெல்லாம் யார் படித்துக் கொண்டிருக்கிறது?" என்று அவன் சொல்கிறான். அப்போது உனக்கு எப்படி இருக்கும்? அவனைப் படிக்கச் செய்ய வேண்டுமானால் "முந்திரிக்கொட்டை யார் தெரியுமா? நான்தான்!" என்று தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உனக்குத் தெரிந்தவர்கள் கட்டுரையைப் படித்துப் பாராட்டாவிட்டால், அதை எழுதியதுதான் என்னத்திற்கு?

இதைவிட நெஞ்சைப் பிளக்கும்படியான இன்னொரு நிலைமை ஏற்படக்கூடும். வெளியில் சிநேகிதர்கள் எல்லாரிடமும் தெரிவித்துவிட்டு வீட்டுக்கு வருகிறாய். உனது ஸஹோதரி மணி குதூகலத்துடன் ஓடி வந்து, "இன்று விகடனில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ரொம்ப நன்றாயிருக்



கிறது" என்று சொல்கிறாள். உன் நெஞ்சு துடிக்கிறது. "யார் எழுதின கட்டுரை?" என்று கேட்கிறாய். "வேடிக்கையான பெயர்! 'முந்திரிக்கொட்டை' என்று ஒருவர் எழுதியிருக்கிறார்!" என்கிறாள். உடனே பரவசமடைந்து போகிறாய். வந்த கடிதத்தை எடுத்துக் காட்டி, நீதான் எழுதியது என்று நிரூபித்து விடுகிறாய். பலன் என்ன? அவள் சந்தோஷப்படுகிறாளா? நீ எதிர்பார்த்த பரிசையளிக்கிறாளா? ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக அவள் முகத்தில் கோபம் கொதிக்கிறது. அது துயரமாக மாறுகிறது. கண்ணில் நீர் ததும்புகிறது. கலகலவென்று பொழிகிறது. விம்மி விம்மி அழத் தொடங்குகிறாள்.

அரை மணி நேரம் அவளைச் சமாதானம் செய்து, அழுகை ஒருவாறு நின்ற



பிறகு, "முந்திரிக்கொட்டை என்று ஏன் பெயர் வைத்துக் கொண்டீர்கள்?" என்கிறாள். உன்னுடைய தவறு என்னவென்று அப்போதுதான் உனக்குப் புலனாகிறது. அழகான சொந்தப் பெயரைப் போட்டுக் கொள்ளாமல் போனோமே என்று அப்போது பச்சாதாபப்படுவதில் என்ன பயன்?

சிரித்துக் கொண்டே, "அதை யார் எழுதினது? சொல் பார்ப்போம்" என்கிறாய். எவ்வளவோ சாடைமாடையாய்க் குறிப்பிட்டுக் காட்டியும் பிரயோசனமில்லை. கடைசியாக, "நான்தான்" என்று தெரிவித்துக் கொள்கிறாய். "ஆமாம்! நீங்கள் எழுதிப் புரட்டலையா?" என்கிறாள் உன் மனைவி. வாழ்க்கையில் இதைவிடச் சோகரஸம் பொருந்திய கட்டம் வேறு என்ன இருக்க முடியும்!

பத்திரிகாசிரியரிடமிருந்து உனக்கு

- அமரர் கல்கியின்
'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து...
வானதி பதிப்பகம்

கொண்டாட்டத்திலிருக்கிறார் இயக்குனர் பேரரசு. 'திருப்பாச்சி'யின் ஹிட்டுக்குப் பிறகு, மீண்டும் விஜய்யை வைத்து 'சிவகாசி' வெடி வெடித்துக் கொண்டிருப்பவர், அடுத்ததாக படம் பண்ணப் போவது ஏவி.எம் நிறுவனத்துக்கு. ஹீரோ, அஜீத். படத்தின் டைட்டில் 'திருப்பதி'.



அஜீத் வெற்றிக்கு



"'சிவகாசி' ஷூட்டிங்கிலிருக்கும்போது திடீர்னு சரவணன் சார் கூப்பிட்டார். படபடப்போடு போனேன். 'அஜீத்தை வைத்து ஒரு படம் பண்ணலாமா'ன்னு கேட்டார். அந்த நொடியில எனக்குள்ளே உருவான சந்தோஷத்தை அளவிடவே முடியாது. 'ஓகே சார். கதை எங்கிட்ட ரெடியாயிருக்கு'ன்னு அந்த இடத்திலேயே கதை சொன்னேன். அவருக்கும் கதை பிடிச்சுப் போச்சு" என்று உற்சாகமாய் பேசத் தொடங்கினார் பேரரசு.

"அஜீத் லோயர் மிடில் க்ளாஸ் வாலிபராக நடிக்கிறார். நட்பை மையமாக வைத்துக் கதை பண்ணியிருக்கேன். ஷாலினியின் அப்பா என் நண்பர். இந்த பழக்கத்தில் அஜீத்தும் என் நீண்ட நாள் நண்பர். கதையைக் கேட்டவுடன், 'சேர்ந்து கலக்குவோம்'னு உற்சாகமானார். எதெல்லாம் அவருக்கு மைனஸாக இருந்ததோ, அதையெல்லாம் நீக்கினோம். கடுமையான உடற்பயிற்சி, டயட் மூலம் ஒரே மாதத்தில் 18 கிலோ எடையைக் குறைத்தார் அஜீத்" என்கிற பேரரசு, 'திருப்பதி'யிலும் குத்துப் பாடல்களை வழங்கப் போகிறாராம். இசை - பரத்வாஜ்.

"குத்துப் பாடல்கிறது ஏழை பாழைங்க துள்ளலாட்டம் போட்டு ரசிக்கிற ஒரு விஷயம். திருட்டு வி.சி.டியில் படத்தைப் பார்க்காமல், தியேட்டருக்கு வருகிறவர்கள் அவர்கள்தான்" என்றவரிடம், 'தங்கர்பச்சானுக்கும் உங்களுக்கும் சண்டையா?' என்றால் முகம் மாறுகிறது.

" 'ஆட்டோகிராஃப்', 'காதல்' படங்கள் பார்த்து நானும் ஏங்கியிருக்கேன். ஆனா மசாலா படங்களினால்தான் அதிக பணப் புழக்கம் ஏற்படும். 'திருப்பாச்சி' படத்தை எந்தவொரு ஹீரோவும் ஹீரோயினும் திட்டியிருந்தால் கூட, சகஜமாக எடுத்துக் கொள்வேன். ஆனால், ஒரு

இயக்குனர் இன்னொரு இயக்குனரை விமர்சிக்கக் கூடாது. பிரபல இயக்குனரான தங்கர்பச்சான், வளர்ந்து வரும் என்மீது கல் வீசுவது என்ன நியாயம்?'' என்று ஆதங்கப்பட்டார்.

தமது படங்களில் எந்தக் கவிஞர்களுக்கும் வாய்ப்புத் தராமல் அனைத்துப் பாடல்களையும் இவரே எழுதி விடுகிறார்.

"நான் கவிதைகள் மீது அளப்பரியாத ஆர்வம் கொண்டவன். எனது கவிதைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது. ஏதோ ஆரம்பிச்சான், விட்டுட்டான்னு சொல்லக் கூடாதுன்னுதான் சிவகாசியிலும் தொடர்கிறேன். 'திருப்பதி'க்குப் பிறகு,



விஜய் வாழ்த்து!

மற்ற கவிஞர்களுக்கு வாய்ப்புத் தருவேன்'' என்கிறார்.

"எல்லாம் சரி, அஜீத் படம் பண்ணுவதால் உங்களை விஜய் கோபித்துக் கொள்ளவில்லையா?'' என்று தூண்டில் போட்டால், "வாய்ப்பே இல்லை. எல்லோரும் நினைக்கிற மாதிரி அஜீத்தும் விஜய்யும் போர் முனையில் நிற்கிற எதிரிகள் கிடையாது. என்னிடம் ஒரு நாளும் அஜீத் பற்றி ஒருவார்த்தை கூட விஜய் தவறாகவோ, ஏளனமாகவோ பேசியது கிடையாது. 'திருப்பதி' படம் புக் ஆனவுடன் எனக்கு முதலில் வாழ்த்துச் சொன்னது விஜய்தான். 'அண்ணா, கிளப்புங்கண்ணா... திருப்பதி, திருப்பாச்சி, சிவகாசியை விட பெரிய அளவுல ஹிட் ஆகணும்'னு கைகுலுக்கி மனதாரப் பாராட்டினார்'' என்று மத்தாப்பு பதிலொன்றை நம்மீது வீசினார் பேரரசு.

- ச.ந.கண்ணன்



• பேரரசு

கலகல...



"உஷ்! அழாதே!"

மெகா சீரியல் அழுகைகளின் பாதிப்புகளுக்கு சிகிச்சையளிக்கும் ஸ்பெஷலிஸ்ட் 'க்ரை'ன்காலஜிஸ்ட் டாக்டர் மெகாலட்சுமி, வாசகிகளின் கேள்விகளுக்கு எழுதிய பதில்கள்.

? டாக்டர்! பிறந்த குழந்தை எவ்வளவு நேரம் அழும்!

! சில பெண் குழந்தைகள் மூனு மெகா தலைமுறைகளுக்குத் தொடர்ந்து அழும்.

? 'கண்ணீரும் கம்பலையுமாக' என்கிறார்களே, கம்பலைன்னா என்ன அர்த்தம்?

! தெரியாதும்மா. 'கண்ணீரும் பொம்பளையுமா'ன்னுதான் நான் கேள்விப்பட்டிருக்கேன்.

? மெகா சீரியலிலே அழுறவங்க ஏன் மருந்துக்குக் கூட சிரிக்கறதில்லே?

ஜே.எஸ்.ராகவன்

! 'அழுத மூஞ்சி சிரிச்சுதாம். கழுதைப் பாலைக் குடிச்சுதாம்'னு யாரானா கேலி செஞ்சுட்டா?

? சிரிச்சா மனசு லேசாகுது. அழுதா கனமாகுது. பின்னே ஏன் அழுகையையே கட்டிண்டு அழுறாங்க?

! மொத்த யூனிட்டோட பர்ஸும் கனமாகுதே! அதான்.

? மெகா சீரியல் நடிகைகள், மெரீனாவில் ஒன்னா சேர்ந்தா என்ன செய்வாங்க?

! 'ஹாஹா தெரபி' ஆளுங்க குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கற மாதிரி, ஒரு பாட்டம் குலுங்கிக் குலுங்கி அழுவாங்க.

? மூசுமூசுன்னு அழுறதுக்கும், விக்கி விக்கி அழுறதுக்கும், விசும்பி விசும்பி அழுறதுக்கும் வித்தியாசம் இருக்கா?

! கதறிக் கதறி அழுறதை விட்டுட்டீங்களே! அப்படி ஒண்ணும் விசேஷமா இல்லை. ஆனா மெகா சீரியல் தர்மப்படி, வெள்ளிக்கிழமைகள்ல இதில் ஒண்ணை யாவது செய்றது விசேஷம்.

? 'அய்யங்கார் வீட்டு அழுகை'ன்னு பாட்டு இருக்கா?

! அழகுதான்! சீரியல் அழுகையில விடாம முழுகினா, இப்படித்தான் காதுல தப்பா விழும்.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33. போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 17 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்
நல்லாசியுடன்

சுவாமி ஸ்ரீ அம்பிகானந்தா

A.ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் என்று மூன்று விஷயங்களைக் குறிப்பிடுகிறோம். உண்ண உணவு; உடுக்க உடை; இருக்க இடம். வாழ்க்கையில் மனிதனுக்கு இவையெல்லாம் புறத் தேவைகள். இவை தவிர அகத் தேவைகளும் மனிதனுக்கு உண்டு. அவைதான் மன அமைதி; அதன் மூலம் கிடைக்கிற சந்தோஷம். அது கிடைக்கிற போதுதான் ஒரு மனிதன் 'தனக்குள் மகிழ்ந்து' வாழ முடியும்.

அந்த மன அமைதியும், சந்தோஷமும் வேறு எங்கேயோ இல்லை. நமக்குள்ளேயே இருக்கின்றன. இதை விளக்குவதற்குத்தான் பணக்காரர் ஒருவருடன், ரயிலில் பயணம் செய்த திருடனின் கதையைச் சொன்னேன்.

இந்த சமூகத்தில் 'பெரும் வெற்றி பெற்ற மனிதர்' என்று அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு மனிதரையும் சந்தித்து, உங்களது வெற்றி, உங்களுடைய வாழ்க்கையில் மன அமைதியை, திருப்தியை அளித்திருக்கிறதா? என்ற கேள்வியைக் கேட்டால், உடனடியாக 'ஆம்!' என்ற பதில் வராது. பெற்ற வெற்றி தொடர வேண்டுமே என்கிற டென்ஷன், தோல்வி அடைந்து விடுவோமோ என்கிற பயம், எல்லாம் அவர்கள் தலையில் பெரும் சுமையாக எந்த நேரமும் அழுத்திக்கொண்டே இருக்கும்; இதனைச் சமாளிப்பதற்கு, பல்வேறு விதமான வழிமுறைகளைக் கையாண்டு பார்க்கிறார்கள். ஆனால், எதுவுமே முழுமையான தீர்வாக அமைவதில்லை.

அமைதி என்பது நமக்குள்ளேயே இருக்கிறது என்பதே பலருக்குத் தெரிவதில்லை. தெரிந்திருந்தாலும், அதை அடையும் வழி என்ன என்பது தெரிவதில்லை. அறிஞர் பிளேட்டோ, இன்னும் ஒருபடி மேலே சென்று, "மனிதர்கள் 'உண்மை' என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவே பயப்படுகிறார்கள்" என்று சொல்லிவிட்டார்.

மன அமைதியும் சந்தோஷமும் கைவருவது ரொம்ப சுலபம் என்கிறது பகவத்கீதை.

பகவத்கீதை சொற்பொழிவுகளின் போது, என் முன்னால், அரங்கத்தில் பல நூறு பேர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களே... இவர்களில் எத்தனை பேருக்கு, உண்மையிலேயே பகவத் கீதையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் இருக்கும் என்று நான் நினைப்பதுண்டு.

"ஓ! பகவத்கீதையா! அது என்னைப் போன்ற இளைய தலைமுறையினருக்கு இல்லை. என் பெற்றோர்களுக்குக்கூட இல்லை. தாத்தா, பாட்டி வேண்டுமானால் கேட்பதற்குப் போகட்டும்" என்று பல இளைஞர்கள் இந்தப் பக்கமே வருவதில்லை.

"ஞாயிற்றுக்கிழமை மாலை. வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, டி.வி.யில் சினிமா பார்ப்பதற்கு பதிலாக, பகவத் கீதை கேட்டால் ஒரு மாறுதலாக இருக்குமே என்று சிலர் வருகிறார்கள். பகலில்

டென்ஷன் இல்லாத மகிழ்ச்சி!


சுனந்தாஜி

கொளுத்தும் வெயிலில் கஷ்டப்பட்டதற்கு மாலையில், ஏ.சி. அரங்கில், ரிலாக்ஸ்டாக கீதை சொற்பொழிவு கேட்கலாமே என்று வருகிறவர்கள் சிலர்.

'பகவத்கீதை' கேட்பதை ஒரு ஃபேஷனாக நினைக்கிறவர்கள் சிலர்.

ரிடையர் ஆகிவிட்ட காரணத்தால், இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு வருவதைக் கடமையாக நினைப்பவர்கள் சிலர்.

குழந்தைகள், இருட்டுக்கு பயந்தால் அதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால், இன்றைய உலகில் சோகம் என்னவென்றால், பெரியவர்கள் வெளிச்சத்தைப் பார்க்கவே பயப்படுகிறார்கள். பகவத்கீதையா? அது நமக்கில்லை என்று நினைப்பவர்களை இப்படித்தான் என்னால் ஒப்பிட முடிகிறது.

பிரகாசமான விளக்குகளால் ஒளியூட்டப்பட்ட ஹாலில், கண்களை இறுக மூடிக்கொண்டுதான் நான் நடப்பேன் என்று பிடிவாதமாய் நடந்து சென்று, சுவர் மீது முட்டிக் கொள்பவர்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்? அறியாமை காரணமாய் பகவத்கீதை என்ற ஒளிவிளக்கை, தங்கள் வாழ்க்கையில் ஒளி வீசச் செய்துகொள்ளத் தெரியாமல், இருட்டில் தவிப்பவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். பகவத்கீதை, வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை எடுத்துச் சொல்லுகிறது.


"வாழ்க்கை அனுபவிப்பதற்குத்தான் அதனால்தான் என் இஷ்டப்படி வாழ்கிறேன். வாழ்க்கையை அனுபவிக்கிறேன்' என்று சொல்பவர்கள் நிறையப் பேரை நாம் பார்க்கிறோம். ஏதோ தங்கள் அனுபவம்தான் மகிழ்ச்சியின் 'மேக்ஸிமம்' என்று இவர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிற, அனுபவித்துக் கொண்டிருக்கிறதைவிட மேம்பட்ட அனுபவங்களை, சந்தோஷத்தைப் பெற முடியும் என்பது இவர்களுக்குத் தெரியவில்லையே!

> **"இரண்டு வாரம் லீவு வேணும். ஏதாவது ஒரு மலைவாசஸ் ஸ்தலத்துக்கும், ஒரு கோயிலுக்கும் போய்விட்டு வரப் போகிறேன்"**

ஒரு பிஸியான நண்பர், "கடந்த ஆறு மாதங்களாக ஆபீசில் கடுமையான வேலை" என்கிறார். "ஒவ்வொரு புராஜெக்ட்டையும், அதற்குரிய கெடுவுக்குள் முடிப்பதற்குள் அப்பாடா என்று ஆகிவிட்டது. ஒரு புராஜெக்ட்டை வெற்றிகரமாய் முடித்துவிட்டு, நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டால், அடுத்த புராஜெக்ட் ஆரம்பித்துவிடும். அதைக் குறிப்பிட்ட காலத்துக்குள் முடித்த கையோடு, இன்னொன்றைக் கையில் கொடுத்து விடுவார்கள். இரவில் படுத்துத் தூங்கினாலும், கனவில் புராஜெக்ட்டும், அது சம்பந்தப்பட்டவர்களும் வந்து விடுவார்கள். இந்த புராஜெக்ட்டை முடித்தவுடன் கண்டிப்பாய் இரண்டு வாரம் லீவு வேணும். ஏதாவது ஒரு மலைவாசஸ் ஸ்தலத்துக்கும், ஒரு கோயிலுக்கும் போய்விட்டு வரப் போகிறேன் என்று முன்னாலேயே கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். அந்த நாளை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்பார்.

இந்த நண்பரைப் போல இன்று நம் நாட்டில் ஏராளமானவர்கள், ஆண்டுக்கு ஒரு தடவை ஆபீஸ் வேலைகளிலிருந்து தங்களை விடுவித்துக்

கொண்டு குடும்பத்துடனோ, நண்பர்களுடனோ 'ஹாலிடே டூர்' போவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் மேற்கத்திய கலாசாரத்தின் பாதிப்புதான்.



வழக்கமாய்ச் செய்கிற ஒன்றை, செய்யாமல் இருந்தால் அது ஒருவித சந்தோஷம் என்று நம் மனம் நினைக்கிறது. அப்படியே வருஷத்துக்கு ஒரு தடவையோ, இரண்டு தடவையோ, சில தினங்கள் போகிற 'ஹாலிடே டூர்' ஜாலியாக இருந்ததா?' என்று அவர்களைக் கேளுங்களேன்.

"ஓ! ருட்டீன் வேலைகள் ஏதுமில்லாமல் இருந்தது பெரிய ரிலீஃப்!" என்று பாசிடிவ்வாக ஆரம்பித்தாலும், அந்த ஹாலிடேயின்போது பட்ட சிரமங்களை அடுத்து பட்டியல் போட ஆரம்பித்து விடுவார்கள். அல்லது 'ஹாலிடே' செலவுக் கணக்கை ஒப்புவிப்பார்கள்.

வருஷம் முழுக்கக் கடுமையாய் உழைத்து, பணம் சம்பாதித்து, அதிலிருந்து 'ஹாலிடே'வுக்குச் செலவழித்து, அப்படியும் சந்தோஷமும், திருப்தியும் கிடைக்கவில்லை என்றால், அது எவ்வளவு பெரிய சோகம்!

இதுவும் ஒருவித அறியாமை! நம்மைப் பற்றி நாமே முழுமையாகத் தெரிந்து கொள்ளாத அறியாமை! பகவத்கீதை, நம்மை இந்த அறியாமை என்ற இருட்டிலிருந்து விடுவித்து, மன அமைதி, மகிழ்ச்சி என்ற வெளிச்சத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறது.

மன அமைதியை, மகிழ்ச்சியை, வருடத்துக்குச் சில தினங்கள் மட்டுமே என்று ரேஷன் எதுவும் இல்லாமல், வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் அனுபவிக்கச் செய்கிறது கீதை.

இந்த மகிழ்ச்சி, சங்கின் முழக்கம் போல நம் உள்ளுக்குள்ளிருந்து இடைவிடாமல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆனால், அது உலகின் இரைச்சல் மிகுந்த இயந்திரகதி வாழ்க்கை காரணமாக நம் காதுகளில் விழுவதில்லை. அப்படியே விழுந்தாலும், நமது புத்தி "ஹலோ! நண்பா! உனக்குள்ளே இருந்து ஒலிக்கிறதே அந்தச் சங்கொலியைக் கவனி!" என்று கவனத்தை ஈர்த்தாலும், நம் மனது, அதனை விலக்கிவிட்டு, தன் பாதையில், இயந்திர கதியில், நமக்கு வெளியில் சந்தோஷத்தைத் தேடிக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் வாழ்க்கை என்ற தடை ஓட்டப்பந்தயத்தில் வெற்றிகரமாய்த் தாண்டிக் குதித்து ஓடுவதற்கு பதிலாக, தட்டுத் தடுமாறுகிறோம்; நிலை குலைந்து விழுந்து விடுகிறோம்.

விழுந்தவர்கள் மறுபடி எழுந்திருக்க என்ன வழி?

(வெற்றி தொடரும்)

படம்: ஸ்ரீஹரி



சண்டைக் கோழி!

நான்கு டாப் ஸ்டார்களுக்கு ஜோடியாக (விஜய், விக்ரம், அஜீத், சூர்யா) நடித்துக் கொண்டிருக்கும் அஸினுக்கு இன்று தென்னிந்தியா முழுக்க ஏராளமான விசிறிகள். இது போதாதென்று, வெளிநாட்டு ரசிகர்களையும் வலைத்துப் போட இணையதளம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளார். இவரது அப்பா ஜோசப், பிஸினஸ்மேன். அம்மா செலின், டாக்டர். டி.வியில் டாம் & ஜெர்ரி கார்ட்டூனை விரும்பிப் பார்க்குமாம் இந்தக் குழந்தை. தமது சொந்த பூமியான கேரளாவை விட்டு இவர் மனம் என்றுமே அகன்றதில்லை. ஷூட்டிங்குக்காக எங்கெங்கோ சென்றாலும் இவரின் நாட்டமெல்லாம் கேரள மண் மீதுதான். யாராவது இவரை 'புஜ்ஜு' என்று கிண்டல் செய்தால் பார்ட்டி சண்டைக்கோழியாகி விடுவாராம். நயன்தாராவுடன் ஏற்கெனவே இவர் சண்டைக் கோழியாக இருப்பது ஊரறிந்த விஷயம்.

தமது வீட்டின் படுக்கையில் புரண்டுகொண்டே அரபிக் கடலை ஜன்னல் வழி தரிசிப்பது அம்மணியின் அட்டகாசமான பொழுது போக்கு. 'நீதானே ரஜினியோட அடுத்த ஹீரோயின்' என்று பார்ப்போரெல்லாம் தற்போது இவரைக் கேட்டு வருவதை, ரொம்பப் பெருமையாகக் குறிப்பிடுபவர், "ரஜினிஜி, ஷங்கர்ஜி என்ன நினைக்கிறாங்கன்னு தெரியல. திறமை, லக் இருந்தால் எல்லாமே நடக்கும்" என்று புன்னகைப் பூப்பூக்கிறார்.

- எழில்



தப்பில்லை ஆனால்...

ம.மாறன்

மாதவனுக்கு எரிச்சலாக இருந்தது. கிளம்பி நேரே நண்பன் கன்னியப்பன் வீட்டுக்கு வந்துவிட்டான். வீட்டில் அவன் இல்லாததால், மொட்டை மாடிக்குச் சென்று காத்திருந்தான். மனது திரும்பவும் மனைவி மாலதியை நினைத்து வெறுப் படைந்தது.

'வேலைக்குப் போகிறாளாம்... அதனால் வீட்டு வேலைகளை நானும் பகிர்ந்து செய்ய வேண்டுமாம்... அவள் பாத்திரம் தேய்த்தால், நான் சமைக்க வேண்டுமாம்... அவள் துணிக்கு சோப்பு போட்டால், நான் அலச வேண்டுமாம்.. சட்டம் பேசுகிறாள்... எல்லாம் படித்ததால் வந்த கர்வம்!'

மாலதியை மனதுக்குள் பொரிந்தவனின் பார்வை யதேச்சையாக எதிர் மாடிக்குச் செல்ல, அங்கே கண்ட காட்சி ஒரு நிமிடம் அவனை உசுப்பியது. ஒரு வயதானவர் பக்கெட்டிலிருந்து துணிகளை எடுத்துக் கொடியில் காயப்போட்டுக் கொண்டிருந்தார். எல்லாம் லேடீஸ் துணிகள். புடைவை, ஜாக்கெட், உள்பாவாடை, எக்செட்ரா அயிட்டங்கள்.

'ஒரு ஆம்பளை... அதுவும் வயதான மனிதர் பொம்பளை துணியைத் துவைத்துக் காயப் போடுகிறார்' என்கிற விஷயத்தை மாதவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. அவரிடம் கேட்டே விட்டான்...

"ஏன் பெரியவரே, உங்க வொய்ஃப் துணியையெல்லாம் நீங்க துவைச்சு காயப் போடறீங்களே... உங்களுக்குக் கூச்சமா இல்ல...?"

திடீரென்று குரல் வந்ததும் பார்வையைச் சுழற்றி, மாதவனின் மீது நிறுத்திய அந்த வயதானவர், "யாருப்பா நீ?" என்றார்.

"நான் இந்த வீட்ல குடியிருக்கற கன்னியப்பனோட சிநேகிதன். அதை விடுங்க, நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க..."

"தம்பி, மனைவி துணியை துவைக்கிறதுல என்ன தப்பு இருக்கு சொல்லு? அம்மா துணிய துவைக்க நீ கூச்சப்படுவியா? உனக்கு இன்னொரு அம்மாதாம்பா பொண்டாட்டியும்..."

அவரின் பதில் மாதவனை என்னமோ செய்ய, சட்டென்று கிளம்பி வீட்டுக்குச் சென்று விட்டான்.


தொடர்ந்து அந்தப் பெரியவர் துணி காயப் போட்டுக் கொண்டிருக்க, மாடியேறி வந்த பக்கத்து வீட்டு சதாசிவம், "என்ன சுந்தரம், அந்தப் பையன்கிட்ட தப்பில்லன்னு என்னமோ சொல்லிட்டிருந்தீங்க போலிருக்கு..." என்றார்.

"நான் ஒண்ணும் தப்பா சொல்லல சதாசிவம், மனைவி துணியை துவைக்கலாம், தப்பில்லை... ஆனா என்னைய மாதிரி கடைசிக் காலத்துல வயித்துப் பாட்டுக்காக மருமக துணியைத்தான் துவைச்சிப் போடக் கூடாது..." - சொல்லிக்கொண்டே போன சுந்தரத்தின் கண்களில் மெல்லிய நீர்ப்படலம். ○

"உங்களுக்கு அல்சராமே...?"

"அந்த வயித்தெரிச்சலை ஏன் கேக்கறீங்க!"

- மா. கண்ணன்





"மாமியாரை சேர்த்த அதே ஆஸ்பத்திரியில மருமகளையும் கொண்டு வந்து சேர்த்துட்டாங் களாமே... என்ன விஷயம்?"

"மாமியாரைக் கொட்டின தேளைத் தடவிக் கொடுத் தாளாம்!"

- வி. சாரதிடேச்சு

பிழைச்சாலும் கஷ்டம்!



"உங்க மாமியார் பிழைக் கறது ரொம்பக் கஷ்டம்மா!"

"பிழைச்சாலும் கஷ்டம் தான் டாக்டர்!"

- லீலாஜி



"உங்க மாமியாருக்கு இதயத்துல ஓட்டை இருக்குது!"

"விளையாடாதீங்க டாக்டர்... என் மாமியாருக்கு இதயமே கிடையாது!"

- ராம் ஆதிநாராயணன்

"உங்களுக்குச் சனியோட பாதிப்பு ரொம்ப இருக்கு... பரிகாரம் பண்ணணுமே..."

"அதான் அப்பப்ப புடைவை, நகையெல்லாம் வாங்கித் தரேனே...!"

- எம்.ஆர். மூர்த்தி





"என் பையனைக் கடத்தினவன் ஒரு லட்ச ரூபாய் கேட்டு மிரட்டறான்!"

"போலீஸுக்குப் போக வேண்டியதுதானே?"

"போனோம். அவங்க அதுக்கு மேலே எதிர்பார்க்குறாங்க!"

- லீலாஜி

"உங்க கிட்னில கல் இருக்கு!"

"ராசிக்கல்னா விட்றலாம் டாக்டர்!"

- அம்பைதேவா





● கோடம்பாக்கத்திலிருந்து 'கோடம்பாக்கம்' என்ற பெயரிலேயே ஒரு படம். படத்தின் ஹீரோ நந்தா, உதவி இயக்குனராக இருந்து, இயக்குனராக மாறுகிறார். நந்தாவின் 'ரூம்' ஒரு உதவி இயக்குனரின் அறையைப் போல யதார்த்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக, கோடம்பாக்கம் முழுவதும் சுற்றி, நூறு உதவி இயக்குனர்களின் ரூம்களை ஹேண்டிகேம் கேமராவில் படம் பிடித்து, அதைக் கொண்டே செட் போட்டிருக்கிறார் கலை இயக்குனர் ஆர்.கே. விஜய்முருகன்.

● ஹீரோவுக்கு சினிமா இயக்குனர் வேடம் என்பதால், படத்தின் டிஸ்கஷன், பாடல் கம்போசிங், ரெக்கார்டிங், ஸ்கிரிப்ட் ஒர்க் என அனைத்திலும் கலந்துகொண்டு, தம்மை அந்த கேரக்டராகவே மாற்றிக் கொண்டுள்ளார் நந்தா. தவிர எதிர்காலத்தில் தாமும் படம் டைரக்ட் பண்ண வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டதாம்.

● கோடம்பாக்கம் படத்தின் ஃப்ளாஷ்பேக் முழுவதும் மேட்டூர் அருகேயுள்ள நாவல்பட்டி கிராமத்தில் நடக்கிறது. ஹீரோ நந்தா, ஹீரோயின்கள் நியா, தேஜாஸ்ரீ, கூலிக்கு ஒப்பாரி பாடும் கலைராணி உள்ளிட்ட அனைத்துப் பாத்திரங்களும் யதார்த்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக, அந்த கிராமத்து மக்கள் பயன்படுத்திய உடைகளையே வாங்கி இவர்களுக்கும் பயன்படுத்தியுள்ளனர். அதே கிராம மக்களைக் கூப்பிட்டு டப்பிங்கும் பேச வைத்திருக்கிறார்கள்.

ரெடி... டேக்... காசு



● படப்பிடிப்புக்காக நாவல்பட்டி கிராமத்
அந்த கிராமத்துக்கே இலவசமாகக் கொடுத்
பாளர்கள்.

● கதையைக் கேட்டு பாராட்டிய சுரே
படத்தை எடிட் செய்து கொடுத்திருக்கிறார்

● "கோடம்பாக்கம் படம் வெளியான
மீது பொதுமக்களுக்கு மரியாதை கூடு
உண்மைக் கதை. அவன் வாழ்க்கையை
எடுத்திருக்கிறேன். உதவி இயக்குனருக்குள்
உள்ளது உள்ளபடி காட்டும் இந்தக்
உலுக்கும்" என்று சொல்லும் படத்தி
சேரனின் தலைமைச் சீடர். முதல் பட
யதார்த்தத்தின் கைப்பிடித்து ஜெயித்து
இன்னொரு பாலாஜி சக்திவேல்?!



ல்!

ல் கட்டிய நிஜ வீட்டை,
விட்டார்களாம் தயாரிப்

் அர்ஸ், இலவசமாகவே

பிறகு, திரைத்துறையினர்
இது என் நண்பனின்
திரிக்காமல் அப்படியே
காதல் சாத்தியமா என்பதை,
கதை, தமிழ் ரசிகர்களை
ன் இயக்குனர் ஜெகன்ஜி,
த்தின் தோல்விக்குப் பிறகு
காட்டியது போல, இவரும்

தொகுப்பு: ஸ்ரீ



அருள்வாக்கு

நீ ஒரு டாக்டரா? தவிர்க்க முடியாமல் சில பேர் 'ஸிக் லீவ்' கேட்கிறபோது, நீ பொய் ஸர்ட்டிஃபிகேட் தரும்படி ஆகியிருக்கலாம். இப்படியே பொய்யாக 'மெடிகல் ஃபிட்னெஸ் ஸர்ட்டிஃபிகேட்'டும் சில பேருக்குக் கொடுத்திருப்பாய். இதனாலெல்லாம் ஆத்மா சுத்தி பெறாதது மட்டுமில்லாமல், அதில் புது அழுக்கும் படிந்திருக்கும். த்யாக ஸேவைதான் இந்த அழுக்கை அலம்பிவிட முடியும். ஆகையால் தினமும் ஒரு ஏழைக்காவது இனமாக வைத்யம் பண்ணு.

நீ யாரப்பா? வக்கீலா? ஸரி. மாஸத்துக்கு ஒரு கேஸாவது தர்ம நியாயமுள்ளதாகப் பார்த்து, தகுந்த பாத்திரத்துக்காக ஃப்ரீயாக நடத்து.

நீ ஒரு ஸங்கீத வித்வான் என்றால், தர்மக் கச்சேரி பண்ணி ஒரு பணிக்குப் பணம் வசூலாக உதவலாம். எழுத்தாளனானால் ஸமய ஸ்தாபனங்களுக்காக ஸத் விஷயங்கள் கொஞ்சம் இலவசமாக எழுதிக் கொடுக்கலாம். புஸ்தக பப்ளிஷர் என்றால் ஏழை மாணவர்களுக்குப் புஸ்தகங்கள் இலவசமாகத் தரலாம்;

''நான் ரொம்பவும் ஸாதாரணப்பட்ட டைப்பிஸ்ட் ஆச்சே!'' என்கிறாயா? பரவாயில்லை. உன்னாலும் தொழில் ரீதியில் மற்றவர்களை விடவுங்கூட அதிகமாகவே பரோபகாரம் பண்ண முடியும். உத்யோகமில்லாமல் எத்தனை ஏழைப்பசங்கள் திண்டாடுகிறதுகள்? அவர்களில் ஆறு மாஸத்துக்கு ஒரு பையன் வீதம், ஓரளவு 'ஒர்க்கிங் நாலெட்ஜ்' பெறுகிற மாதிரி டைப் அடிக்க ட்ரெயின் பண்ணு. இந்த உதவியை இனாமாகப் பண்ணு. இதனால் அவர்களுக்கு ஆயுள்காலம் பூராவுக்கும் ஜீவனோபாயம் கிடைக்க வழி ஏற்படும். அவர்களுடைய நன்றியும் வாழ்த்தும், உன்னை இம்மையிலும் மறுமையிலும் ரக்ஷிக்கும்.

கார்யத்தால், திரவியத்தால் ஒன்றுமே பண்ண முடியாவிட்டாலும், குறைந்த பக்ஷம் திருமூலர் சொன்னாற்போல், ''யாவர்க்கும் இன்னுரை'' என்றபடி ப்ரியமாகப் பேசிக் கஷ்டத்தில் ஆறுதல் தருகிற உதவியையாவது பண்ணுங்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

ஸ்ரீ டிராவல்ஸ்

கோவையில் எமது கிளை அலுவலகம்: எண்.52,
ராஜ வீதி, (CEO அலுவலகம் எதிரில்) கோவை - 641 001.
போன்: 0422-3950482, 5537299 Fax: 2307961

தலைமை அலுவலகம் 194 - A. 2வது மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph: 55345081, 55345082, 55345083, 28516799 E-Mail:sritrave@satyam.net.in Web:www.sreetravels.com

ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அருமையான விடுமுறை கால சிறப்பு சுற்றுலாக்கள்

30.09.05 - சென்னை - டெல்லி - அமிர்தசரஸ் - சண்டிகர் - குலு - மணாலி - ஜம்மு - வைஷ்ணவி - ஆக்ரா - சென்னை - 13 நாட்கள் ரூ.6900 + ரயில் டிக்கட்

21.10.05 - முழுமையான ராஜஸ்தான் சுற்றுலா - 11 நாட்கள் - ரூ.8,900/-

25.10.05 - நேபாளம் - முக்திநாத் - காசி - கயா யாத்திரை-12 நாட்கள் - ரூ.7000/- + 12,500/- முக்திநாத் ஹெலிகாப்டர் பயணத்துடன்

25.10.05 - கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - ரூ.7500/- 10 நாட்கள்

25.10.05 - பூரி - புவனேஷ்வர் - காசி - கயா - அலகாபாத் - ரூ.4500/-

வாராந்திர விடுமுறை நாட்களுக்கான பிரத்தியேக இரண்டு நாள் சுற்றுலாக்கள்

இரண்டு நாட்களுக்கு அருமையான தங்கும் வசதிகள் மற்றும் (சைவ உணவுடன்)
1) ஊட்டி - ரூ.1500/- 2) பொள்ளாச்சி - டாப்ஸிப் - மூணாறு - ரூ.1500/-
3) குருவாயூர் - அத்திரப்பள்ளி நீர்வீழ்ச்சி - கொச்சி - சோட்டானிக்கரை - மலப்புழா - ரூ. 1500/- 4) பழனி - கொடைக்கானல் - ரூ.1500/-

மேற்கண்ட சுற்றுலாக்கள் மட்டுமின்றி தேன் நிலவுச் சுற்றுலாக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பிரத்தியோக சுற்றுலாக்களும் ஏற்பாடு செய்து தரப்படும்.

உங்கள் பயணத்தை உடனே உறுதி செய்யுங்கள்.



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
"ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகாஸ்தானம்"
29-30 கிழக்கு ஐய்யன் தெரு, கும்பகோணம் - 612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdps'imu


☎ Off : (0435) 5532239
Fax : 2425948
Patasala : 5532238, 2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பெருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 463 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாம்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 200 மாணவர்களுக்கு 17 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்ஸுக்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் **ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகா ஸ்தானம்** என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு	நன்கொடை தொகை	நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund"
நன்கொடை திட்ட விபரங்கள்		
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 8,000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஒரு ஸமாராதனைக்கு [Please choose one specific day of a particular month in a year for Samaradhana]	Rs. 1,500	Rs. 25,000
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 2 Lakhs

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D/ Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

உளவியல் தொடர்கதை



முயலும் ஆமையும் கலந்துகொண்ட ஓட்டப் பந்தயம் தொடங்கியது.

பாதி தூரம் சென்றதும் முயல் திரும்பிப் பார்த்தது. வெகு தூரத்துக்கு அப்பால் பின்னால் வந்து கொண்டிருந்தது ஆமை.

''என்ன முயலாரே, தூக்கம் வருகிறதா?'' என்று கிண்டலாகக் கேட்டது சிட்டுக் குருவி.

1

"அட, சின்ன வீடா இருந்தாலும் அழகா இருக்கு." பார்க்கும் பலரின் ஒருமித்த கருத்து இப்படித்தான் இருந்தது.

வீட்டின் சௌந்தர்யத்துக்கு முக்கியக் காரணம், அதன் வடிவமோ உள்ளமைப்போ அல்ல. அவற்றில் இல்லாத தனிச்சிறப்பை, அந்த இல்லத்தைச் சுற்றியிருந்த பசுமை அரண் அதற்கு அளித்துக் கொண்டிருந்தது.

அந்த வீட்டு முன் வந்து நின்றது ஒரு டாக்ஸி. மூவரும் இறங்கினார்கள். பின்னர் ஓட்டுனரும் வெளிப்பட்டார்.

பேன்ட்டிலிருந்து பர்ஸையும், அதிலிருந்து கரன்ஸி நோட்டு களையும் வெளியே எடுத்தான் ராஜன்.

"இது நான் பேசின தொகை. சரியா? இந்த ரெண்டு நாளும் நீங்க காட்டின பொறுமைக்காக அதிகப்படியா இந்த நூறு ரூபா. சரியா? கொஞ்சம் இருங்க, கல்யாண பட்சணம் தரேன். வீட்டுக்கு எடுத்துட்டுப் போங்க."

டிக்கியிலிருந்த பெட்டிகளை எடுத்து சரிபார்த்துக் கொண்டிருந்த ஆனந்த், கல்யாண பட்சண பாக்கெட் ஒன்றை எடுத்து ராஜனின் சார்பாக ஓட்டுனரிடம் கொடுத்தான்.

இதற்குள் கையில் இரு சூட்கேஸ்களைத் தூக்கிக் கொண்டு, வீட்டினுள்ளே நுழைந்து விட்டிருந்தாள் அனுஷா.

அவள் உடலும் மனமும் ஒரே காரணத்தினால் நேரெதிராக இயங்கிக் கொண்டிருந்தன. உடலின் ஒவ்வொரு செல்லிலும் களைப்பு. தங்கையின் திருமணத்தை முன்னின்று நடத்திய உழைப்பின் விளைவு. அதே சமயம் கடமையை முடித்த நிறைவில், மனம் ஆனந்தத்தில் ததும்பிக் கொண்டிருந்தது.

உள்ளே நுழைந்தவள், தலையைப் பிடித்துக் கொண்டாள். இலேசான வலி. சட்டென அம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஸ்டூலை இழுத்து பரணுக்குக் கீழே வைத்தாள்.



விலங்குகள்

"இல்லை" என்றது முயல். பாதியில் தூங்கினால் என்னவாகும் என்ற கதை அதற்கும் தெரிந்திருந்தது. முன்னோரின் தவறிலிருந்து கற்ற பாடம். களைப்பைப் பொருட் படுத்தாது தொடர்ந்து ஓடியது.

"அதோ எல்லைக்கோடு." உவகையுடன் அதைத் தாண்டிய கையோடு தூங்கத் தொடங்கியது முயல்.

ஆனால் முயலும் ஆமையும் கடக்க வேண்டிய எல்லைக்கோடு அது அல்ல. சற்றுத் தள்ளியிருந்தது அது.

விரும்பியோ விரும்பாமலோ, தொடர்ந்து பாடங்களைக் கற்கத்தான் வேண்டி யிருக்கிறது.


அருண் சரண்யா

ராஜன் இதற்குள் வந்துவிட்டிருந்தான்.

"என்ன, உங்கம்மா போட்டோவைப் பார்க்கணும் அவ்வளவுதானே? நானே எடுத்துத் தரேன். சரியா?"

பதிலை எதிர்பார்க்காமல் முக்காலியில் ஏறிவிட்டிருந்தான்.

அனுஷா வியந்தாள். 'எப்படித்தான் தன் மனதை இவ்வளவு துல்லியமாகப் படித்துவிடுகிறானோ! கூடவே 'முக்கியமான ஒரு விஷயத்தைத் தவிர' என்ற இணைப்பு



வாக்கியமும் மனதில் தோன்றியது.

புகைப்படத்தில் அம்மாவின் இருபுறங் களிலுமாக ஏழு வயது அனுஷாவும், ஐந்து வயது ஸ்ரீலதாவும் நின்று கொண்டிருந்தனர். பார்க்கும் யாருக்குமே அந்த வித்தியாசம் சட்டெனப் புலப்படும் - மூவருக்குமிடையே இருந்த கணிசமான இடைவெளி.

அப்பா இறந்து ஒரு மாதம் கழித்து எடுத்துக்கொண்ட புகைப்படம். ஏற் கெனவே பல்வேறு காலகட்டங்களில் எடுத்துக் கொண்டவையெல்லாம் அப்பா வோடு சேர்ந்து தீயில் எரிந்துவிட்டன.

அப்பாவின் பென்ஷன் கணக்கை வங்கியில் துவக்க, அம்மா புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. புகைப்படக்காரர் குடும்ப நண்பரும் கூட. ஒரே ஒரு ஃபிலிம்தான் கேமராவில் அப்போது மீதமிருந்தது.

"அம்மாவுக்கு மட்டும்தான் போட் டோவா?" என்றாள் குழந்தை ஸ்ரீ.

புகைப்படக்காரர் சமாளித்தார். "மூணு பேருமே கொஞ்சம் இடைவெளி விட்டு நில்லுங்கம்மா. அப்புறம் ப்ரிண்ட் எடுக்கும் போது கட் செய்து தனித்தனியா இருக்கும் படி காப்பி போட்டுடறேன்."

புகைப்படம் எடுக்கப்பட்ட ஆறே வருடங்களில் அம்மாவின் உயிரும் பிரிந்து விட்டது. மாரடைப்பு. "பொதுவாக நடுத்தர வயதைத் தாண்டாத பெண்களுக்கு மாரடைப்பு வருவதில்லை" என்று எங்கோ படித்திருக்கிறாள். ஆனால் அம்மாவுக்கு ஏன் மாரடைப்பு வந்தது? காரணம் புரியவில்லை. வேறொன்றிற்கும் காரணம் புலப்படவில்லை.

இந்தப் புகைப்படத்தை ஒரு சின்னப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி வைத்திருந் தாள் அம்மா. அவ்வப்போது எடுத்துப் பார்ப்பாள். "இது எனக்குப் புதையல் மாதிரி" என்பாள். "எனக்குப் பின்னால உனக்கும் இது பலதைப் புரியவைக்கும்" என்பாள். சற்று இடைவெளிவிட்டு "இதைத் தொலைச்சுடாதே" என்பாள்.

எந்தப் புகைப்படமுமே பல வருடங் களுக்குப் பிறகு பார்க்கும்போது அதிர்வு களை ஏற்படுத்தும்தான். ஆனால் எதற்காகப் 'புதையல்... புரியவைக்கும்' என்று அம்மா மிகைப்படுத்தி என்னென்னவோ கூற வேண்டும்?

"அம்மா, என் கடமையை நான் செய் துட்டேன். ஸ்ரீக்குக் கல்யாணம் முடிஞ் சிடுச்சு அவளை அவ புருஷன் வீட்டிலே விட்டுட்டு வந்திருக்கேன். சந்தோஷ மாம்மா?" கேட்கும்போது கண்ணீர் வழிந் தது.

ஸ்ரீ ரொம்ப தைரியமாக இருந்தாள். கணவன் வீட்டில் விட்டுவிட்டு வரும்போது கூட அவள்தான் அனுஷாவை சமாதானப் படுத்தினாள்.

"எதுக்கு அக்கா இப்போ அழுகை? பத்து ரூபா கொடுத்தா ஆட்டோவிலே வந்துடக் கூடிய தூரத்திலேதானே இருக்கோம்.



மெடிக்கல் மூலை!

ஜலதோஷத்திற்கான புதிய சாக்லெட் மருந்து ஒன்றை லக்னோவிலுள்ள NBRI எனும் ஆராய்ச்சி நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இந்த மூலிகை மருந்து அச்சு அசல் சாக்லெட் போலவே சுவையாக இருக்குமாம். விலைகூட கிட்டத்தட்ட சாக்லெட் போலவேதானாம். அட இனிப்பான செய்திதான்!

-Rx

எனக்கு அருமையான ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்திருக்கே. அப்புறமா என்ன? சந்தோஷமாப் போயிட்டு வா'' என்றவள், எதிர்பாராதவிதமாகத் தன் கணவரைக் கூப்பிட்டாள். ''என்னங்க, நீங்களே வந்து என் அக்காவை சமாதானப் படுத்துங்க. 'உங்க தங்கையை நான் கண்கலங்காம வச்சுக் காப்பாத்துவேன். கவலைப்படாதீங்க'ன்னு சொல்லுங்க.''

அருகில் நெருங்கிய கார்த்திக் அனுஷாவைப் பார்த்துச் சிரித்தான். வேறொன்றும் பேசவில்லை. தங்கையின் அருகில் கார்த்திக்கைப் பார்த்தபோது மீண்டும் அந்த எண்ணம் வேகமாக வந்து போனது. "தங்கையின் சிவப்பு கலருக்கும், களையான முகத்துக்கும் மாப்பிள்ளை சில மாற்று கம்மி தானோ?". தப்பு, இனி அந்த எண்ணம் வரக் கூடாது. தவிர அவன் வரதட்சணை இல்லாமல் தங்கையைத் திருமணம் செய்து கொண்ட டாக்டர்.

''அக்கா, தங்கை ரெண்டு பேருமே டாக்டர் மாப்பிள்ளைகளைப் பிடிச்சுட்டீங்களே, பலே பலே.'' பலரும் கூறிவிட்டார்கள். வாழ்த்தா? குறும்பா? இரண்டுமோ?

எப்போது அறைக்குள் வந்தோம், எப்போது படுக்கையில் விழுந்தோம், எப்போது தூங்கத் தொடங்கினோம் என்பது எதுவும் புலப்படவில்லை. ஆனால் விழிப்பு வந்தபோது இரவு மணி இரண்டு இருக்கும் என்று யூகிக்க முடிந்தது.

சட்டென எழ நினைத்தபோது முடியவில்லை. ராஜனின் வலக்கை அவள்மீது அழுத்தமாக விழுந்திருந்தது. வியர்த்துக் கொட்டியது. அதேநேரம் தொலைபேசி ஒலித்தது.

ராஜன் சட்டென எழுந்தான். சிறு ஒலிபோதும் அவனை எழுப்பிவிட.

''ராஜன்தான் பேசறேன். புரியுது, சொல்லுங்க... என்னது? அப்படியா? இதோ இப்பவே வரேன்.''

வெகுவேகமாக உடைமாற்றிக் கொண்டான். ஷூவில் காலை நுழைத்தபடியே "அனுஷா, நான் கொஞ்சம் உடனடியாகப் போகணும். நம்ம ப்ரார்த்தனாவுக்கு உடம்பிலே அடியாம். ஏதோ விபத்து. பாவம் கர்ப்பம் வேறே. என் உதவி உடனடியாகத் தேவைப்படுது. கதவைத் தாப்பா போட்டுக்க. ஆனந்திடமும் சொல்லிட்டுப் போறேன். ரெண்டு மணி நேரத்திலே வந்துடுவேன்.''

அடுத்த இரு நிமிடங்களில் ராஜன் மாடிக்கான அழைப்புமணியை அழைப்பதும், ஆனந்த் கீழிறங்கி வருவதும் கேட்டது. இருவரும் எதையோ பேசினார்கள்.

''ஆமாம் ஆனந்த். நான் உடனடியாகப் போக வேண்டியிருக்கு. கீழே அனுஷா தனியா இருக்கா. கொஞ்சம் பார்த்துக்க.''

''இந்த ராத்திரியிலா போகப் போறீங்க? நானும் வரேனே.''

''நோ. எனக்கு எந்த பயமுமில்லே. இந்த அத்துவானப் பகுதியிலே அனுஷாதான் தனியா இருக்கா. நீ அவளுக்குத் துணையா இரு போதும்.''



மோட்டார் பைக்கைக் கிளப்பும் சத்தம் கேட்டது.

ஆனந்த் உள்ளே நுழைந்தான். "என்னக்கா, உங்களைவிட ப்ரார்த்தனா முக்கியமாப் போயிடுச்சே உங்க ஹஸ் பெண்டுக்கு?" என்றான் கிண்டலாக.

தன்னையும் ஒரு சிம்பன்ஸிக் குரங்கையும் ஒப்பிடுகிறானே! அனுஷா சங்கடப் பட்டாள்.

(தொடரும்)

உலகம் இவ்வளவுதான்!

53 வயதுக்

வலேரி ஃபெடோடோவ். வயது 53. இவர் ஒரு மாடு மேய்ப்பவர். ரஷ்யாவிலுள்ள யரோஸ்லாவ் எனும் ஒரு மூலையில் சென்ற வாரம் வரை மிக நிம்மதியாக வாழ்ந்து வந்தவர். எழுதப் படிக்கத் தெரியாது. வெளியுலகம் தெரியாது. தன் குட்டி ஊரைவிட்டு இதுவரை வெளியில் காலடி வைத்தது கிடையாது. இவர் அதிகமாக யோசிப்பது இரண்டு விஷயங்களைப் பற்றித்தான். ஒன்று புல்லுக்கட்டு, மற்றொன்று புண்ணாக்கு. இப்பொழுது நிலைமையே தலைகீழ். ரஷ்யப் பத்திரிகைகள், முதல் பக்கத்தில் கட்டம் கட்டி இவரைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சியைத் திருகினால் இவர் முகம்தான். எல்லோரும் இவரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யப் பத்திரிகைகள், முதல் பக்கத்தில் கட்டம் கட்டி இவரைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன.

சரி, அப்படிப் பெரிதாக இவர் என்னதான் செய்துவிட்டார்? ஒரு குட்டி ஃப்ளாஷ்பேக். ஒருநாள் வலேரிக்கு உடம்பு சரியில்லாமல் போனது. மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். அங்கிருப்பவர்கள் இவரிடம் கேட்ட முதல் கேள்வி: 'நீங்கள் யார்?' 'இதென்ன, உடம்பு சரியில்லையென்றால் பெயரைக் கேட்கிறார்களே' என்று, தயங்கித் தயங்கி தன் பெயரைச் சொல்லியிருக்கிறார் வலேரி. 'ம்ஹூம், வலேரி என்ற பெயரில் யாருமே இல்லை' என்று கம்ப்யூட்டர் கைவிரித்து விட்டது. 'சரி உங்க ஐடி கார்டு கொடுங்க' என்றதும் 'அப்படின்னா என்ன?' என்று வாயைப் பிளந்திருக்கிறார் வலேரி.

அவ்வளவுதான்... காவல்துறையினர், பாஸ்போர்ட் அதிகாரிகள், இன்ஷூரன்ஸ் ஆட்கள் என்று ஒட்டுமொத்தமாக வலேரியை மொய்த்து விட்டனர். தோண்டித் துருவி நிறையக் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். முடிவில் அவர்கள் கண்டுபிடித்தது இதைத்தான். வலேரி பிறந்ததற்கான எந்த சாட்சியமும் பதிவேடுகளில் கிடையாது. ஐ.டி. கார்டு இல்லை. பாஸ்போர்ட் கிடையாது. பள்ளிக்கூடத்தை மறந்தும் மிதிக்காதவர் என்பதால், சான்றிதழ்களும் இல்லை. சுருக்கமாகச் சொல்வதானால் 'ஆஸ் பெர் அஃபீஷியல் ரிக்கார்ட்ஸ்' வலேரி எனும் மனிதன் பிறக்கவேயில்லை!

'அய்யய்யோ, இதென்ன வம்பாப் போச்சு. நான் பொறந்து 53 வருஷமாச்சு. உங்க முன்னாடிதான் கல்லு மாதிரி நிக்கறேன். இன்னும் பொறக்கவே இல்லைன்னு சொல்றீங்களே!'




குழந்தை!

என்று மெய்யாகவே அலறியிருக்கிறார் வலேரி. என்ன செய்வது என்று யோசித்த அதிகாரிகள், அப்போதைக்கு அவருக்கு சிகிச்சையளித்துவிட்டு பிறகு அப்படியே வலேரியை அள்ளித் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். எதற்குத் தெரியுமா? பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு இவரைப் பற்றிய விவரங்களை அனுப்பி வைக்கப் போகிறார்கள். பதிவேடுகளில் இவரது பெயரைப் புதிதாகச் சேர்க்கப் போகிறார்கள். 53 வருடங்கள் கழித்து கையைக் காலை உதைத்துக்கொண்டு 'முறைப்படி' பிறக்கப் போகிறார் வலேரி!

'என்ன வலேரி, புது ஐ.டி எல்லாம் வரப்போகுதாம். சந்தோஷம்தானே?' என்று அவர் கையைப் பிடித்து இழுத்து குலுக்குகிறார் ஒரு பத்திரிகையாளர். 'கங்ராஜுலேஷன்ஸ்! நீங்க அஃபீஷியலா பொறந்துட்டீங்க. சரி சரி ஸ்வீட் எங்கே?' என்று அவர் கன்னத்தைப் பிடித்துச் செல்லமாக ஒரு திருகு திருகுகிறார் ஒரு வயதான அரசாங்க அதிகாரி. 'இத்தனை வருஷமா ஐ.டி கார்டு இல்லாம எப்படி ஐயா இருந்தீங்க?' என்று கண்களை விரித்து ஆவல் பொங்கக் கேட்கிறார் ஒரு கொண்டை வால் தொகுப்பாளினி. ஒரு பெரிய கேமரா வலேரியைச் சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டிருக்கிறது. என்ன சொல்வது என்று தெரியாமல், திருதிருவென்று விழித்துக் கொண்டிருக்கிறார் வலேரி. புல்லுக்கட்டு, புண்ணாக்கு வரிசையில் வலேரிக்கு யோசிப்பதற்கு புதிதாக மற்றொரு சங்கதியும் சேர்ந்திருக்கிறது.

அது சரி, 'ஆஸ் பெர் அஃபீஷியல் ரிக்கார்ட்ஸ்' வலேரிக்கு இப்பொழுது என்ன வயது? ஒன்றுதானே!

\- மருதன்



• தூங்கு ராஜா... தூங்கு...

விடியங்காத்தால நாலு மணிக்கெல்லாம் களைகட்ட ஆரம்பிச்சுடுதுப்பு சென்னை கோயம்பேடு பஸ் ஸ்டாண்டு. மூட்டை முடிச்சுகளோட கிராமத்தான் கெட்டப்புல பஸ்ஸை விட்டு இறங்கினவுடனேயே, "இந்தாப்பா நாட்டுப்புறம்... எங்கே போவணும்... நான் கொண்டு போயி எறக்கிவிடுறேன்"னு ஏகப்பட்ட ஆட்டோக்காரங்க நச்சரிக்க, "வடபழனி போவணும்"னு சொன்னதுதான் தாமதம்...

"அடேயப்பா... அவ்ளோ தூரமா... ரொம்ப சந்து ரூட்டு... நூத்தியிருபது ரூபா ஆவும்... உனக்காக நூறு ரூபா... வா... ஏறிக்க"ன்னு ஃபிலிம் காட்ட, "வேணாம்பு... அம்புட்டு காசு கைல இல்ல"ன்னு சொல்லிட்டு உள்ளே போயிட்டேன். பாத்தப்பு... புத்திசாலித்தனமா நடந்துக்க... இல்லன்னா, ஆளையே வித்திருவானுவ!

கடலூர் - சிதம்பரம் வண்டிங்கள்லாம் நிக்கற இடத்துக்குப் பக்கத்துல ஒரு டிரைவரு பஸ்ஸுக்கு முன்னால பாயைப் போட்டு, சும்மா கும்முனு தூங்கிக்கிட்டு இருந்தாரு... நான் வெத்தலை போட்டு முடிக்கவும், அவரு எழுந்திருக்கவும் சரியா இருந்துச்சு. நைஸா பேச்சுக் கொடுத்தேன்.

"ஆமாப்பு... ரெண்டு நாளா தொடர்ந்து டிரிப்பு அடிக்கிறேன். டயர்டா இருந்துச்சு. அதான் பாண்டிச்சேரில சரக்கை வாங்கி, இங்க வந்து ஏத்திக்கிட்டுப் படுத்துட்டேன். அப்பத்தானே அடுத்த டிரிப்பை நல்லபடியா அடிக்கலாம்...!"

"ஏம்ப்பு... நீங்க மட்டுந்தான் இப்படியா, இல்ல..."

"அட... கண்டக்டரு பின்னால தூங்குறாரப்பு... எல்லா பஸ்லயும் முன்னாடியும் பின்னாடியும் இப்படித்தான்... நாங்க என்ன எங்களுக்காகவா அடிக்கறோம்...?"

"ஆமாமா"ன்னு சொல்லிட்டு நகர்ந்து, அங்க இருந்த கடைகள்ல பிஸ்கட் பாக்கெட்டு, கூல்டிரிங்ஸ் விலைகளை விசாரிச்சேன். வெளில ஆறு ரூபா விக்குற மிரின்டா, இங்க எட்டே ரூவாக்கு சும்மியா கிடைக்குதப்பு! இந்த மாதிரிதான் எல்லாப் பொருளும் ரொம்ப விலை குறைச்சல்!

சிட்டுகளின்

காலைல வந்து நின்ன சில பஸ்ஸுங்க நைட்டுதான் கிளம்புமாம். அப்படி நிக்குற ஒரு பஸ்ஸுக்குள்ள எட்டிப் பார்த்தா, ஜோடி ஒண்ணு உட்கார்ந்து சுவாரஸ்யமா பேசிக்கிட்டு இருந்துச்சு. டீக்கடைக்கார அண்ணாச்சிகிட்ட என்ன ஏதுன்னு விசாரிச்சேன்.

"இந்த மாதிரி நிறைய பஸ்ஸுல சிட்டுங்க உட்கார்ந்திருக்கும். கோயம்பேடுதான் அதுங்களுக்குப் புகலிடம். ஊரை வுட்டு ஓடியாந்ததுங்க சிலவும் இப்படி உள்ள வந்து உட்காந்துடுங்க... சில டிரைவர், கண்டக்டருங்க அடிச்சு வெரட்டு வாங்க. கொஞ்சம் பேரு





அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போயிடுவாங்க. நீ எப்படி?''ன்னு அண்ணாச்சி நம்மள பார்த்து கண்ணடிக்க,

''அது இருக்கட்டும், இந்த மாதிரி நைட்டு வேற எதுனா நடக்குதா?''ன்னு கேட்டுக்கிட்டே ''ஒரு ஸ்ட்ராங் டீ போடுங்க''ன்னேன்.

''அது வேற மாதிரி... தரையெல்லாம் ரொம்ப வசதியா இருக்குதுன்னு சில காலேஜ் பசங்க கும்பலா வந்து தண்ணியடிப்பானுங்க.. கூலி வேலை பாக்குற பசங்க வந்து சீட்டுக் கச்சேரி நடத்துவானுங்க... சில பயலுங்க பொண்ணுங்களையும் கூட்டிட்டு வந்துடுவானுங்க... அப்பப்போ போலீஸ் ரெய்டுக்கு வரும்... கொஞ்ச நாளு எதுவும் இருக்காது... அப்புறம் பழையபடி ஆரம்பிச்சுடும்''னு 'தண்ணி'யக் கொடுத்தார். கொஞ்ச நேரம் அவருகிட்ட பேசிட்டிருந்துட்டு, லோக்கல் பஸ் நிக்குற இடத்துக்கு வந்தேன். நல்லா வசதியா உட்கார கட்டை கட்டி வச்சிருக்காங்களேன்னு உட்கார்ந்தேன். தரையில ஒருத்தரு படுத்துத் தூங்கிக்கிட்டு இருந்தாரு... ''பார்ட்டி தூங்குதுன்னு அசால்ட்டா இருந்துடாத... சைக்கிள் கேப்புல உம் பார்சலை அடிச்சுட்டுக் கிளம்பிடுவாங்க''ன்னு சைடுல இருந்து ஒரு குரல்!

திரும்பினா, ''ஆமா... இந்த மாதிரி சைடுல படுத்துத் தூங்கற மாதிரி நடிப்பானுங்க.... நிமிஷத்துல பொட்டியைத் தூக்கிட்டு ஆட்டோல பறந்துடுவானுங்க... ஜாக்கிரதை''ன்னு பாசக்கற பய ஒருத்தன் சொல்லிட்டு நகர, கௌம்புன பஸ்ல தொத்திக்கிட்டு புறப்பட்டுட்டேன்.

- ஒற்றன்

விசிட்

பகலிடம்!



சில வருடங்களுக்கு முன்பு, நான் ஒரு திட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, திருமணமான பெண்கள் அதில் பணிபுரிந்தார்கள். எல்லோருமே கிட்டத்தட்ட ஒரே மாதிரி பின்னணியிலிருந்து வந்தவர்கள். ஒரே வயதும்கூட.

மதிய உணவு இடைவேளையின்போது, அவர்கள் தங்கள் சொந்த சமாசாரங்களை வாய்விட்டு, உரத்த குரலில் பேசிக் கொள்வார்கள். அவை எந்த முயற்சியும் இல்லாமல் என் காதில் விழும். நீதா, கீதா, குஸுமா, நீலா என்று பலர் வளவள என்று பேசுவார்கள். நீதா அத்தனை பேசுவது கிடையாது. அவர்களிடமிருந்து எந்தப் புகாரும் எனக்கு வந்ததில்லை. 'பாஸிடிவ்' சமாசாரங்களே பேசுவார்கள்; அதிலும் நீதாவின் சிந்தனை, அணுகுமுறை பற்றி எனக்கு எப்போதும் திருப்தியும், மகிழ்ச்சியுமாக இருக்கும்.

"என் மாமியார் என்னைப் படுத்துகிறாள் உனக்கு எப்படி?" என்று நீலா கேட்டால், "என் மாமியார் எனக்கு அம்மா மாதிரி இருக்கிறாள்!" என்பாள் நீதா.

"என் நாத்தனார் ஒரே பொறாமைக்காரி. உன் நாத்தனார் அப்படித்தானா?" என்று குஸுமா கேட்டால், "ரொம்ப நல்ல மாதிரி. நாங்கள் சகோதரிகள் போலத்தான் இருக்கிறோம். ஒளிவு மறைவு என்பதே கிடையாது!" என்பாள்.

உள்ளங்கையில் உலகம்!



ஒருநாள் நீதா ஒரு பிங்க் நிற சேலை அணிந்து என் அறைக்கு வந்தாள். அதைப் பாராட்டுகிற மாதிரி தமாஷாக, "உன் சேலை பிரமாதம் நீதா. எங்கே வாங்கினாய்? இன்றைக்கு உன் பிறந்தநாளா என்ன?" என்று கேட்டேன்.

"ஆமாம் அம்மா. என் கணவரின் பிறந்தநாள் பரிசு இது" என்றாள் நீதா வெட்கத்துடன்.

ஒருநாள் நீதா முகம் வாடிக் காணப்பட்டாள். நீலா காரணம் கேட்டாள். "கிரீஷ் ஊரில் இல்லை. வீட்டில் எத்தனையோ பேர் இருந்தாலும் நான் தனிமையை உணர்கிறேன்!"

அவர்கள் எல்லோருமே வேலை பார்க்கும் பெண்கள். வீட்டில் கணவன் இருந்தாலும், வீட்டு வேலையைப் பகிர்ந்து கொள்வதில்லை, குழந்தைகளின் வீட்டுப் பாடத்தில் பங்கெடுத்துக் கொள்வதில்லை, வீட்டிலும் வேலை, அலுவலகத்திலும் வேலை...

என்று சொல்லுவார்கள்.

ஆனால் நீதா மட்டும், அவள் மாமனார் குழந்தைகளின் வீட்டுப் பாடத்தில் உதவுவதாகவும், கணவர் சமையல் அறையில் கூடமாட உதவுவதாகவும் சொல்வாள்.

அவர்கள் எல்லோருக்கும் நீதா ஓர் அதிர்ஷ்டக்காரப் பெண்; உலகின் எட்டாவது அதிசயம். சாவித்திரி கவிதை எல்லாம் எழுதுவாள். அவள், 'நீதாவின் குடும்பம் மட்டும் தான் உலகிலேயே எந்தக் குறையும் இல்லாத குடும்பம்' என்பாள்.

அவர்கள் எல்லோருக்கும் ஏதாவது ஒரு வகைக் குறை இருந்து வந்தது.

சுதா மூர்த்தி

டானிக் தொடர் 5

அதிர்ச்சி தந்த வளர்ப்பு!



பல வருடங்களுக்குப் பிறகு எனக்கு நீதா போன் செய்தாள்.

"அம்மா, நான்தான் நீதா. பல வருடங்களுக்கு முன்னால் நான் உங்களிடம் பணிபுரிந்திருக்கிறேன். இப்போது இங்கேதான் இருக்கிறேன்" என்றாள். ஒரு சின்ன இடைவெளி. எத்தனையோ பேரைப் பார்ப்பதால் சட்டென்று நீதாவின் நினைவு வரவில்லை. பிறகு மெல்ல அவள் பெயர் நினைவுக்கு வந்தது.

"உன்னை எப்படி மறக்க முடியும் நீதா, நீதான் மிஸஸ் பர்ஃபெக்ட் ஆச்சே?" என்று விளையாட்டாகச் சொன்னேன்.

"அம்மா, நான் உடனே உங்களைப் பார்க்க வேண்டும். இப்போதே வரட்டுமா? கொஞ்சம் நேரம் ஒதுக்க முடியுமா?" அவள் குரலில் கவலை தெரிந்தது; மகிழ்ச்சி தெரியவில்லை.

"சரி" என்றேன். நீதா என் அலுவலகத்துக்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்து விட்டேன். அவள் சிநேகிதிகள் எல்லாம் இளமையிலிருந்து படிப்படியாக முதுமையை நோக்கிப் போனார்கள். இவளோ, இளமையிலிருந்து ஒரே தாவாகத் தாவி முதுமை அடைந்து விட்டவள் போலக் காணப்பட்டாள். மெலிந்து போயிருந்தாள்; தலைகூட நரைத்திருந்தது. அவளுடைய சிநேகிதிகள் பற்றிப் பேச்சு ஆரம்பித்த



• முருகேஷ்

மலையாளத்தில்....

கவிஞர் மு.முருகேஷ் எழுதிய தமிழ் ஹைக்கூ கவிதைகள், கீழ்வேளூர் எல்.பி.சாமியின் மொழி பெயர்ப்பில் மலையாளத்தில் நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது.

போதும், அவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்றுகூட அவளுக்குத் தெரியவில்லை. அவர்களுடன் எனக்கு இருந்த தொடர்புகூட அவ்ளுக்கு இருக்கவில்லை. நீலா தன் மாமியாருக்கு உடல் நிலை சரியில்லை என்றதும், தன் வீட்டிலிருந்து வந்து விழுந்து விழுந்து உபசாரம் செய்தான். குஸுமாவின் நாத்தனார் அத்தனை துன்புறுத்தினாளே அவளை, கடைசியில் குஸுமாதான் அவளுக்கு உதவ வேண்டி வந்தது. கீதாவின் கணவர் தலைகீழாக மாறி விட்டார்! மனைவிக்கு எல்லா உதவியும் செய்கிறார்.

வாழ்க்கை ஒரு சக்கரம் என்பது சரிதான். "நீதா, உன் விஷயத்தில் எந்தப் பிரச்னையுமே உனக்கு இருக்கவில்லையே? உன்னுடைய குடும்பம் சிறந்த குடும்பமாய் இருந்ததே?"

என் பேச்சு அவளை உற்சாகப்படுத்தவில்லை. முகம் வாடிப்போய்த்தான் இருந்தாள் நீதா.

"நான் வசதியாக இல்லை அம்மா. எனக்கு நிறைய பிரச்னைகள்" என்று அழுதே விட்டாள்.

"உனக்கா பிரச்னைகள்?"

"ஆமாம் அம்மா. இப்போதெல்லாம் நான் மனநோய் நிபுணரிடம் சிகிச்சை பெறுகிறேன்."

" என் தோல்வியையோ துயரத்தையோ வெளியில் காண்பித்துக் கொள்ள என்னை என்றுமே என் அம்மா அனுமதித்ததில்லை. என் மாமியார், நீலாவின் மாமியாரைவிடப் பொல்லாதவள். மோசமான நாத்தனார். வார்த்தைகளால் ஊசி போலக் குத்தும் கணவர். என் சிநேகிதிகள் வெளிப்படையாக அவர்கள் குடும்பம் பற்றிப் பேசும்போது, அவர்கள் எத்தனை அதிர்ஷ்டசாலிகள் என்று நினைத்துக் கொள்வேன். பலதடவை நானும் என் கஷ்டங்களைச் சொல்ல நினைப்பேன்; ஆனால் என் தாயாரின் வளர்ப்புமுறை என்னைத் தடுத்திருந்தது. என் அம்மா எப்போதும் என் உணர்ச்சிகளை அடக்கிக் கட்டுப் படுத்திக் கொண்டு, எல்லாமே சரியாக இருப்பது போல் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்பாள். நானும் அதே மாதிரி வேஷம் போட்டு நடித்தேன். யாரையும் என் மனதில் என்ன இருக்கிறது என்று அறிய விடவில்லை. நான் எதிர்மறையாக எதையும் பேசாமல் இருந்தேன். என் சொந்த சோகங்களை வெளிப்படுத்தவே இல்லை. அது பலவீனம் என்று எண்ணினேன்."

அவளுடைய தாயாரின் வளர்ப்பு முறை எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

"ஒருமுறை நீங்கள் என் பிங்க் நிற சேலையைப் பாராட்டினீர்கள் அல்லவா? அது என் கணவரின் பரிசு என்று பொய் சொன்னேன்; உண்மையில் அது நானே வாங்கியது. ஒருநாள்கூட என் கணவர்

• நா. அருணாசலம்



தமிழுக்காக!

தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பாக தமிழ் மொழி வரலாறு, தமிழ் இனவரலாறு தொடர்பான கருத்தரங்கை குற்றாலத்தில் தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு நடத்தியிருக்கிறார் நா.அருணாசலம். ஊடகங்களில் தமிழைக் காப்பாற்றும் முயற்சியாக மாதந்தோறும் இது போன்ற கூட்டங்களை நடத்தவிருக்கிறார்கள்.

என்னைப் பாராட்டிப் பேசியதில்லை. அன்பாய் இருந்ததில்லை. அவர் எனக்குச் சமையலறையில் உதவியதில்லை. என் மாமனாரும் பாடங்களில் என் குழந்தைகளுக்கு உதவியதில்லை. நான்தான் கஷ்டப்பட்டேன். இங்கே அலுவலகத்திலிருந்து வீட்டுக்குப் போனதும், குழந்தைகளையும் சமையலறைக்கே வரச் சொல்லி, இரண்டு வேலைகளையும் நல்ல தண்டனை கிடைத்துவிட்டது. என்னுடைய மனநிலை மிக மோசமாயிற்று. என் டாக்டர்தாம் 'உனக்கு வெகு நெருக்கமான, நம்பிக்கையான மனிதரிடம் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்துவிடு' என்றார். அதனால்



புள்ளி விவரப் புலி!

இந்தியாவில் ஹெராயின் உபயோகிப்போரின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போக, அதற்கேற்றாற்போல ஹெராயினை சட்டவிரோதமாகக் கடத்தும் நபர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 2003ஆம் ஆண்டில் மட்டும் 19,280 ஆட்கள் ஹெராயின் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயினின் அளவு எவ்வளவு தெரியுமா? 2002இல் 881 கிலோ. இரண்டே வருடங்களில் இந்த எண்ணிக்கை 1160 கிலோவுக்குத் தாவிவிட்டது.

கவனிப்பேன். என் வாழ்க்கையும், என் பிற சிநேகிதிகள் வாழ்க்கை போலத்தான் இருந்தது. ஏன், மோசமாகக்கூட இருந்தது. ஆனால் அவர்கள் எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசினார்கள். நான் எல்லாமே நன்றாக அமைந்திருப்பது போல் வேஷம் போட்டேன்."

"சரி, பழையதை மறந்துவிடு. இனியாவது மகிழ்ச்சியாக இரு!"

"அம்மா, அப்படி நடித்ததற்கு எனக்கு தான் உங்களிடம் வந்தேன்!"

"மயில் அழகுதான், நீதா. ஆனால் அதனால் அதிக உயரம் பறக்க முடியாது. குயில் கறுப்புதான். ஆனால் அதன் குரல் இனிமையானது. குயில் வெளியே நடனம் ஆடுவதில்லை. மயில் ஒருநாளும் பாட முயன்றதில்லை. என்றைக்குமே பாசாங்கு செய்து, வேஷம் போடுவது கூடவே கூடாது!"

(பேசுவோம்)

GOKULAMS' SPECIAL OFFER ON SUBSCRIPTIONS*



GOKULAM
THE Magazine for Children

Annual Rs.~~96~~/- Rs. 80/- Only

கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!

Annual Rs.~~72~~/- RS.60/-Only

Annual combo pack Rs.~~168~~/- Rs.135 /- Only

English Gokulam 2 Years Rs. ~~192~~/-
Rs.160/- only + 1Tennis ball Worth Rs.20/-FREE!

*Valid upto 30.9.2005

Bharathan Publications Private Limited

KALKI GOKULAM கோகுலம் Mangayar Malar

47.N.P, Jawaharlal Nehru Road, Ekkaduthangal,Chennai- 600 032.



தொடரும் போதை மருந்து அவலம்...

இந்திய வீரர்கள் போதை மருந்து உட்கொண்டு, கையும் களவுமாகப் பரிசோதனையின்போது பிடிபட்டு வருவது, கடந்த சில வருடங்களாக வாடிக்கையான விஷயமாகி விட்டது.



* நீலம்சிங்

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் போது, பளு தூக்கும் வீராங்கனைகளான சானு மற்றும் குமாரி, 2002 பூசான் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தட்கள வீராங்கனை சுனிதா ராணி போன்றவர்களெல்லாம் போதை மருந்து பயன்படுத்தியதற்காகப் பிடிபட்டு, இரண்டு ஆண்டுகள் தடைசெய்யப்பட்ட நிலையில், சமீபத்தில் ஃபின்லாந்தில் நடைபெற்ற உலகத் தடகளப் போட்டியில் வட்டு எறியும் பிரிவில் இடம் பெற்ற இந்திய வீராங்கனையான 34 வயது நீலம்சிங்கும் இதே குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளார். ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில், போதை மருந்து உட்கொண்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டது

...தேசத்திற்குத் தலைகுனிவு!

நீலம்சிங் மட்டும்தான் என்பது நம் தேசத்தையே தலைகுனியச் செய்திருக்கிறது.

சர்வதேச ஒலிம்பிக் ஆணையமும், அத்லெடிக் ஃபெடரேஷன் ஆஃப் இந்தியாவும், ஆளுக்கொரு தடை மருந்துப் பட்டியல்களை வருடா வருடம் வெளியிடுகின்றனர். கூடுதல் ஊக்க சக்தியை அளிக்கும் மருந்துகளை, போதை மருந்துகளாக வகைப்படுத்தி, அவற்றைப் பயன்படுத்தத் தடைவிதித்துள்ளனர்.

இந்தத் தடைசெய்யப்பட்ட மருந்துகளை ஒரு வீரர் உட்கொண்டால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? 'இந்தியாவைப் பொறுத்தவரை, இதெல்லாமே கண் துடைப்பு வேலைதான்' என்கிறார்கள், விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள்.

''இந்தியாவிலேயே டெல்லியில் மட்டும்தான் போதை மருந்துப் பரிசோதனைக்கான லேப்கள் உள்ளன. அதுவும் ஒரு வீரரின் ரத்தத்தையோ, யூரினையோ பரிசோதனை செய்வதற்கு ஐந்தாயிரம் ரூபாய் செலவாகிறது. இதனால் வீரர்களைப் பயமுறுத்துவதற்காக மட்டுமே சாம்பிள்கள் வாங்கப்படும். மற்றபடி அதை முழுவதுமாகப் பரிசோதிக்காததால் தான், இங்கு பிடிபடாதவர்கள் சர்வதேசப் போட்டிகளில் மாட்டிக் கொள்கின்றனர். தேசிய அளவிலான போட்டிகளின் போது கூட, ஒரு சில ஈவன்ட்களில் பங்கு பெறும் வீரர்களுக்கு மட்டும்தான் போதை மருந்து டெஸ்ட் வைப்பார்கள்'' என்றார் இந்தியாவின் முன்னணி தடகளப் பயிற்சியாளரான நாகராஜன்.

சில பகீர்த் தகவல்களை நம்மிடையே தைரியமாகப் பகிர்ந்து கொண்டார், தேசிய அளவில் ஜாவலின், டிஸ்க் த்ரோ போட்டிகளில் பதக்கம் வாங்கியுள்ள ஜெயந்தி.

''மைதானத்துலேயே அனைவர் முன்பும் போதை ஊசி போட்டுக்கொண்டு, போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்களைப் பார்த்திருக்கேன். இது போலச் செய்து கொண்டிருந்த இந்தியாவின் நெ.1 குண்டு எறிதல் வீரரிடம் 'ஏன் உடம்பையும் விளையாட்டையும் பாழாக்குகிறீர்கள்?' என்று கேட்டதற்கு, 'எல்லோரும் ஒருநாள் சாகத்தான் போகிறோம். அதுவரைக்கும் பேரோடும் புகழோடும் இருக்க வேண்டாமா? நீயும் போதை மருந்தைப் பயன்படுத்தி பெரிய ப்ளேயராகு. இந்த நாட்டில் இதையெல்லாம் யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள்' என கூலாகப் பேசினார்'' என்று கூறி நம்மை அதிரவைத்தார் ஜெயந்தி.



• பயிற்சியின்போது ஜெயந்தி...

இதையெல்லாம் கண்டும் காணாமல் இருக்கிறார்களா இந்திய விளையாட்டுத் துறை அதிகாரிகளும் பயிற்சியாளர்களும்? ''இங்கே சுயநலம்தான் முதன்மை பெறுகிறது. விளையாட்டு கேம்ப்புகள் பெரும்பாலும் வட இந்தியாவில்தான் நடைபெறுகின்றன. இதற்கென்று வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இங்கே இரண்டு விதமான சிக்கல்கள் உண்டு. வெளிநாட்டுப் பயிற்சியாளர், வீரர்களின் திறனைக் கூட்டி ரிசல்ட் தருவிக்க வேண்டும். அதேபோல் போட்டிகளில் பதக்கங்கள் வென்றால்தான் மத்திய, மாநில அரசுகள் விளையாட்டுக்கென்று கூடுதல்

நிதியை ஒதுக்கும். இதையெல்லாம் கணக்கில் வைத்து, சில வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் போதை மருந்துகளை அயல்நாட்டிலிருந்து கொண்டு வந்து, நம் வீரர்களுக்கு வலுக்கட்டாயமாகப் பழக்கப்படுத்தி விடுகின்றனர். யார் எக்கேடு கெட்டாலும் சரி, அவர்களுக்குத் தேவை ரிசல்ட், அரசின் நிதி உதவி'' என்றார் முகம் காட்ட மறுத்த மூத்த விளையாட்டு வீரர் ஒருவர்.



• நாகராஜன்

விளையாட்டுத் துறை மருத்துவரான ராஜேந்திரன், "சென்ற முறை சென்னையில் நடந்த நேஷனல் மீட்டின் போது, டாய்லெட்டில் ஏராளமான போதை மருந்து ஊசிகள் கிடந்ததைப் பார்த்தேன். இவற்றால், உடல்ரீதியாகப் பெரும் பாதிப்புகள் ஏற்படும். பெண்களென்றால் முடி உதிரும். குரல், ஆண் குரலாக மாறி விடும்" என்றார்.

"அது மட்டுமல்ல... எனக்குத் தெரிந்து இரண்டு அத்லெட்கள் இதனால் உண்டான பாதிப்புகளால் திருமணமே செய்து கொள்ளவில்லை. ஒரு பெண் அத்லெட் இதனால் இறந்து போனதாகவும், 'இன்னொரு அத்லெட்டுக்கு நீல கலரில் குழந்தை பிறந்ததாகவும் தகவல் உண்டு'' என்றார் ஜெயந்தி.

பாதிப்புகள் ஒருபுறமிருக்க, நீலம்சிங் விவகாரத்துக்குப் பிறகு 'வீரர்களுக்கு மட்டும் தடைவிதித்தால் போதாது. பயிற்சியாளர்கள், இந்திய விளையாட்டுத் துறை உயரதிகாரிகளுக்கும் தண்டனை தர வேண்டும்' என்கிற கூக்குரல்கள் எழுந்துள்ளன.

மத்திய, மாநில அரசுகள் உடனடியாகத் தலையிட்டு இந்த அவலத்தை முழுமையாக ஒழிக்காவிட்டால், இனியும் பல கறுப்பு தினங்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

- ச.ந. கண்ணன்

படம் : ஸ்ரீஹரி

ஸ்ரீசுந்தர விநாயகர் துணை உ தேவதானப்பட்டி ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

காலை காபி, 3 வேளை பிராமணாள் உணவு, தங்கும் வசதியுடன் 3 Tier இரயில் சுற்றுலாக்கள்.

12–9–05 & 16–10–05 & 27–10–05 (தீபாவளி சுற்றுலா) முதல் 11 நாட்கள்
ஆக்ரா–மதுரா–டெல்லி–திரிவேணி–காசி–கயா–கல்கத்தா–பூரி–புவனேஸ்வர்–கோனார்க் ரூ. 4390
★ இத்துடன் ஹரித்துவார்–ரிஷிகேஷ்–அமிர்தசரஸ்–ஜெய்பூர்–மும்பை–பண்டரிபுரம் உள்பட 19 நாட்கள் ரூ. 6990

15–9–2005 & 21–10–2005 (தீபாவளி சுற்றுலா) முதல் 18 நாட்கள்
மதுரா–ஆக்ரா–டெல்லி–ஹரித்துவார்–ரிஷிகேஷ்–பத்ரிநாத்–கேதார்நாத்
திரிவேணி–காசி–கயா– கல்கத்தா–பூரி–புவனேஸ்வர்–கோனார்க் ரூ. 6990

15–9–2005 & 16–10–2005 முதல் 13 நாட்கள் மதுரா–ஆக்ரா–
டெல்லி–குருக்ஷேத்திரம்–சண்டிகார்–சிம்லா–குளுமணாலி–ரோத்தங்பாஸ்–வசிஷ்டநாத் ரூ. 5990
★ இத்துடன் அமிர்தசரஸ்–வாகாபார்டர்–ஜம்மு–வைஷ்ணவதேவி உள்பட 18 நாட்கள் ரூ. 6990

15-9-05 & 21-10-05 (தீபாவளி – வைஷ்ணவியில்) முதல் 13 நாட்கள் ஆக்ரா – மதுரா – டெல்லி
வைஷ்ணவதேவி – அமிர்தசரஸ் – வாகா பார்டர் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் ரூ. 5490

15–9–05 முதல் 12 நாட்கள் பூரி–கோனார்க்–கல்கத்தா டார்ஜிலிங், கேங்டாக் ரூ. 5490

15–9–05 18 நாட்கள் : நவஜோதிர்லிங்கம்–பஞ்சதுவாரகா –மும்பை
பஞ்சவடி–சீரடி–சனிசிங்கனாப்பூர்–எல்லோரா–உஜ்ஜெயின்–அபுரோடு ரூ. 7900

★ 40 நாட்களுக்கு முன் முழுப் பணம் செலுத்துவோர்க்கு கட்டணத்தில் 5% சலுகை தரப்படும்.

★ அமர்நாத் ★ இலங்கை ★ அந்தமான் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்து தரப்படும்.

★ L.T.C. ரசீது தரப்படும். II Tier A/c & III Tier A/c சுற்றுலா உண்டு

சன் டிராவல்ஸ்

Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.
செல் : 98421 - 56668

3, தெற்கு மாசி வீதி, T.M. கோர்ட் (நாகலஸ் காபி எதிரில்) மதுரை – 1. போன் : 2341133

சென்னை : 30, நடேசன் தெரு, (சிவா–விஷ்ணு ஆலயம் அருகில்) T. நகர், சென்னை–17. போன் : 24359194, செல் : 98421 59194

கோவை : கோமதி பில்டிங், 406, 1வது தெரு, காந்திபுரம், கோவை – 12. போன் : 2490770, செல் :98428-96668

கும்பகோணம் : பிரசாத் போட்டோ ஸ்டுடியோ, 13-B, கோதண்டபாணி தெரு, கும்பகோணம் ☎ 2433550, Cell : 98421-56668

பெங்களூர் : S. பிரபாகரன், 38, ரிச் மோண்ட் ரோடு, Opp. : கேந்திரால் ஹைஸ்கூல், பெங்களூர்–25. ☎ 25511690, Cell : 93412 10728

மேஷம்: மங்களகரமான வாரம். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சிகரமான காரியம் நடக்கும். வீடு வாசல் வாங்க ஏற்ற காலம். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாட்டு வேலை கிடைக்கும். இதுவரை இருந்த குழப்பங்கள், மனப்பிரமைகள் தீரும். வியாபாரிகளுக்கு அனுகூலம் கிட்டும். ஆரோக்கியம் சீரடையும். குரு வழிபாடு நன்மை தரும்.

ரிஷபம்: நினைப்பது நிறைவேறும் வாரம். புதிய வீடு, சொத்துகள், வாகனம் வாங்க ஏற்ற காலம். திருமணக் காரியங்கள் தடைகள் நீங்கி மளமளவென நடக்கத் தொடங்கும். மனதில் துணிவும், நம்பிக்கையும் கூடும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். சிலருக்கு புத்திர பாக்கியம் கிட்டும். வியாபாரிகள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். ராகு/கேது வழிபடுதல் நன்மை சேர்க்கும்.

மிதுனம்: வெற்றி தரும் வாரம். வாக்கு, நாணயம் மேம்படும். குடும்பத்தில் கவலைகள் நீங்கி, பொருளாதாரப் பற்றாக்குறை போகும். உடன்பிறந்தவர்களால் அனுகூலம் ஏற்படும். சிலருக்கு வேலை பளு அதிகரிக்கும். வெளிநாட்டுப் படிப்பு, வேலை, தொழில் முயற்சிகள் வெற்றி தரும். வியாபாரிகளுக்கு புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். தடைகள் நீங்கி சுபகாரியம் கைகூடும். ராகு/கேது/குரு வழிபடுதல் நன்மை தரும்.

கடகம்: தெளிவான வாரம். மனக் குழப்பங்கள் நீங்கி முன்னேற்றங்கள் புலப்படும். உத்தியோகத்தில் அனுகூலங்கள் சேரும். தெய்வ பலம் ஏற்படும். சிலருக்கு வெளியூர்/வெளிநாடு செல்லும்படி நேரிடும். வாக்கு, மதிப்பு, பதவி அனைத்தும் உயரும். வியாபாரிகளுக்குத் தொழிலில் முன்னேற்றம் கிட்டும். குரு வழிபாடு செய்தல் அவசியம்.

சிம்மம்: சூரியன், புதன் சஞ்சாரத்தால் நற்பலன்கள் கிட்டும் வாரம். குடும்பத்தில் பெரியோர்களின் ஆசியும், பாதுகாப்பும் நன்மை தரும். கொடுக்கல், வாங்கல் செய்வதில் எச்சரிக்கை அவசியம். எவரிடமும் அதிகப் பேச்சும், வாக்கு வாதமும் கூடாது. மறதி காரணமாக சில பொருள்களைத் தவறவிட நேரிடலாம். குடும்பத்தில் சுபகாரியம் கைகூடும். சனி/ராகு/கேது வழிபடுதல் நன்மை தரும்.

கன்னி: வெற்றி மேல் வெற்றிகளாகத் தேடி வரும் வாரம். பொருளாதாரக் குறை நீங்கி சுபிட்சம் பெருகும். திருமணப் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடக்கும். உத்தியோகத்தில் உயர்பதவி, வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு ஏற்படும். வியாபாரிகள் புதிய தொழில், அயல்நாட்டுத் தொழில் செய்யலாம். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி ஏற்படும். கேது/ராகு வழிபடுவது நல்லது.

துலாம்: சிறப்பான வாரம். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபகாரியங்களும் கூடும். ஆரோக்கியம் சீர்படும். கலைஞர்கள் நற்பலன் பெறுவார்கள். திருமணக் காரியங்கள் நடக்கும். குரு/சனி வழிபட்டு வருதல் நன்மை சேர்க்கும்.

தஞ்சை பரத்வாஜ்

நடக்குமென்பார்; நடக்கும்!



விருச்சிகம்: நல்ல வாரம். சுப காரிய முயற்சிகள் வெற்றி தரும். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நோயிலிருந்து விடுபட்டு, ஆரோக்கியம் சீர்படும். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி சேரும். வீடு, சொத்து, வாகனம் வாங்க ஏற்ற நேரம். பொருளாதாரச் சிக்கல்கள் நீங்கும். நண்பர், உறவினரால் அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் சச்சரவுகள் நீங்கி மகிழ்ச்சி பொங்கும்.

தனுசு: இதுநாள் வரை இருந்து வந்த தொல்லைகள் குறையும். உத்தியோகத்தில் இருந்த நெருக்கடிகள் குறைந்து, வேலை மாற்றம் நேரிடும். சுபச் செலவுகள் சில காத்திருக்கின்றன. நீண்ட நாள் லட்சியங்கள், ஆசைகள் சிலருக்கு நிறைவேறும். குடும்பத்தில் சுபகாரிய முயற்சிகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்குத் தொழில் மேம்படும். சிலர் திடீர்ப் பயணம் செல்ல நேரிடலாம். வழக்கு, வியாஜ்ஜியங்கள் வெற்றிகரமாக முடியும். குரு/சனி/ராகு/ கேது வழிபடுதல் சிரமங்களைக் குறைக்கும்.

மகரம்: இதுநாள் வரை எண்ணிய முக்கியக் காரியங்கள் நிறைவேறும் வாரம் இது. நன்மைகள் சேர்ந்து வரும். சிலர் புதிய ஆபரணங்கள், வீடு, சொத்து வாங்குவார்கள். உத்தியோகத்திலும் நன்மை தரும் மாற்றங்கள் நிகழும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகளுக்குத் தொழில் சிறப்பாக வளரும். மகான்கள் சந்திப்பும், ஆசியும் கிட்டும்.

கும்பம்: சிரமமான காலம் என்று சலித்துக் கிடந்தவர்களுக்கு விடியும் நேரம் இந்த வாரம். கஷ்டங்கள் நீங்கி, எல்லாக் காரியங்களும் முன்னேற்றம்

31.8.2005 முதல் 6.9.2005 வரை

பரத்வாஜ் பதில்கள்

எனக்கு நல்ல திருமண வாழ்க்கை எப்போது அமையும்? கல்வித் தகுதி யிருந்தும் நல்ல வேலை கிடைக்கவில்லை. எப்போது கிடைக்கும்?

- ஆர். சிவசுப்பிரமணியன், சென்னை - 116

உங்களுக்கு இன்னும் ஆறு மாதம் முதல் ஒரு வருஷத்துக்குள் திருமணம் கைகூடும். தெற்கு திசையிலிருந்து, நன்கு படித்து வேலை பார்க்கும் பெண் அமைவார். உங்களுக்கு வெளிநாடு சென்று சம்பாதிக்கும் யோகம் உள்ளது. முயற்சி செய்யவும்.

சின்னத்திரை அல்லது சினிமாவில் நடிகனாக வேண்டுமென்று முயற்சி செய்கிறேன். நிரந்தர வேலை கிடையாது. என் எண்ணம் ஈடேறுமா? எப்போது?

- கே. பிரதாப்சிங், அரகண்டநல்லூர்

உங்கள் ஜாதகப்படி இன்னும் 3 வருடங்களுக்குச் சிரமமான காலம்தான். அதன்பின் சனி தசையில் உங்கள் எண்ணம் ஈடேறுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதுவரை பொறுமையுடன் இருப்பதே சிறந்தது.

என் மகளுக்கு இன்னும் திருமணம் கைகூடவில்லை. எப்போது கைகூடும்? எப்படிப்பட்ட வரன் அமையும்?

- வி.எஸ். நாராயணன், சென்னை - 20

உங்கள் மகளுக்கு 29 வயதில் திருமணம் கைகூடும். பிறந்த ஊருக்கு மேற்கு/வடக்கு திசையிலிருந்து, பன்னாட்டு நிறுவனத்தில் வேலை செய்யும், வெளியூர் வரனாக அமையும்.

என் ஒரே பேரனுக்கு B.E படித்திருந்தும் நல்ல வேலை கிடைக்கவில்லை. தற்போது செய்யும் வேலையால் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. அவனுக்கு நல்ல வேலை எப்போது, எங்கே கிடைக்கும்?

- ராஜம் ராமகிருஷ்ணன், சென்னை - 17

உங்கள் பேரனுக்கு நவம்பர், 2005 வரை ராகு தசையில் கேது புக்தி நடக்கிறது. அதன்பிறகு அவருக்கு வெளிநாட்டுப் பணி கிடைக்கும் யோகம் வலுவாக உள்ளது. இந்தியாவில் நிரந்தரமான வேலை கிடைப்பது சிரமமாகையால், முயற்சி செய்து அயல்நாட்டுப் பணி பெறுவது உத்தமம்.

பெறும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும், சிலருக்குக் குழந்தைப் பேறும் கைகூடும். உத்தியோகத்தில் வேலை பளு குறையும். உயர் பதவியும், வெளிநாட்டுப் பிரயாணமும் ஏற்படும். ஆரோக்கியத்திலும், விவாதங்களிலும் கவனம் தேவை. ராகு/கேது/குரு வழிபடுதல் நல்லது.

மீனம்: வெற்றி தரும் வாரம். பொருளாதார மேன்மை கிட்டும். வாக்கு, தனம் மேன்மை பெறும். மாணவ-மாணவியருக்கு நற்பலன்கள் சேரும். குடும்பத்தில் குழந்தைகள் வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். திருமணம் தடைப்பட்டவர்களுக்குத் தடைகள் நீங்கும். வீடு, சொத்து, வாகனம் வாங்க ஏற்ற காலம். கணவன், மனைவி உறவு சீர்படும். நீண்ட நாள் முடிவு பெறாத வழக்குகள் சுபமாக முடியும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு சிலருக்குக் கைகூடும். கேது/ராகு வழிபடுதல் நற்பலன் அளிக்கும்.

CKM
DIVINE HERBAL CENTRE

குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத் தன்மை போன்றவைகளுக்கு தெய்வீக மூலிகை மருத்துவம்

குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாத விடாய் கோளாறு, மலட்டுத்தன்மை போன்றவைகளுக்கு முக்கிய காரணம் நாம் உண்ணும் உணவுகளில் அதிகமாக ரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதாலும், பலவித நோய்களுக்காக அவ்வப்போது வீரியமிக்க ரசாயன மாத்திரைகளை உட்கொள்வதாலும், அடிக்கடி மாமிச உணவுகள் உண்பதாலும், அதிகமான கவலை கொள்ளுதல், பலருடன் உடலுறவு கொள்ளுதல் போன்றவைகளாலும் கர்ப்பபையில் புண் ஏற்படுகின்றது. இதனால் கர்ப்பபையில் உள்ள சுரப்பிகள் நன்றாக இயங்காது. மேலும் அதன் கர்ப்ப நீரும் திறன் மிக்கதாக இருக்காது. தவிர கர்ப்பபையும் நன்றாக சுருங்கி விரியும் தன்மையினை இழந்துவிட்டால் முறையான மாத விடாய் இருக்காது. வெள்ளைப்படுதலும் தோன்றும். வெள்ளைப்படுதல், மாத விடாய் கோளாறுகள், மலட்டுத்தன்மை உள்ள தாய்க்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் கடினம்.

கருத்தரிக்காமைக்கு காரணம்

பெண்களுக்கு உற்பத்தியாகும் கரு முட்டைகள் சரியான முதிர்ச்சியும், வளர்ச்சியும் இல்லாதிருத்தல், கருப்பையின் குழாய்கள் அடைப்பு அல்லது சுருங்கி இருத்தல், முட்டையகத்தில் (ஓவரி) குறைபாடு, கருப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பபை புண் ஆண்களின் விந்தணு எண்ணிக்கையில் குறைவாகவும், தகுந்த உயிரோட்டத்துடன் இல்லாமல் இருத்தல். அடிக்கடி உடலுறவு கொள்ளுவதால் முதிர்ச்சி இல்லாத விந்தணு வெளியாகி உயிர்ப்பிக்கும் சக்தி இல்லாதிருத்தல் ஆகியன கருத்தரிக்காமைக்குக் காரணம் ஆகும்.

உணவு முறைகள்

தம்பதிகள் இருவரும் தினம் ஏதேனும் ஒரு வேளை வேகவைக்காத பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழஜூஸ்கள், சாலட்கள் போன்றவற்றையே உணவாக உட்கொள்ளவேண்டும். கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பேரிக்காய், வாழை, கொய்யா, ஆப்பிள், பேரிட்சை, திராட்சை, மாதுளை, தர்பூசணி, பாதாம், முந்திரி இளநீர், கரும்புச்சாறு, தேங்காய், வெங்காயம் கறிவேப்பிலை, கொத்தமல்லி போன்றவற்றிலும் இருந்து ஏதேனும் இரண்டு (அ) மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளலாம். பின்னர் மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உட்கொள்ள வேண்டும். இதில் கேழ்வரகு, கோதுமை, கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்களையும் அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது. நிலக்கடலை, மூக்கடலை, கொள்ளு போன்றவற்றையும் மாலை வேளைகளில் சுண்டல் செய்து உட்கொள்ளலாம். கிடைத்தால் வெள்ளாட்டுப் பால் சிறிது தண்ணீர் கலந்தும் தம்பதிகள் குடிக்கலாம்.

தவிர்க்க வேண்டியது : புகைத்தல், மதுவகைகள், மாமிச உணவுகள், சர்க்கரை கலந்த இனிப்புகள், ரசாயனம் கலந்த உணவுகள், குளிர்பானங்கள், எண்ணெயில் செய்த பலகாரம், அகத்திகீரை, பாகற்காய், பப்பாளி முதலியவை தவிர்க்கவும். இவர்கள் வாரம் ஒரு நாள் பகல் ஒருவேளை (சமைத்த) உணவை தவிர்க்கவும். இரவு உணவை 7 மணிக்குள் முடித்தல் வேண்டும்.

உடற்பயிற்சிகள் : நடத்தல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், நின்ற இடத்தில் ஓடுதல், குதித்தல், கயிறாட்டம், கைகால் விரல்களை நீட்டி மடக்குதல் மூச்சுப்பயிற்சி தியானம் போன்றவற்றை தினம் 20 நிமிடம் காலை மாலை செய்தல் நல்லது.

2	வேலூர்
2	காஞ்சிபுரம்
4	கடலூர்
4	விழுப்புரம்
4	திருவண்ணாமலை
7,8	மும்பை
9	பெங்களூர்
12	சேலம்
12	ஈரோடு
12	திருப்பூர்
13	கோவை
13	உடுமலைபேட்டை
14	மதுரை
14	திருநெல்வேலி
15	விருதுநகர்
15	தஞ்சாவூர்
16	திருச்சி
16	கரூர்
20,21	புதுடெல்லி

டாக்டர் C.K.மாணிக்கவாசகம் அவர்களால் 34 வருட அனுபவ ஆராய்ச்சியில் எழுதப்பட்ட **"எளிய முறையில பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** என்ற நூலினை பதிவுத் தபாலில் பெற ரூ.120/-ம். **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற புதிய நூலினை பதிவுத் தபாலில் பெற ரூ.120/-ம் தலைமை முகவரிக்கு M.O அனுப்பவும். மேலும் விவரங்களுக்கு :

CKM தெய்வீக மூலிகை மையம்
CKM DIVINE HERBAL CENTRE

தலைமை முகவரி : அஞ்சல் பெட்டி 30, எண்.1, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்),
திருப்பத்தூர் (வ.ஆ.மா.) - 635 601 ✆ : 04179-220469, 222769 Cell : 9842369696

சென்னை முகவரி : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரிஸ்டல் மேனர் பக்கத்தில்)
கெல்லீஸ், சென்னை - 10. ✆ : 044-26424285, 26427638 Cell : 9444001447
T-4, 3வது மாடி, பிளாட் 3, 5வது தெரு, ஸ்ரீ லட்சுமி ஹோம்ஸ், அம்பை நகர்,
கோயம்பேடு, சென்னை - 107. ✆ : 044-55643347 Cell : 9282405758

டெல்லி கிளை : 6/34, W.E.A., Karolbagh, New Delhi - 5. ✆ : 011-25736220 Cell : 9868026743

மேலே உள்ள முகவரியில் ஆலோசனை நேரம் காலை 10.00 - 1.00 மாலை 5.00 - 7.00

விழா

''மந்தமான மத்திய அரசு!''

கலைஞர் ஓப்பன் டாக்!

கலைஞர் எழுதிய 'தாய்' காவியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா, கடந்த வாரம் சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்றது. மொழிபெயர்த்தவர் முனைவர் பி.கே. பழனிச்சாமி. விழாவிலிருந்து சில துளிகள்:

● அழைப்பிதழில் மருந்துக்குக்கூட தமிழ் இல்லாததால், எங்கே மேடையிலும் செம்மொழி ஒலிக்காதோ என்ற அச்சம் இருந்தது. அதற்கேற்றாற்போல தயாநிதி மாறன், கனிமொழி உள்ளிட்டோர் ஆங்கிலத்திலேயே வெளுத்து வாங்கினர்.

● தொடர்ந்து பலரும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்த சூழலில், ப. சிதம்பரம் தமிழில் பேச ஆரம்பித்ததும் அரங்கில் கரகோஷமும், ஆரவாரமும் அடங்க சில நிமிடங்கள் பிடித்தன. கலைஞரின் நள்ளிரவுக் கைது, அதிமுக ஆட்சியின் இன்றைய நிலை ஆகியவற்றை 'தாய்' காவியத்தில் வந்த சம்பவங்களுடன் ப.சி. ஒப்பிட்டுப் பேசியது சுவையாக இருந்தது.

● வழக்கமாக சோனியாவுக்கும், கலைஞருக்கும் மொழிபெயர்ப்புச் செய்யும் தயாநிதிமாறன், இம்முறை சோம்நாத் சாட்டர்ஜியின் காதைக் கடித்துக் கொண்டிருந்தார்.

● அரசல்புரசலாக ஏதேதோ தகவல்கள் வந்தாலும், வைரமுத்து, விழாவுக்கு வந்திருந்தார். சற்றுத் தாமதமாக... வந்தவர் யாருடனும் அதிகம் பேசவில்லை. கலைஞர் தமது பெயரை உச்சரித்தபோது மட்டும் இலேசான புன்னகையைச் சிந்தினார்.



● ''மேடையில் இருப்பவர்களைப் பார்க்க விடாமல் செய்கிறீர்களே...'' என்று பத்திரிகைப் புகைப்படக்காரர்களை கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தார் துரைமுருகன்.





● காங்கிரஸ்காரர்களை மேடையில் வைத்துக்கொண்டே, ''மத்தியில் சில விஷயங்கள் மந்தமாக நடைபெறுகின்றன'' என்று கலைஞர் உடைத்துக் கூறியது, காங்கிரசார் மத்தியில் இலேசான அதிருப்தியை ஏற்படுத்தியது.

- கலை

செப்டம்பர் 2005



தோழா தோழா!

வேலை தேடும் இளைஞர்களுக்கு...

பல ஆலோசனைகள்

ருசியான கொழுக்கட்டை



ஓணம் விருந்து

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

"இது சரியா டாடி!"

அன்று பண்டிகை நாள்...


ராஜசேகர், வீட்டில் சிக்கன் செய்யச் சொல்லியிருந்தார். கொஞ்ச நேரம் தன் ஆறு வயது மகனுடன் கிரிக்கெட் விளையாடிவிட்டு, மனைவியுடன் ஒன்றாக அமர்ந்து சாப்பிட நினைத்திருந்தார்.

விளையாடி முடித்து உள்ளே வந்தபோது, வீட்டு காம்பவுண்ட் கேட் ஓரம், ஒரு நாய் வந்து நிற்க... அவரது மகன் விளையாட்டாக ஒரு கல்லை அதன் மீது விட்டெறிந்தான்.

"விய்ங்... விய்ங்..." என்று நாய் கத்திக் கொண்டே ஓட,

''விஷால்''- கடுமையான குரலில் ராஜசேகரன் அதட்டினார்.

''டாடி....?'' விஷால் பயத்துடன் பார்த்தான்.



''என்ன செஞ்ச நீ...? அது பாவம்... வாயில்லா ஜீவன்... வலிச்சிருக்காது..? உன்னை அடிச்சா எப்படி இருக்கும்...? டோண்ட் டு லைக் தட்..! ஓ.கே?''

"சாரி டாடி...''

பிறகு குளித்துவிட்டு இருவரும் டைனிங் டேபிள் முன்பு சாப்பிட அமர்ந்தனர்.

ராஜசேகர் மனைவியின் சமையலை வெகுவாய்ப் புகழ்ந்தார்.

"சிக்கன் குழம்பு அருமையா இருக்கு... சூப் ரெடியா?" என்று சொல்லிவிட்டு மகனைப் பார்க்க, அவன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னடா?"

"ஒண்ணு கேக்கணும் டாடி."

"கேளு"

"நான் நாயை அடிச்சதுக்குத் திட்டினீங்களே... நீங்க கோழிய அடிச்சு சாப்பிடறதுமில்லாம, அதை டேஸ்ட்டா இருக்குன்னு வேற புகழறீங்களே... இது சரியா?"

மகனது கேள்வியில், ராஜசேகர் முகத்தில் ஈயாடவில்லை.

டிப்டாப்

சர்ச்சை

ராதாரவி ஈமெயில் எம்.எல்.ஏவா?

“ஈமெயில் மூலம் தொகுதி மக்களின் குறைகளை அறிந்து உடனுக்குடன் சரி செய்கிறேன்'' என்று சென்னை சைதாப்பேட்டை அ.தி.மு.க எம்.எல்.ஏ. ராதாரவி அண்மையில் அறிவித்ததுதான் தாமதம்...


"தொகுதிப் பக்கமே வராதவர் ராதாரவி. வெற்றி பெற்றதும், மக்கள் குறை கேட்கும் அலுவலகங்களை வார்டுக்கு ஒன்றாகத் திறந்தார். அது இப்போது எங்கே? பிரச்னையில் சிக்கக்கூடிய அடித்தட்டு மக்கள் ஈமெயிலுக்கு எங்கே போவார்கள்?'' என்று பொரியத் தொடங்கிவிட்டனர் தி.மு.க.வினர்.

என்னதான் நடக்கிறது என்றறிய ராதாரவியைச் சந்தித்தோம்.

''ஈமெயிலுக்கு ஏழை மக்கள் எங்கே போவாங்க, ஹைடெக் சமாசாரம் எல்லாம் எப்படிப் புரியும்னு கேட்குறாங்க. நல்ல கேள்வி. தி.மு.க ஆட்சியில டைடல் பார்க் கட்டினாங்க. அதுனால எந்த ஏழைக்கு லாபம்? அதுக்கு பதிலா, ஐயாயிரம் ஏழைங்களுக்கு விடு கட்டிக் கொடுத்திருக்கலாமே! என்னுடைய லெட்டர்பேடுல ஈமெயில் முகவரியைக் குறிப்பிட்டு கடிதமா எழுதி, அதை வட்டச் செயலாளர்கள் மூலமா தொகுதியில் உள்ள அபார்ட்மெண்ட்ஸுக்கு மட்டும்தான் கொடுக்கச் சொன்னேன். ஏழைகள் கையில் கொடுக்கச் சொல்லலை.

ஒரு சில அபார்ட்மெண்ட்சில் இருந்து தொடர்பு கொண்டார்கள். லைட் வசதி கேட்டார்கள். சிலர் தனிப்பட்ட சிபாரிசுகளுக்காகத் தொடர்பு கொண்டார்கள். ஓரிருவர், என்னை நேரில் சந்தித்துப் பேச விரும்பி, கடிதம் அனுப்பினார்கள். விஞ்ஞான முன்னேற்றத்துக்குத் தக்கவாறு செயல்பட முயற்சிக்கிறேன்.

ஏழைகளை நேரில்தான் சந்திக்கிறேன். அவர்களும் என்னை எளிதாகச் சந்திக்கிறாங்க. தொகுதியில பத்து இடத்துல குறை கேட்கும் அலுவலகம் திறந்தேன். நடைமுறையில் எட்டு எடத்துல நிர்வகிக்க முடியல. தோல்வியடைஞ்சுட்டுது. இரண்டு இடத்துல இன்னமும் அலுவலகம் இருக்கு. நல்ல விஷயம் முயற்சி செய்யறப்ப, தோல்வியும் சகஜம்தானே?'' என்றவர், கடைசியாய் போட்டார் ஒரு போடு.




"தொகுதியில நான் கட்டப்பஞ்சாயத்து செய்றதில்ல. ஊழல் செய்யல. க்ளீன் எம்.எல்.ஏன்னு மக்கள் எல்லாம் அழைக்கிறாங்க. அந்தப் பொறாமையில தி.மு.ககாரங்க தொகுதிப் பக்கமே வரல. ஈமெயில் அட்ரஸ் கிடைக்கலன்னு புலம்புறாங்க'' என்றவர், மறக்காமல் தமது ஈமெயில் முகவரியையும் தந்தார்.

radharavirr@yahoo.co.in

- யாணன்

என் பெயரே ஒரு
மந்திரம்
நான் புரிந்ததெல்
லாம்
தந்திரம்
இரண்டும்
சேர்ந்திடில்
யந்திரம்!?
- ஸ்ரீ கிருஷ்ணன்



நங்கூரம் போல் விழுந்த அந்தக் கேள்வியோடு திரும்பியவர், சில வினாடிகள் நின்று சம்பத்தையும், சாருவையும் பார்த்தார்.

"என்னப்பா?"

"ஒண்ணும் இல்ல..."

"அப்படின்னா?"

"வந்து சொல்றேன். மொதல்ல பெருமாள சேவிச்சுட்டு வந்துடறேன்" என்று திரும்பி நடக்க ஆரம்பித்தார். ஆனால் ராஜம் அவர் தேங்கி நின்றதற்கான காரணத்தை நொடியில் உணர்ந்து கொண்டதுபோலப் பேசினாள்.

"சம்பா... நீ பெருமாள சேவிக்கப் போகலையா?"

"ஓ... அதுவா... இதோ நானும் போய் சேவிச்சுட்டு வந்துடறேம்மா."

"நம்ப பெருமாளை சேவிக்க நான் உன்னைத் தூண்டிவிட வேண்டியிருக்கேடா. மெட்ராஸ் உன்னை ரொம்பத்தான் மாத்திடுத்து..."

"இல்லம்மா... ராத்திரி ஏகாந்த சேவையை சாருவோட நிதானமா போய் சேவிச்சுக்கலாம்னு நினைச்சேன்."

"இப்ப என்ன... அப்பவே போய் சேவிச்சுட்டா போச்சு. பெருமான் என்ன ஓடியா போயிடப் போறார்...?" என்று குறுக்கிட்ட சாருவின் குரல் ராஜத்தைக் கொஞ்சம்போல சீறியது. மாட்டுப் பெண்ணை ஒரு பார்வை பார்த்தாள். அவளும் அப்படியே அடங்கி விட்டாள்.

"அதுவும் சரிதான்... ஏகாந்த சேவையே சேவிச்சுக்கறேன்"என்று சம்பத் ஊஞ்சலில் அமர்ந்தான். அந்த நொடி அவன் ஒரு சர்க்கஸ் சிங்கம் போலவும், சாரு ஒரு ரிங் மாஸ்டர் போலவும்தான் ராஜம் வரையில் தெரிந்தனர்.


அவனது தொடக்கம் ஒன்றும் இப்படி இல்லை. சாருவும் கல்யாணமான புதிதில் ரொம்பப் பதவிசாகத்தான் இருந்தாள். குப்பை அள்ளக் கூட ராஜத்தை விடமாட்டாள்.

"நான் பாத்துக்கறேன். நீங்க போங்கோம்மா" என்று முந்திக் கொண்டு, குப்பையை முறத்தில் அள்ளிக்கொண்டு வெளியே போய் கொட்டிவிட்டு வருவாள். சீனு எதிரில் உட்காரவே மனது வராது. அவ்வளவு மரியாதை.

சென்னை வாழ்க்கை எப்படி இப்படி மாற்றியது என்றுதான் தெரியவில்லை!

இந்திரா சௌந்தர்ராஜன்

வாரணாசி ரயில் நிலையம்! 'ஜேஜே' என்றிருந்தது. பெட்டியை விட்டு இறங்கின நொடி போர்ட்



எங்கே என் கண்ணன்?

டர், ஆட்டோ டிரைவர்கள் என்று ஒரு பெரும் கூட்டம் இறங்குகிறவர்களை எல்லாம் சூழ்ந்து கொண்டது. அந்தக் கூட்டத்தில் கணேஷும் இருந்தான். சினிமாக்கார மாதவன் சாயல் - ஆனால் துளையிடுவது போல ஊடுருவும் பார்வை. சுமாரான பேண்ட் சட்டை, கையில் சூட்கேஸ். ஆட்டோக்காரன் ஒருவன் அவனைத் துரத்திக்கொண்டே போனான்.

கணேஷ் ஒரு வினாடி நின்று அவனை ஊடுருவி,

"நான் ஒரு ஆடிட்டர். எனக்கு கார் வரும். அதுல ஏறி போய்க்க எனக்குத் தெரியும். நீ இடத்தைக் காலி பண்றியா?" என்றான் இந்தியில்.

அந்த ஆட்டோக்காரன் அதற்கெல்லாம் அசரவில்லை. கூடவே போனான். தமிழ்நாட்டில் இருந்து ஒரு வயதான பிராமண ஜோடி வந்திருந்தது. அவர்களையும் ஒரு ஆட்டோக்காரன் உருட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் விழி பிதுங்கிப் போயிருந்தனர். கணேஷுக்குள் சட்டென்று ஒரு மண்வாசம்.

''என்ன சார், காசி யாத்திரையா... நானும் தமிழ்நாடு தான்'' என்று அவர்களோடு போய் ஒட்டிக்கொண்டவன், "பயப்படாம வாங்க. நான் பார்த்துக்கறேன்" என்று அவர்களோடு நடந்தான். அவர்களுக்கும் கொஞ்சம் தெம்பு வந்தது போலத் தெரிந்தது.

"ரொம்ப சந்தோஷம் அம்பி... ஆமா நீங்களும் காசி யாத்திரைக்கு வந்தவரா...?"

"சேச்சே... நான் இங்க இருக்கற நம்ம நாட்டைச் சேர்ந்த மடங்களுக்கு ஆடிட் செய்ய வந்துருக்கேன். ஆமா, உங்களுக்கு எந்த ஊர்?"

"எங்களுக்கு மதுரைப் பக்கம் சோழவந்தான். காசிக்கு வரணும்ங்கறது பல வருஷத்து ஆசை" என்றார் அந்த பிராமணர்.

"அப்படியா... சரி, இப்ப நீங்க எங்கே போகணும்?"

"அனுமன் காட்னு ஒரு இடம் இருக்காம். அங்க நம்ம சங்கரமடம் இருக்காமே?"

''சங்கரமடம் மட்டுமா? எல்லா தமிழ்நாட்டு மடங்களும் அங்கதான்

இருக்கு. நானும் அங்கதான் போறேன். நீங்க சங்கரமடத்துல தங்கப்போறீங்களா?"

"ஆமாம்..."

"சரி வாங்கோ..."

"ரொம்ப சந்தோஷம்... அந்த காசி விசுவநாதர்தான் உங்களை அனுப்பி வெச்சிருக்கார். நாங்க ரொம்பப் புண்ணியம் பண்ணியிருக்கோம்."

அவர் இப்படிச் சொல்லவும் கணேஷ் ஒரு வினாடி நடையைத் தேக்கி நிறுத்தி, அவரை ஒரு பார்வை பார்த்தான்.

"என்ன அம்பி அப்படிப் பாக்கறீங்க. நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"இல்ல... புண்ணியம் பண்ணியிருக்கோம்னு சொல்ற நீங்க, எதுக்கு இந்தத் தள்ளாத வயசுல காசிக்கெல்லாம் வரணும்னு யோசிச்சேன். அப்புறம் காசி விசுவநாதர் என்னை அனுப்பி வெச்சதா சொன்னீங்க. ஐ ஆம் சாரி... நான் எங்க ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்திங்கறவர் அனுப்பி வந்துருக்கேன்" என்று சிரித்தான்.

பெரியவரிடம் பதிலுக்கு சன்னமாய் ஒரு திணறல். அவன் பேச்சு எந்த ரகம் என்பது புரியாத குழப்பமும் கூட... அவன் நடக்க ஆரம்பித்தான். அப்படியே அவர் தன் பெட்டியைச் சுமக்கமாட்டாமல், தரையைத் தொட்டு இழுப்பதை வைத்து அவரது இயலாமை தெரிய வந்தது.

"அத இப்படிக் கொடுங்க... நான் எடுத்துண்டு வரேன்" என்று வாங்கிக் கொண்டான். அதில் அவனிடம் துளி பரோபகாரம் இருப்பது வெளிச்சப்பட்டது.

குண்டாங்குதிரையாக நிறுத்தப்பட்டிருக்கும் ஆட்டோக்கள், டாக்சிகள்... அதற்கு நடுவே புகுந்து அவனுக்கான கார் நிற்கும் இடத்துக்குச் செல்வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

"நீங்க என் கூட கார்லையே வாங்க. உங்களை இறக்கி விட்டுட்டு நான் போறேன்" என்றவன், சூட்கேஸை டிக்கியில் வைத்துவிட்டு அவர்களைப் பார்க்க, அவர்களிடம் ஒரு சின்ன தடுமாற்றம்.

"என்ன...?"

"இல்ல, உங்கள ரொம்ப கஷ்டப்படுத்தறோம்னு நினைக்கறேன்."

"அதெல்லாம் எதுவுமில்லை. உங்களை விட்டுட்டு எனக்கென்னன்னு போனா, எனக்குத்தான் கஷ்டமா இருக்கும்மா. அப்புறம் கார்ல இடம் வேற இருக்கு. நீங்க வர்றதால ஒரு சொட்டு பெட்ரோல் கூட ஆகப்போறதில்ல. நான் இவ்வளவு சொன்ன பிறகும் உங்களுக்கு நான் சந்தேகத்துக்கு உரியவனா தெரிஞ்சா, தாராளமா நீங்க உங்க சௌகர்யப்படியே வாங்கோ. நான் கிளம்பறேன். ஆனா ஒண்ணு... இங்க இருக்கற ஒரு கூட்டத்துகிட்ட இருந்து மீண்டு நீங்க வர்றதுங்கறது, உங்களுக்கு இருக்கற நம்பிக்கை அடிப்படைல சொன்னா, அது உங்க ஜாதக பலத்தைப் பொறுத்த விஷயம். என்வரைல நீங்க வரவே முடியாதுன்னுதான் நினைக்கறேன்" என்றவனை விதிர் விதிர்ப்புடன் பார்த்த அந்தத் தம்பதி, அடுத்த நொடியே காரில் ஏறி அமர்ந்தனர். காரும் சீற ஆரம்பித்தது.

"எங்களுக்கு வடநாடே புதுசு. நான் சோழவந்தான விட்டா திருநெல்வேலி, திருநெல்வேலி விட்டா சோழவந்தான்னே வாழ்ந்துட்டவன். அப்பப்ப பழனி, திருப்பதின்னு யாத்திரை போயிருக்கோம். அந்த தைரியத்துல காசிக்குக் கிளம்பி வந்துட்டோம். ஆனா இங்க வந்தா..."- அவர் ஏதோ சொல்ல வந்து, முடியாமல் முடங்கிப் போனார்.

கணேஷ் ஒன்றும் கூறவில்லை. செல்ஃபோனில் ஹிந்தியில் அவன்

"தமிழ்ப்படம் பார்த்து நம்ம மன்னர் ரொம்ப கெட்டுப் போயிட்டாருன்றியே, எப்படி?"

"புலவரிடம் கவிதைக்குப் பதிலாக பஞ்ச் டயலாக் சொல்லச் சொல்றாரே!"

- அஜித்லால்



தொழில் தொடர்பாக யாருடனோ பேச ஆரம்பித்துவிட்டான்.

கார் சாலைகளில் திணறத் திணறித் தான் ஓடியது.

அனுமன் காட் சங்கரமடம் வாசலில் அவர்களை இறக்கி விட்டுவிட்டு, திரும்ப காரில் ஏறிக் கொண்டவனை சிலர் கவனித்துவிட்டு ஸ்நேகத்துடன் முன்வந்து பேசினர்.

"யாரு கணேஷா... எப்ப வந்தே?"

"இதோ இப்பத்தான்..."

"எப்படி இருக்குப்பா மெட்ராஸ்... மழையெல்லாம் உண்டா?"

"உங்க வருண பகவானைப் பொறுத்த வரை சென்னை ஒரு பகை நாடாகி ரொம்பக் காலமாச்சு. இன்னிக்குவரை மழை இல்ல. இனியும் வரும்ங்கற நம்பிக்கை எனக்கு இல்லை."

"அப்படி எல்லாம் சொல்லாதே... பிச்சுண்டு கொட்டப் போறது பார்... ஆமா, இந்த தடவை எவ்வளவு நாள் இங்க தங்கறதா உத்தேசம்?"

"யாருக்குத் தெரியும்... எப்படியும் ஒரு மாசம் இருப்பேன்னு நினைக்கறேன். டயமாச்சு வரட்டுமா?"

கார் அங்கிருந்து புறப்பட்டது. அந்த வேளை பார்த்து ஒருவர், தலை தெறிக்க ஓடிவந்து மறித்தார். கணேஷும் காரை விட்டு இறங்கி அவரை எதிர் கொண்டான்.

"என்ன நடராஜன் சார்... எதுக்கு இத்தனை வேகம்?"

"உன்னைப் பார்த்ததுல கண்ணு மண்ணு தெரியல. ஆமா எப்படி இருக்கே... எப்ப வந்தே... எவ்வளவு நாள் இந்த தடவை தங்கப்போறே?"

"ஒரே சமயத்துல இப்படிப் பல கேள்விகள் கேட்டா எப்படி... நான் நல்லாத்தான் இருக்கேன். இப்பத்தான் வந்தேன். அனேகமா ஒரு மாசம் போல இருப்பேன்னு நினைக்கறேன்..."

"சந்தோஷம்... அப்புறம் உன் அப்பா பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சுதா?"

அவன் முகத்தில் ஒருவித சலனபாவம்.

"போலீஸ்ல புகார் கொடுத்துருக்கே தானே?"

"உம்..."

"கவலைப்படாதே... உன் அப்பா கிடைச்சுடுவார். எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆமாம், உன் அக்காகூட



"ஏழாவது மாடியில இருக்கிற வங்கியில, 'லிப்ட்' வழியா ஏறி கொள்ளை அடிச்சிருக்கே. இது எவ்வளவு பெரிய தப்பு தெரியுமா...?"

"முட்டுவலியால படி ஏற முடியலைன்னுதான், அவ்வளவு பெரிய தப்புப் பண்ணிட்டேன் எசமான்."

- பூ. மகுடபதி

டைவர்ஸ் வரை போயிட்டதா கேள்விப் பட்டேனே?"

"ஆமாம். அத்திம்பேர், சாரி... அக்கா புருஷங்கறவன் அசுரனா இருக்கும்போது, வேற வழி ஏது...?"

"உன் தங்கைக்கு இப்ப உடம்பு பரவாயில்லியா?"

"சார்... இதெல்லாம் இப்படி ரோட்ல நின்னு பேசற விஷயங்களா?"

"சாரிப்பா... உன்னைப் பார்த்த சந்தோஷத்துல கொஞ்சம் இங்கிதம் தப்பிட்டேன். சாரி... வெரி சாரி..." என்றார் அவர்.

"சரி... நான் அப்புறமா பாக்கறேன்..." அவன் திரும்ப காரில் ஏறினான்.

காரை டிரைவர் ஸ்டார்ட் செய்யும் போது, நடராஜன் என்கிற அந்த மனிதர் தன் பக்கத்தில் இருப்பவரைப் பார்த்து "இந்த கணேஷுக்கு ஆனாலும் திடபுத்தி... இவன் இடத்துல நாம இருந்தா தலையைப் பிச்சிண்டு ஓடிப்போயிடுவோம். பாவம், அவ்வளவு பிரச்னை இவனுக்கு. எப்படி எப்படியோ சமாளிக்கறான்... நாஸ்திகனா போயிட்டான் அதான் ஒரு வருத்தம்" என்றார்.

அது கணேஷின் காதிலும் விழுந்தது. காரும் கிளம்பியது. அவன் முகத்தில் ஒரு புதுச் சீற்றம்!

(தொடரும்)

போட்டுத் தாக்கு!



கலைஞரிடம் கேட்கக் கூடாத பத்து கேள்விகள்!

1. காலைல வாக்கிங் போகும்போது ஏதாச்சும் உங்களுக்கு ஞாபகம் வருமா?

2. சமீபகாலமா உங்க கடைக்கண் பார்வை வீசறது சிற்றரசங்க பக்கம் தானாமே...?

3. இப்பல்லாம் உடன்பிறப்புங்க கிட்ட மட்டும்தான் உங்க வசனம் எடுபடுதுன்னு பேசிக்குறாங்களே, உண்மையா?

4. 'இதயத்துல இடம் கொடுக்கறது எப்படி'ன்னு புத்தகம் போடறதா இருக்கீங்களாமே...?

5. பால் சக்கரியான்னு எனக்கொரு எழுத்தாளரைத் தெரியும். சர்க்காரியான்னு உங்களுக்கு யாரையாவது தெரியுமா?

6. உலகத்துலயே உங்களுக்குப் பிடிக்காத வார்த்தை 'அம்மா'தானே?

7. நீங்க எதிர்கட்சியா இருக்கும்போது வருஷத்துல 356 நாளும் டெல்லிக்குப் போவீங்களாமே, நிஜமா?

8. 'திருடன்'ங்கற பேர்ல பத்திரிகை நடத்தறவங்க உங்க சொந்தக்காரங்களாமே?

9. உங்க குடும்பத்துல இன்னும் எத்தனை பேர் பதவியில்லாம இருக்காங்க?

10. உங்களைப் பார்த்ததுமே விம்மி விம்மி அழறவங்களுக்கு ஒரு பெட்டிக் கடையாச்சும் வெச்சுத் தருவீங்களா?

பத்து கேள்வி பரமு



கலர் கனவுகள்!

சக்சஸ் ஸ்டோரி

கண்களைப் பறிக்கும் பல நூறு வண்ணங்கள். கனவுகளை வைத்து நெய்யப்பட்ட பளபள பட்டுப் புடைவைகள். அத்தனையும் நியாயமான விலையில். மிகக் குறுகிய காலத்தில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்து வாடிக்கையாளர்களைக் காந்தம் வைத்து கவர்ந்து வருகிறது காஞ்சிபுரம் எஸ்.எம். சில்க்ஸ். சமீபத்தில் கூட பெங்களூர் மெஜஸ்டிக் பகுதியில் ஒரு பிரம்மாண்டமான ஷோரூமைத் தொடங்கியிருக்கிறார் இந் நிறுவனத்தின் அதிபர் எஸ்.எம். மனோகரன். இந்த வெற்றி எப்படி சாத்தியமானது?

“பட்டுப் புடைவைன்னாலே வசதி படைச்சவங்கதான் வாங்க முடியும்னு ஒரு காலத்துல நினைச்சுக்கிட்டிருந்தாங்க. இந்த நிலைமையை மாத்தி, யார் வேண்டுமானாலும் பட்டு வாங்கலாம்னு கொண்டு வந்தவங்க நாங்கதான். நியாயமான விலைதான் எங்க வெற்றிக்கு முதல் காரணம்” என்றார் மனோகரன்.

இவர் தந்தை சுப்புராமன் ஒரு பள்ளி ஆசிரியர். மிகச் சாதாரண குடும்பப் பின்னணி இவருடையது. “ஏதாவது சாதிக்கணும்னு சின்ன வயசுல



“கடன் கொடுக்க வந்தவங்களை தடுத்து நிறுத்த ட்ரை பண்ணாங்க!”

ருந்தே நினைச்சிட்டிருப்பேன்" என்கிறார்.

மிகப்பெரிய பயணம்கூட முதல் அடியிலிருந்துதானே தொடங்குகிறது? சிறிய அளவில் ஜவுளிக் கடை ஒன்றைத் தொடங்கியிருக்கிறார் மனோகரன். பிறகு சிறிது சிறிதாக முன்னேறி, பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் புடைவைக் கண்காட்சி ஒன்றை நடத்தியிருக்கிறார். எதிர்பார்த்ததைப் போலவே அமோக வரவேற்பு கிடைத்திருக்கிறது. உடனடியாக மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி என்று முக்கிய இடங்கள் ஒவ்வொன்றிலும் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்.

பொதுமக்கள் கொடுத்த உற்சாகத்தினால், 1993இல் தமது முதல் ஷோ-ரூமைத் துவக்கினார் மனோகரன். "எங்க வெற்றிக்குக் காரணம் கஸ்டமர்ஸ்தான். கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறாங்க. அவங்க வாங்கற புடைவை தரமா இருக்கணுமில்லையா? அதனாலதான் நாங்க தரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்" என்கிறார் உறுதியுடன்.

தரம், நியாய விலை இந்த இரண்டும் மனோகரனை எங்கு இட்டுச் சென்றிருக்கிறது? ஏழெட்டு ஷோ-ரூம்கள். நானூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள்... மூவாயிரம் நெசவாளர்கள்... சுமார் இருபது கோடி ரூபாய் டர்ன் ஓவர்.


"முதல்ல சென்னைல ஷோரூமுக்காக இடம் பிடிக்க ரொம்பக் கஷ்டப்பட்டேன். அது மட்டுமில்லாம, எனக்குக் கடன் கொடுக்க வந்தவங்களைத் தடுத்து நிறுத்த சில போட்டி நிறுவனங்கள் ட்ரை பண்ணினாங்க" எனும் மனோகரனுக்கு, கடவுள் நம்பிக்கை மிக மிக அதிகம். இவர் ஒரு சாயிபாபா பக்தர். "எந்தப் பிரச்சனையோட படுக்கப் போனாலும் சரி, காலையில ஒரு புது வழியைக் கடவுள் காட்டுவார்" என்கிறார் திடமான குரலில்.

2001ஆம் ஆண்டு பிரதமர் வாஜ்பாயின் உருவத்தை ஒரு சால்வையில் நெய்து, அவருக்குப் பரிசாகக் கொடுத்ததைப் பெருமையுடன் நினைவு கூர்ந்தவர், சில வருடங்களுக்கு முன்பு பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்கள் தமது ஷோரூமில் ஷாப்பிங் செய்ததையும் மகிழ்ச்சியுடன் நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

"முதல்ல எனக்காக உழைச்சேன். இப்போ என்னை நம்பியிருக்கிற ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்காக உழைக்கிறேன்" - மனோகரனின் குரலில் தெறிக்கிறது நம்பிக்கை.

- லதாசேகர்

படங்கள்: ஸ்ரீஹரி



உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.
✆ : 04364 273900

த்ரிதின ஸ்ரீ ருத்ர த்ரிசதீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ லட்சார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், ஆவணி கடை ஞாயிறுப் பெருவிழா மற்றும் திருக்கல்யாண உற்சவம்

8.9.2005 முதல் 11.9.2005 வரை நான்கு நாட்கள்

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா குருவருள் இறையருள் துணை கொண்டு பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் பார்த்திப வருடம் ஆவணி மாதம் 23-ஆம் தேதி வியாழன் துவங்கி 26-ஆம் தேதி ஞாயிறு முடிய (8.9.2005 - 11.9.2005) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வர பெருமான் திருக்கோயிலில் ஆவணி கடை ஞாயிறுப் பெருவிழா நான்கு நாட்கள் நடைபெற இருக்கிறது.** இதனை முன்னிட்டு உலக நலன் கருதி பல விசேஷ ஹோமங்கள், த்ரிதின ஸ்ரீ ருத்ர த்ரிசதீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ லக்ஷார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், கடை ஞாயிறு தீர்த்தவாரி, திருக்கல்யாண உற்சவம் முதலியன நடைபெறுகின்றன. அத்துடன் தினமும் கோ பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் மற்றும் மஹாபிஷேகமும் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகள் தினம் காலை 7 மணிக்கு துவங்கி இரவு 8 மணி வரை நடைபெறும். ஞாயிறு அன்று திருக்குளத்தில் காலை 7 மணிக்கு தீர்த்தவாரி, மாலை 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவம். இரவு 8 மணிக்கு ஸ்வாமி, அம்பாள் வீதி உலா. 4 தினங்களும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை சிறப்பு இன்னிசை / சொற்பொழிவு நிகழ்ச்சிகள் உண்டு. நான்கு நாட்களிலும் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளில் இறையன்பர்கள் அனைவரும் வழக்கம்போல் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

என்றும் இறைபணியில்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435 / 2423297 மற்றும் **கிராமவாசிகள்**

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

ஆவணி கடை ஞாயிறு தீர்த்தவாரிக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கும்பகோணம், காசிராமன் தெரு, வேதவிநாயகர் கோயிலிலிருந்து வேன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஞாயிறு (11.09.2005) விடியற்காலை மணி 5.00 - 5.30க்குள் புறப்படுகின்றன. புனித நீராட விரும்புபவர்கள் கீழ்கண்ட முகவரிகளில் ஏதேனும் ஒன்றில் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்கொடை அனுப்ப விரும்பும் அன்பர்களும் கீழ்கண்ட முகவரியாளர்களையே தொடர்பு கொள்ளலாம்.

சிறப்பு வழிபாட்டு விவரங்களும் அவற்றுக்கான கட்டணங்களும்:

1) சிறப்பு சூர்ணாபிஷேகம் (மஞ்சள்பொடி) ரூ.100/-
2) ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் முதலியவற்றிற்கு ரூ. 200/-
3) சிறப்பு அபிஷேகம் ரூ. 200/-
4) லட்சார்ச்சனை ரூ.200/-
5) வஸ்த்ரதானம் (ஒரு ரித்விக்கிற்கு) (20) ரூ. 400/-
6) அன்னதானம் (ஒரு வேளை) ரூ.500/-
7) புஷ்ப கைங்கர்யம் (ஒரு வேளை) ரூ:500/-
8) தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு) ரூ. 1000/-
9) ஸ்ரீருத்ர ஜப, ஹோம ஸங்கல்பம் ரூ.1000/-
10) ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி(9x5) புடவை (9கஜம்) ரூ.1000/-
11) ஸந்தர்ப்பணை (ஒரு நாள்) ரூ.2500/-
12) திருக்கல்யாண உற்சவம் ரூ.2500/-

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றுக்கான தொகையை **"ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"** என்ற பெயருக்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக் காசோலை (D.D) மூலமோ கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பக் கோருகிறோம்.

G. குஞ்சிதபாதம், FCA., G. நடேசன் & கோ. டபீர் மேலத்தெரு, கும்பகோணம்–612 001 போன்: 0435 2420047, **G. கண்ணன்,** D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை –78. போன்: 044-24836495 **V.L. நாராயண சாஸ்திரிகள்,** 25/1 சுப்பாரெட்டித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன்: 044-24897125 **R. வைத்தியநாதன்,** மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4, கதவு எண் 12, 29வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361 **K.R. முரளி, BBA ACA,** Rama Gowri Financial Services (P) Ltd. D.V. Road, Coimbatore, Cell: 9843265404 **S. கணேசன்,** 10/108, 2nd Main Road, West End, Vijaya Nagar, Velacherry, Chennai - 600 042. Ph: 044-55875431

சிலிக்கான் டூத்பிரஷ், ஒன்றரை இன்ச் கம்ப்யூட்டர், மின்சார கைக்குட்டை, ரோபோ நாய்குட்டி என்று தினம் தினம் எதையாவது கண்டுபிடித்துக் கொண்டே இருக்கும் ஜப்பானியர்களின் நேற்றைய ரிலீஸ், ரோபோ தோல்.

டகாவோ சொமேயா (வீட்டில் எப்படிக் கூப்பிடுவார்கள் என்று தெரியவில்லை) என்பவர், தமது குழுவினருடன் இணைந்து இதனைக் கண்டு பிடித்திருக்கிறார்.

மந்திரித்து விட்ட மாதிரி விலுக் விலுக்கென்று நடந்து போகும் ரோபோவை, கிட்டத் தட்ட மனிதனாக மாற்றும் முயற்சிதான் இந்த புதிய தோல் கண்டுபிடிப்பு. இது ஒரு ஈ-தோல். ஸ்பைடர்மேன் உடம்பில் உள்ளது போல் கோடு கோடாக இருக்கும். எல்லாக் கோடுகளிலும் சென்ஸர்களைப் பொருத்தியிருக்கிறார்கள். கையுறை போல அணிந்து கொள்ளலாம். இதை ரோபோவுக்குப் பொருத்திவிட்டால், அதாவது போர்த்தி விட்டால், அதற்குத் தொடுதல் உணர்ச்சி பிறந்துவிடும்.

மாடர்ன்

அந்தப் பெண்ணின் விரல்கள் ஒன்பது வயதில் சிதாரை செல்லமாக மீட்ட ஆரம்பிக்கின்றன. சொல்லிக் கொடுக்கும் குருவோ, சிதாரை இசைக்க மட்டுமே பிறந்த மேதை! கங்காரு குட்டிக்கு தாவச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா! தன் பதின்மூன்றாவது வயதில் டெல்லியில் முதல் அரங்கேற்றம். அதே வயதில் அந்தப் பெண் முதன்முதலில் ரிக்கார்டிங் ஸ்டுடியோவுக்குள் அடியெடுத்து வைத்தார். அதுவும் அந்த சிதார் மேதையின் ரிக்கார்டிங்... ம், சிதார் என்றதுமே உங்கள் மனதில் 'பண்டிட் ரவிசங்கர்' தோன்றியிருப்பார். ஓ.கே. நாம் பேசிக் கொண்டிருப்பது அவரது பெண் அனௌஸ்கா சங்கரைப் பற்றித்தான்.

அனௌஸ்கா, அடுத்த இரு வருடங்களில் ரிக்கார்டிங்கை தலைமையேற்று நடத்து மளவுக்கு உயர்ந்தார். 2000 & 2001ல் அவரது ஆல்பங்கள் அடுத்தடுத்து வெளியாயின. 2001ல் அவரது ஆல்பம் (Live at Carneige Hall), சிறந்த இசை ஆல்பத்துக்கான பிரிவில் கிராமி அவார்டுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. அது கிடைக்கவில்லை என்றாலும், அத்தனைச் சிறிய வயதிலேயே கிராமிக்குப் போட்டியிடும்படி தம்மை மேம்படுத்திக் கொண்டார் அனௌஸ்கா!

2002-ல் அனௌஸ்கா தம்மை ஒரு சிறந்த எழுத்தாளராகவும் அறிமுகப்படுத்திக் கொண்

ரோபோவின் ஈ-தோல்!



குளிரடித்தால் கம்பளி, அமிர் தாஞ்சன், இஞ்சி டீ எல்லாம் கேட்கும். கிள்ளினால் திருப்பிக் கிள்ளும். வயதானால் நம்மைப் போலவே தோலில் சுருக்கம் விழும்.

ஒரு சதுர அடிக்கு இத்தனை டாலர் என்கிற ரீதியில் இந்த

சிதாரி!

டார், தன் அப்பாவின் வாழ்க்கை வரலாற்று நூலை (Bapi : The Love of my life) எழுதியதன் மூலம்! அதன் பின்பும் இவரது எழுத்துப் பணி தொடர்கிறது.

சிதார் மட்டுமல்ல, அனௌஸ்கா சிறந்த பியானோ பிளேயரும்கூட. உலகம் முழுவதும் இடைவிடாது தந்தையுடனும், தனியாகவும் இசைப் பயணம் செய்து கொண்டிருக்கும் அனௌஸ்கா, பல்வேறு சர்வதேச செலிபரேட்டிகளுக்காக ஸ்பெஷல் ஷோ நடத்தியிருக்கிறார். அவர்களுள் பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸும் ஒருவர்.

ஷோபனா நடித்த 'டான்ஸ் லைக் எ மேன்' படத்தில் நடித்ததன் மூலம், ஒரு நடிகையாகவும் முத்திரையைப் பதித்த அனௌஸ்கா, 2004ல் டைம் பத்திரிகை தேர்ந்தெடுத்த 20 மிகச் சிறந்த ஆசிய மனிதர்களுள் ஒருவர்!

Ancient marks என்ற குறும்படத்துக்கு இசையமைத்ததன் மூலம், இசையமைப்பாளராகியுள்ள அனௌஸ்காவின் 'Rise' என்கிற நான்காவது ஆல்பத்தை இசை ரசிகர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது இந்த செப்டம்பரில் வெளியாக உள்ளது.

சமீபத்தில் பி.பி.சியில் தன் அப்பாவோடு சேர்ந்து நிகழ்ச்சி வழங்கி அசத்திய 24 வயதான அனௌஸ்கா விடுத்துள்ள லேட்டஸ்ட் அறிக்கை, "நான் இப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைக்கிறேன். ஆனா என்னவர் இசைத் துறையில்தான் இருக்கணும்னு அவசியமே இல்லை."



- முகில்

ரோபோ தோல் விற்பனைக்கு வரப்போகிறது.

ரோபோ தவிர வேறு உபயோகத்திற்கும் இந்தத் தோலை பயன்படுத்திக் கொள்ளலாம். உதாரணத்திற்கு, தரை விரிப்பில் இந்தத் தோலை இணைத்து விட்டால் வீட்டில் இருப்பவர்கள் யார், விருந்தாளிகள் யார் என்பதை காலடிச் சுவடுகளை வைத்தே கண்டுபிடித்து விடுமாம். 'பிடிக்காதவர்கள் வந்தால் காலை வாரிவிடவும்' என்ற கமெண்ட்டை அந்தத் தோலில் பதிவு செய்துவிட்டால், சொன்னபடியே செய்து விடும். சூதுவாது தெரியாது.

- மருதன்



'செல்'லாத இடமில்லை!

தென் ஆப்பிரிக்காவின் யாங்கை' நகரப் பகுதியிலுள்ள மலைவாசி மக்கள் தம் அத்தியா வசியத் தேவைகளான நீர், உணவுக்காக 76 தினமும் நான்கு மணி நேரம் நடந்தாக வேண்டும். உணவு சமைக்க வேண்டுமென்றால் இரும்பியபடியே அடுப்புமூட்ட வேண்டும்.

ஆப்பிரிக்காவின் பல பகுதிகளுக்கு இன்னமும் மின்சார வெளிச்சம் பாயவில்லை. மெழுகுவர்த்தி உருகினாலொழிய, இவர்களுக்கு வாழ்க்கை இருளில்தான்.

'அச்சச்சோ' என்று உதடு குவிக்கும்முன் ஒரு நிமிஷம், இத்தனை பஞ்சப்பாட்டு பாடுபவர்களின் ஒவ்வொரு கையிலும் இன்று செல்போன் விளையாடிக் கொண்டிருக்கிறது, தெரியுமா?

இந்தியாவில் நூறு பேருக்கு 11 பேர் செல்போன் வைத்திருக்கிறார்கள். வளரும் நாடு. வாஸ்தவம்தான்.



ஆனால் அடிப்படை வசதிக்கே அவதிப்படும் ஆப்பிரிக்காவிலும் இதே வளர்ச்சிதான்! எப்படி இது சாத்தியமானது?

90களில் ஆப்பிரிக்க அரசு கொண்டு வந்த வர்த்தக மாற்றங்களில் ஒன்று, தொலைத் தொடர்புத் துறையை தனியார்மயமாக்கியது. விளைவு? 99ல் வெறும் 75லட்சம் பேர் கைவசம் இருந்த செல்போன், இன்று ஏழரைக் கோடி பேரிடம் 'கண்ணும் கண்ணும் நோக்கியா' பாடிக் கொண்டிருக்கிறது.

செல்போன் வளர்ச்சி ஆசிய நாடுகளில் 34 சதவிகிதம் தான். இதே ஆப்பிரிக்க நாடுகளில் 58 சதவிகித வளர்ச்சியை எட்டியிருக்கிறது. ரிஸ்ட் வாட்ச் போல

'க்ரோர்'பதி!

நிழல்கள் ரவியின் குரலில் அமிதாப்பச்சன் தமிழில் கர்ஜிப்பதுதான் இன்றைய டாக் ஆஃப் த டவுன். இதைப் பார்த்துவிட்டு 'அப்போ நானும் வருவேன்...' என்று அமிதாப்புக்கு போன் போட்டு வி.ஐ.பி.கள் அடம்பிடிக்க, வேறுவழியின்றி அவர்களையும் விளையாட்டுக்குச் சேர்த்துக் கொள்கிறார்.

முதலில் 'சும்மா டக் டக்னு கேட்கணும்' என்று ரஜினி சீட்டில் அமர கூர்மையான கண்களால் ரஜினியைத் துளைக்கிறார் அமிதாப்.

• **லெட்ஸ் ஸ்டார்ட் த கேம். ரஜினி, நீங்கள் அடிக்கடி இமயமலை செல்வது ஏன்?**

A) கொசுக்கடி

B) செல்போன் சிக்னல் கிடைக்கவில்லை

C) ஓசிக் குளிர்க்காற்று

D) ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே

கடுப்பான ரஜினி, ஒரு விரலை நீட்டிச் சுழற்ற, 'விஷ்க்' என்று மறைந்து விடுகிறார். இப்பொழுது கம்ப்யூட்டருக்கு எதிரே ஒன், டு, த்ரீ... ஷா!

த்ரிஷாஜி, நீங்கள் அடிக்கடி சர்ச்சையில் சிக்குவது எதனால்?

A) அயல்நாட்டுச் சதி

B) பத்திரிகையில் போட்டோ வரவேண்டும்

C) உங்களுக்குத் தமிழ் தெரியாத தைரியம்

D) போரடிப்பதால்

அவ்வளவுதான்.. 'மம்மீ' என்று ஓடி விடுகிறார்.

திடீரென அமிதாப் உட்பட பார்வை யாளர்கள் அனைவரும் எழுந்து நிற்கின் றனர். அங்கே செட்டுக்குள் ரத, கஜ, துரக, பதாதிகளோடு உள்ளே நுழைகிறார் அம்மா. நின்று கொண்டே பம்மிய படி கேள்வி கேட்கிறார் அமிதாப்.

அம்மா, உங்களின் அடுத்த இலவசத் திட்டம்?


A) தமிழ்நாட்டின் அனைத்துக் குழந்தைகளுக்கும் புலி, கரடி, பொம்மை

B) அரசு ஊழியர்களுக்கு இலவச மளிகைச் சாமான்கள்

C) மீனவர்களுக்கு நீச்சல் பயிற்சி

D) ஒவ்வொரு வீட்டிலும் ஜெயா டீவி.

"இப்படிக் கேட்பீர்கள் என்று தெரிந்திருந் தால் இதற்கு சம்மதித்திருக்கவே மாட்டேன்" என அம்மா வெடுக்கென்று கிளம்ப, அடுத்ததாகக் களம் இறங்குகிறார் கங்கூலி.



ஜீ, சுலபமாக ஒரு ரன் அடிப்பது எப்படி?

A) பாலை உருட்டிப் போடலாம்

B) அவுட்டானால் நோ பால் என்று அறிவிக்கலாம்

C) ஃபீல்டர்கள் கண்களை இறுக்கிக் கட்டிவிடலாம்

D) எங்கு திரும்பினாலும் ஸ்டேடியத் துக்குள் நக்மா தெரிய வேண்டும்.

'ம்... மாத்தேன்' என்று சிணுங்குகிறார் கங்கூலி. வெறுப்பான அமிதாப், பார்வை யாளர்கள் பக்கம் திரும்பி, "தமிழக மக்களே சேது சமுத்திரத் திட்டத் துக்கு யார் காரணம்? பதில் சொன்னால் 2 கோடி பரிசு" என்று அறிவிக்கிறார். சாய்ஸாக,

A) அழுகாச்சி வைகோ

B) டி.ஆர். பாலு

C) 'அதிரடி' அம்மா

D) சியான் விக்ரம்

எல்லோரும் திருதிருவென முழிக்க, 'கம்ப்யூட்டர்ஜி' என்று ஸ்டைலாக கீபோர்டைத் தட்டுகிறார். அது யோசித்து... யோசித்து... மூளை பிதுங்கி, 'டமால்!'

கற்பனை : **பப்பி**

அனைவர் கையிலும் கட்டாயமாக ஒரு செல்போன்!

சரி, மின்சாரம்தான் இல்லையே, பிறகெப்படி செல்போனை சார்ஜ் செய்கிறார்கள்?

கார் பேட்டரியின் உதவியால் சார்ஜ் செய்து, நாள் முழுக்க இந்திய இளைஞர்கள் போல் அவர்களும் கடலை போடுகிறார்கள். அல்லது இதற்கென பக்கத்து ஊருக்குச் சென்று, வாடகைக்கு சார்ஜரை வாங்கி அங்கேயே செல்போனுக்கு எனர்ஜி ஏற்றிக் கொள்கிறார்கள்.

என்னதான் நம் அளவுக்கு ஆப்பிரிக்கா முன்னேறி வந்தாலும் 'மிஸ்டு கால்' கொடுப்பதில், இந்தியர்களை அடித்துக்கொள்ள ஆளே கிடையாது!

- எழில்



சட்டையில் தீப்பிடித்து விட்டதோ என சந்தேகப்படுகிற மாதிரி சைக்கிள் மிதித்து மின்னலாய் வருகிறான் ஓர் இளைஞன். தெரு முனையில் கூட்டமாய் அரட்டையில் ஈடுபட்டிருந்த அவனது நண்பர்கள், ஏதோ நடந்துவிட்டதென கலவரத்தோடு ஓடி வருகிறார்கள்.

"என்னடா ஆச்சு?"

"பக்கத்து ஏரியா பசங்க என்னை தட்டிட்டாங்கடா!" அவனது கண்களில் குபுக்கென்று கண்ணீர் எட்டிப் பார்க்க, நண்பர்கள் வெறிகொண்டு புறப்படுகிறார்கள்.

"டேய்... உடனே கிளம்புங்கடா" - அடுத்த பத்தாவது நிமிடம், பக்கத்து ஏரியாவில் உள்ள ஒரு வீட்டின் முன்பு போய் இறங்குகிறார்கள்.

"டேய், அவன் பேரென்னடா?"

"சந்தோஷ்" ஒருவன் போய் காலிங் பெல்லை அழுத்திக் கூப்பிடுகிறான். வெளியே வந்து கூட்டத்தைப் பார்த்த சந்தோஷுக்கு கணத்தில் புரிந்து விடுகிறது. 'இவர்கள் பதிலுக்கு பதில் கொடுக்க வந்திருக்கிறார்கள்.' வீட்டில் அப்பா, அம்மாவுக்கோ, தம்பி, தங்கைக்கோ தெரிந்தால் அவமானம். எதிர்ப்பேதும் தெரிவிக்காமல், "இப்போ வந்துடுறேம்மா... ஃப்ரெண்ட்ஸ் வந்துருக்காங்க" என்று சொல்லிவிட்டு, அவர்களோடு புறப்படுகிறான். இரண்டு தெரு தள்ளியிருந்த விளையாட்டு மைதானத்திற்கு சந்தோஷைக் கூட்டிக்கொண்டு போய், சுற்றி நின்று அடிக்கிறார்கள்.

"போதும் விடுங்கடா! டேய்... இனிமே சேகர் ரூட்ல குறுக்க வந்தே.. ஆளே இருக்க மாட்டே!" எச்சரித்து அனுப்புகிறார்கள். உடம்பெங்கும் ஊமைக்காயம். மனதிலோ அவமானம், அழுத்தும் கோபம்.

'இன்னும் நாப்பத்தெட்டு மணி நேரத்துக்குள்ளே அவனுங்களை சுதறக் சுதற சிதற அடிக்கணும்' மனதுக்குள் வன்முறை தீப்பிடிக்க, தமது நண்பர்களைத் தேடிப் போகிறான்.

இந்தக் காட்சியை நீங்கள் தமிழ் சினிமாவில் பார்த்திருக்கலாம். ஆனால் நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். காரணம் ஒன்றே ஒன்றுதான். மனதளவில் வளர்ச்சியடையாத, உணர்ச்சிகளில் பக்குவம் பெறாத, பதினெட்டு வயதில் வரும் காதல்.

பதினெட்டு, இருபது வயதில் காதல் என்றால் எத்தனை பெரிய சுமை என்பதை, எனது கல்லூரியிலும் கல்லூரிக்கு வெளியேயும் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். நானும் காதலிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கிறேன். நமக்கும் ட்ரீம் கேர்ள் போல ஒரு தேவதை காதலியாக வாய்க்க வேண்டும், அந்தப் பெண்ணின் போட்டோவை பர்ஸில் வைத்து அழகு பார்க்க வேண்டும், என்று சின்னச் சின்ன



காதல் கொஞ்சம்... கனிதம் கொஞ்சம்...



ஆசைகளில் அலைபாய்ந்திருக்கிறேன். ஒரு பட்டாம்பூச்சியின் படபடத்தலைப் போல வண்ணமயமாகத் தோன்றும் இளவயதுக் காதல், வளரும் பருவத்தின் எல்லா வளர்ச்சிகளையும் நசுக்கி விடுகிறது. இளவயதில் தோன்றும் ஈர்ப்பு நல்ல நட்பாக இருக்கலாம், தப்பில்லை. அதுவே காதலென்றால், அந்தப் பெண் நமக்கு மனைவியாக வரவேண்டும் என்று ஆசைப்படுகிறது மனசு. ஆனால் பத்து வருடம் அந்தப் பெண்ணால் காத்திருக்க முடியுமா? நீங்கள் பதினெட்டு வயதில் ஆசைப்படுகிறீர்கள். ஆனால் இருபத்தெட்டு வயதில்தான் வேலை கிடைத்து செட்டிலாகிறீர்கள். இந்த இடைவெளியைக் கடந்துவர உங்கள் காதலுக்குத் தெம்பிருக்கிறதா?

நீங்கள் காதலிக்கும் பெண்ணும், 'நான் ப்ளஸ்டூ படிக்கிற, கல்லூரியில் படிக்கிற பையனைக் காதலிக்கிறேன்'' என்றால், அவரது வீட்டில் ஒப்புக் கொள்வார்களா?

காதல் பற்றிய இந்தச் சின்னச்சிறு சிந்தனையை உங்களோடு பகிர்ந்து கொள்ளக் காரணம் இருக்கிறது. கல்லூரியில் நான் நிறையக் கவிஞர்களைச் சந்தித்தேன். படித்து பட்டம் பெறும் முன்னரே, காதல், கவிஞன் எனும் பட்டத்தைத் தந்துவிடுகிறது! எங்கள் கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் துறை மட்டும்தான் கோ-எஜுகேஷன். எல்லாத் துறைகளில் பயிலும் ஆயிரத்து ஐந்நூறு பையன்கள், இந்தத் துறையில் பயிலும் அறுபது மாணவிகளை தேவதைகளாகத் துதிப்பார்கள். போட்டி கடுமையாக இருக்கும். கொஞ்சம் க்யூட்டான மாணவி என்றால், பத்து மாணவ ரோமியோக்கள் அவளது பாதுகாவலர்களைப் போல பின்தொடர்வார்கள்.

விஸ்காம் துறை மீது எங்களுக்கு மட்டும் அதிக உரிமையிருந்தது. பி.காமும், விஸ்காமும் பக்கத்துப் பக்கத்துத் துறைகள். விஸ்காம் துறை மாணவர்கள் மாஃபியாக்களைப் போல, ஒரு எல்லைக்கோடு போட்டு வைத்து, இதைத் தாண்டி வேறு துறை மாணவர்கள் உள்ளே வரக்கூடாது என்று 144 போடுவார்கள். ஆனால் எல்லாத் தடைகளையும் உடைத்துக் கொண்டு கவிஞர்களாய் அவதரிப்பவர்களை என்னவென்பது?! கார் பார்க்கில் தனியே மாட்டிக்கொண்டால் முடிந்தது. ரொமான்ஸ் வழியும் கவிதைகளை நம்மிடம் வாசித்துக் காட்டி, 'வார்த்தைகள் எங்கே சிக்குகின்றன? சொல்லு மச்சி' என்பார்கள். நான் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவர்களின் உல்டா கவிதைகளில் உருகுகிற மாதிரி நடிப்பேன்.

'கண்களைக்
கொஞ்சம் சிமிட்டு
நான் கவிஞனாகித்
தொலைக்கிறேன்
உன் இதயத்தைக்
காட்டு
என்னையே
தொலைத்து
விடுகிறேன்'

என்று அசட்டுத்



தனமாய் கவிதை சொல்ல ஆரம்பித்து...

'உன் கன்னத்துக் குழிகள்...
என் உதடுகளை விதைப்பதற்கா?
என் காதலைப் புதைப்பதற்கா?'

எனக் கொஞ்சம் பிதற்றலாய் மாறி...

'நீ நடந்து வருகிறாய்...
என்னைக் கடந்து போகிறாய்...
நான் உடைந்து போகிறேன்'

என உருகி ஓடுவது ஒரு ரகம்.

கிறிஸ்தவ மாணவர்கள் கணிசமாகப் படிக்கும் கல்லூரி என்பதால், பலபேர் பைபிள் வசனங்களையே கவிதைகளாக உருமாற்றி ரசிக்க வைப்பார்கள்.

'வருந்தி பாரம் சுமக்கிறேன் வா.
உனது இளைப்பாறுதலே
எனது இனிய லட்சியம்'

'ஜீசஸ், ஏழைகளையும், தொழிலாளர் களையும் பார்த்துச் சொன்ன ஆறுதலான வார்த்தைகளை இப்படி உல்டா பண்ணலாமா?' என்றால், "விடு மச்சி... அவர் நடுத்தீர்க்க வரும்போது ராயல்டி கொடுத்துக்கலாம்" என்று ஜோக்கடிப்பான் ஒருவன். இன்னொருவன்,

'மீண்டும்
மீண்டும்
உயிர்த்தெழுகிறேன்
உன் நினைவுகளால்'

என்று கொஞ்சம் சோகமாகவும் டீசென்டாகவும் வாசிப்பான். பெரும்பாலான கவிதைகளில் ஆதாம், ஏவாள், ஆப்பிள் மூன்றையும் விடாமல் பிடித்துக் கொண்டு, கவிதைகளில் அடம் பிடிப்பார்கள்.

'நீயும் நானும்
பச்சைக் கல்வெட்டுகளாய்
நம் பெயர்களைச் செதுக்கிய மரம்
நேற்றைய காற்றில்
சாய்ந்து கிடக்கிறது
போக்குவரத்துக்குத்
தடையென்று சொல்லி
துண்டு துண்டாய்
வெட்டியெடுத்துப் போய்
விட்டார்கள்
வெட்டுப்பட்டது மரமல்ல
நம் மனங்கள்'

என்பது போன்ற கொஞ்சம் தேறும் கவிதைகளையும் கேட்டுக் கொஞ்சம் காதல், கொஞ்சம் கணிதம் என்று திரிந்தேன். கவிதை எழுதும் கர்வத்தோடு காலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறவர்களில் நானும் ஒருவனாக உருமாற நினைத்த நேரத்தில், அதற்கு வாய்ப்பில்லாமல் செய்துவிட்டது, லயோலா தியேட்டர் சொசைட்டி.



• லயோலா தேவாலயம்

கல்லூரியில் இயங்கும் புகழ்பெற்ற நாடகக் குழு அது. அதன் ஒவ்வொரு படைப்பும், அமெச்சூர் போலவே இருக்காது. இங்கே நடிப்பின் பக்கம் நான் போனதில்லை. மாறாக, மேடைக்குப் பின்னிருந்து செயல்படும் ஒருங்கிணைப்பாளர் பணியைக் கொடுத்தார்கள். திடீர் திடீரென்று கல்லூரியில் விழாக்கள் வரும். பத்து நாட்கள்தான் அவகாசம் இருக்கும். அதற்குள் இரண்டரை லட்ச ரூபாய் திரட்ட வேண்டியிருக்கும். மாணவ நடிகர்களை அமர்த்த வேண்டும். இயக்குனர் தேட வேண்டும். ஆர்ட் டைரக்டர் பிடிக்க வேண்டும். எல்லா கல்லூரிகளுக்கும் போய் இன்விடேஷன் கொடுக்க வேண்டும். முதல் நாள் விடிய விடிய போஸ்டர் ஒட்ட வேண்டும். இப்படிப் பல அதிரடி வேண்டும்களில் பெண்டு கழன்றுவிடும்.

இயக்குனருக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும், அவர் உருவாக்கும் கேரக்டர்கள் பாராட்டப்படுவதையும் இங்கேதான் முதன் முதலாகப் பார்த்து வியந்தேன். "நம்ம கிஷோருக்கு மொத்தக் கூட்டமும் வாக தட்டுது மச்சி... ஏய்... ஏய்.. இப்போ சமீர் கைத்தட்டல் வாங்குறான்ப்பா" என்று நண்பர்களின் நடிப்புத் திறமைக்குக் கிடைத்த பாராட்டுகளில் மகிழ்ந்திருக்கிறேன்.

அப்படித்தான் லயோலா தியேட்டர் சார்பில், இளமையில் போதை மருந்துக்கு அடிமையாகும் கொடுமையை தீமாக வைத்து, ஒரு நாடகம் போடுவதென்று களத்தில் இறங்கினான் விஸ்காம் துறையைச் சேர்ந்த என் நண்பன் செரிஸ். இதற்கு நிதி திரட்டுவதற்காக ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கும் மாலை தொடங்கி, நள்ளிரவு வரை நடைபெறும் நியூ இயர் ஃபுட் ஃபெஸ்டிவல் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தோம்.



• எனது துறையில் பேராசிரியர் ஜோசப், இன்றைய மாணவர்கள் சிலர்...

பிரபல நட்சத்திர ஹோட்டலின் ஒரு ஹாலை வாடகைக்குப் பிடித்து, டிக்கெட் அடித்து 'ஜோடியாக மட்டும் கலந்துகொள்ளலாம்' என்று விநியோகித்தோம். எல்லா டிக்கெட்களும் ஒரே மூச்சில் விற்றுத் தீர்ந்துவிட்டன.

புத்தாண்டு பிறக்கப் போகும் முதல் நாள் மாலை ஐந்து மணிக்கே ஜோடி ஜோடியாக வர ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் எங்கள் ஹாலுக்கு வெளியே, ஹோட்டல்காரர்கள் லாப நோக்கத்தோடு பார் திறந்துவிட்டார்கள். எங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் தனியொரு ஆளாக பார்ட்டிக்கு வந்தார். ஆனால் ஹோட்டல் ஊழியர்கள் விடவில்லை. பிடிவாதம் பிடித்துத் தகராறு செய்த அவரை குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியே அனுப்பி விட்டார்கள். அவருக்கு அரசியல் செல்வாக்கு இருக்கும் என்று எங்களுக்குத் தெரியாது. கோபத்தோடு போனவர், ஒரு போலீஸ் அதிகாரியோடு திரும்ப வந்தார். அதிகாரியோ "இந்த பார்ட்டியை நடத்த லைசென்ஸ் இருக்கா?" என்றார். ஹோட்டல்காரர்கள் திருதிருவென்று விழித்தனர். 'லைசென்ஸுக்கான டெபாசிட் என்று எங்களிடம் பணம் வாங்கிக் கொண்டார்களே' என எங்கள் வயிறு கலங்கியது.

பார்ட்டியின் ஆர்கனைசர் நண்பன் செரிஸை மட்டும் போலீஸ் கூப்பிட்டது. அவனோ பயந்து போய் "மச்சான் என்னடா?" என்று எங்களைப் பாவமாய்ப் பார்க்க, நடப்பது நடக்கட்டும் என்று பதினைந்து பேர் கொண்ட டீமாகப் புறப்பட்டோம். எங்களை போலீஸ் மரியாதையாக மூன்று ஜிப்சி வேன்களில் ஏற்றி, க்ரீம்ஸ் சாலை காவல் நிலையத்துக்கு அழைத்துப் போனார்கள்.

அங்கே செல்லுக்கு வெளியே, கொஞ்சம் டீசென்டாக இருந்த பச்சை நிற கம்பி வலைத் தடுப்பு அறையின் உள்ளே உட்கார வைத்தார்கள். எங்களுக்கு முன்பே உள்ளாடைகளோடு இரண்டு பேர் அங்கே அமர்ந்திருக்க, அவர்களிடம் "என்ன தப்பு பண்ணீங்க?" என்று விசாரித்தேன். "சாராய கேசு சார், 'பாக்கெட்' போட்டு வித்தோம்" என்றார் ஒருவர். இதைக் கேட்டு ஒரு நண்பன் அழுதே விட்டான். முன்னாள் ஷெரீஃப்பின் மகன் அவன். அன்று அவனுக்கு, பிறந்த நாள் வேறு. "என்னடா நம்மளை இவங்க கூட உட்கார வெச்சிட்டாங்க" என்று எல்லோருக்கும் கோபம் அனலாகக் கொதித்தது. ஒருவனுக்கு ஜுரமே வந்துவிட்டது. லாக்அப் ஜுரம்!

திடீரென்று ரைட்டர் வந்தார். "உங்க மேலே இல்லீசிட் லிக்கர் கேஸ் போட்டிருக்கோம்.... உங்க பேரு, அப்பா பேரு, வீட்டு அட்ரஸ் எல்லாம் சொல்லுங்க" என்றார். இதைக் கேட்டு டமால்! டுமீல்! என்று நெஞ்சு வெடிக்கிற மாதிரி இருந்தது. எந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கள்ளச் சாராயம் விற்கிறார்கள்? கூண்டில் சிக்கிய குருவிக் கூட்டம் மாதிரி செய்வதறியாது விழித்துவிட்டு, எல்லோரும் பெயர், அட்ரஸ் கொடுத்தார்கள். சென்னையின் முக்கிய வி.ஐ.பிகள் பலரது பெயர்கள் அங்கே அடிபட்டன. ரைட்டர் என்னிடம் வந்தபோது "அப்பா பெயர் பழனிச்சாமி" என்றேன்... "இல்லீங்க, இவன் நடிகர் சிவகுமார் இருக்காரல்லோ... அவரு மூத்த பையனுங்கோ... இன்னொரு கொடுக்கு வீட்லே இருக்குது" என்று கொங்குத் தமிழில் போட்டுக் கொடுத்தார்கள். "இல்லையே, பார்த்தா அப்படித் தெரியலையே?" என்று ரைட்டர் இழுக்க... "நல்லா உத்துப் பாருங்க" என்று திருவிளையாடல் சிவாஜி ஸ்டைலில் எல்லோரும் கோரஸ் பாட, "தம்பி வீட்டு போன் நம்பர் கொடுங்க" என்றார். அவ்வளவுதான், என் மூளை கலங்கி உருவங்கள் இரண்டு இரண்டாகத் தெரிய ஆரம்பித்தன... விடிந்தால் புத்தாண்டு!

படங்கள் : ஸ்ரீஹரி

(டைரியைத தொடர்வேன்)


நீங்கள் கேட்டவை



❑ பி.கே. வரதராஜன்,
ஹைதராபாத்.

? இன்று அம்பேத்கார் உயிருடன் இருந்து, தனியார் கல்லூரி இட ஒதுக்கீடு சம்பந்தமான உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் படிக்க நேர்ந்தால் என்ன நினைப்பார்?

'தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீடுக்குத் தற்போதைய சட்டம் இடம் தரவில்லை; அதற்குத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்' என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பு. இதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், மத்திய அரசு உள்பட, அரசியல்வாதிகள் நீதித்துறையுடன் மோதல் போக்கில் இறங்குவதாகச் சமீபத்தில் உச்சநீதிமன்றமே கண்டனம் தெரிவித்துள்ளது. இதைப் படித்து, அம்பேத்கார் புன்னகை செய்திருப்பார். அரசியல்வாதிகள் தீர்ப்பைச் சரியாகப் புரிந்துகொண்டு, தாம், தூம்மென்று குதித்து ஜாதி அரசியல் பண்ணுகிறார்கள் என்பதை அம்பேத்கார் புரிந்து கொண்டிருப்பார்.



● என். கோமதி,
நெல்லை - 7.


? முன்னாள் பிரதமர் வாஜ்பாய், போன் கட்டணம் செலுத்தாத விஷயத்தைப் படித்த (தினமணி செய்தி 21.8.05) நாட்டு மக்களுக்கு போன் பில் கட்ட அக்கறை (மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி) எப்படி வரும்?

! வாஜ்பாய் போன் பில் கட்டவில்லையென்றால், பி.எஸ்.என்.எல்லுக்கு நஷ்டம்; நீங்களோ நானோ கட்டாவிட்டால், கனெக்ஷன் துண்டிக்கப்படும். அதுபோக, தலைவர்களின் மோசமான முன்னுதாரணங்களை நீங்க ஏன் பின்பற்ற வேண்டும்? தப்பித் தவறி ஏதாவது நல்ல விஷயம் அகப்பட்டா, அதை மட்டும் எடுத்துக்குங்க!

● ராமு அர்விந்த்,
கோவை.

? சுதந்திர தினச் சிறப்பு நிகழ்ச்சிகள் எல்லாமே சினிமா சார்புடையதாயிருந்தன... ஒரு சேனல் கூட தியாகிகள் பற்றி ஒரு நிகழ்ச்சியையும் தரவில்லையே...?

! ஸ்டார் விஜய்யைப் பார்க்கலையான்னேன். 'காமராஜர்' படம் போட்டாங்களேன்னேன்!



● ரா. சாலமோன், ஆலங்குளம்.

? ரஜினி - ஷங்கர் கூட்டணி எப்படி இருக்கும்?

! சந்திரமுகி ஆப்பிள் ஜூஸையும் அந்நியன் அருகம்புல் ஜூஸையும் மிக்ஸ் பண்ணி, ஏவி.எம் பிராண்ட் மசாலாத் தூள் தூவி, பாக்ஸ் ஆஃபீஸ் ஐஸ் கட்டியை மிதக்கவிட்டதுபோல் ஒரு புது டேஸ்ட்டாக இருக்கும்!


ரஜினி-ஷங்கர் கூட்டணி



● இராமலிங்கம், ஆத்தூர்.

? அஜீத், விக்ரம், விஜய் - இவர்களுள் காதல் காட்சிகளில் அசத்துவது யார்?

! ''தூங்கியது போதும். கண் விழிச்சுக்குங்க. சார்!'' என்று தட்டி எழுப்புவது தராசு அல்ல... சிம்பு, பரத், ஜெயம் ரவி கோஷ்டி!



● ப. ராமகிருஷ்ணன், காயக்காடு.

? 'வீடியோ செல்ஃபோன் மூலம் டெலிமெடிசன் முறையில் மருத்துவ சிகிச்சை' என்று தயாநிதி மாறன் திட்டம் தீட்டியுள்ளாரே... ஏழைகளுக்கு இதனால் பயன் கிட்டுமா...?

! கிராமப்புற மருத்துவர்கள் அந்த போன்கள் மூலம் நவீன மருத்துவ மனைகளைத் தொடர்புகொண்டு நோய் அறிய, சிகிச்சை ஆலோசனை பெற இம்முறை உதவும் - அதாவது கிராமப்புறத்தில் மருத்துவர்கள் வசித்து, பணியும் ஆற்றினால்!


● குட்டி பிரசன்னா, கரூர்.

? 'இலங்கையில் பிரபாகரன் வெற்றி பெறும்வரை நான் பிறந்த நாள் கொண்டாடப் போவதில்லை' என்று விஜயகாந்த் கூறியுள்ளாரே?

! புலி ஆதரவு சென்டிமென்ட் மூலமா, கேப்டன் தன்னோட கப்பல் மூழ்க தானே அடித்தளத்திலே குண்டு வைச்சுக்கறாரு!



எப்படி இருக்கும்?



● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.

? 'தீவிரவாதிகளால் எங்களைத் தோற்கடிக்க முடியாது' என்று அமெரிக்க அதிபர் புஷ் கொக்கரிக்கிறாரே?

! தோற்கடிப்பது என்றால் பூகோளப் பரப்பைக் கைப்பற்றுவது என்ற காலம் போயே போச்சு. ஈராக்கில் நாள்தோறும் நடக்கும் தற்கொலைப் படைத் தாக்குதலும், லண்டனில் நடந்த பாதாள ரயில் நிலைய குண்டு வெடிப்புகளும், அமெரிக்கத் தூதரகங்கள் கோட்டைச் சுவர் எழுப்புவதும், அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல்கள் தாக்கப்படுவதும் அமெரிக்காவுக்குத் தோல்வியே. புஷ்ஷுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தால், அமெரிக்க விமான நிலையங்கள், துறைமுகங்களில் இத்தனை கெடுபிடி ஏன்?

● ஏ. சுகுமார், காட்பாடி.

? அஜீத்துக்காக 'திருப்பதி' படத் தலைப்பை விஜய் விட்டுக் கொடுத்துள்ளாரே...?

! விஜய்தான் 'திருமலை'யில் நடித்துவிட்டாரே! அப்புறமா திருப்பதியிலும் நடிச்சு, ரேணிகுண்டாவிலும் நடிக்க அவர் என்ன சப்தகிரி எக்ஸ்பிரஸா!

● லெ.நா. சிவகுமார்,
சென்னை - 33.

? இரயிலில் இரண்டாம் வகுப்புக் கட்டணத்தை ஒரு ரூபாய் அளவு குறைத்திருப்பது செம ஜோக்தானே?

! அது சாதா ஜோக். குஜராத்துக்குப் போன அத்வானி, மோடியையும் கேசுபாய் படேலையும் பக்கத்துல நிற்க வைச்சுக்கிட்டுத் தாமும் அவர்களருகே நின்று போட்டோ எடுத்துக்கொண்டது கார்ட்டூன் சித்திரத்துடன் கூடிய செம ஜோக்!

★ அ. சுஹைல் ரஹ்மான்,
திருச்சி - 21.

? வேலை உத்தரவாதச் சட்டம் கிராமப்புறங்களின் வறுமையைப் போக்குமா...?

! 'வேலை உத்தரவாதம்' என்பது சட்டத்தின் பெயர்தானேயொழிய, உண்மையில் அச்சட்டம் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை. வேலை கிடைக்காதவர்களுக்கு, ஆண்டுக்குக் குறைந்தபட்சம் நூறு நாட்களுக்கு, நாளொன்றுக்கு ரூ. 60 இனாம் வழங்குகிறது. சட்டம் நடைமுறைப்படுத்தப் படுகையில் லஞ்சம் போக 30 ரூபாய் கூடக் கிடைக்காது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் வகையில் அரசின் தொழில் கொள்கை மாறுவதே, உண்மையான வேலைவாய்ப்பு உத்தரவாதம்.

❑ ரூ 100 பரிசு பெறுபவர்:
பி.கே. வரதராஜன்
ஃப்ளாட் எண் 203,
(இரண்டாவது மாடி)
எஸ்.வீஸ். ரமணி பாரடைஸ்
கிழக்கு ஆனந்த் பாக், மல்கஜ்கிரி
ஹைதராபாத் 500 047

★ ரூ. 50 பரிசு பெறுபவர்:
அ. சுஹைல் ரஹ்மான்
10, அரவிந்தர் தெரு,
கே.கே. நகர்,
திருச்சி 620 021

செய்திகள் வாசிப்பது...

எழுவது வருஷத்துக்கு முன்னாடி நம்ம செண்ட்ரலு எப்படி இருந்துச்சு, இப்ப டெய்லி மூச்சு முட்டித் திணறிக்கிட்டு இருக்குற மவுண்ட் ரோட்டுல முந்தி ஃப்ரீயா 'ட்ராம்' வண்டி போன புகைப் படம், இப்ப 'கப்'பால ஓட வைக்கிற கூவத்துல ஓடம் ஓடுன காட்சி, 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகள்ல எப்டி எப்டிலாம் மெட்ராசோட மேனி, அதாம்பா, ஸ்ட்ரக்சரு மாறிப் போயிருக்குன்னு விதவிதமா மேப்புங்க... எல்லாத்தையும் ஷோ வைச்சிருந்தாங்க, ஆழ்வார்பேட்டை சி.பி.ஆர்ட் செண்டர்ல! ஆகஸ்ட் 22ம் தேதி சென்னைக்கு பர்த்டேன்னு நெறைய எடத்துக்குப் போனேன். யாருமே எனக்கு கேக் தரலப்பா!

'உங்க குழந்தைகள் என்னவா வரணும்னு ஆசைப்படுறீங்க'ன்னு உங்ககிட்ட கேட்டா, கலர் கலர் கனவாச் சொல்லுவீங்க! ஆனா உங்க வாரிசு எதிர்காலத்துல 'ஒரு சிறந்த வன்முறையாளனா' வர நெறைய வாய்ப்பிருக்குன்னு அமெரிக்காவோட ஃப்புளோரிடா பல்கலைக்கழக வாத்தியாரு(!) ஜெசிக் நிக்கோல் சொல்லுறாரு. 'உங்க வாரிசு வரிஞ்சு கட்டிக்கிட்டு வீடியோ கேம்ஸ், கம்ப்யூட்டர் கேம்ஸ் வெளையாடுற ஆளா! அதுல வர்ற டிஷ்யூம், டமால், டுமீல், ப்ளாங்க்னு போடுற சண்டைகளெல்லாம் வன்முறையோட விதைகளை குழந்தைங்க மனசுல விதைக்குது. அவங்களோட அடிப்படை குணமே மாறிப் போகுது'ன்னு சொல்லியிருக்காரு வாத்தியாரு. என்னா பெற்றோரே, எப்படியாவது உங்க வூட்டுல இருக்குற 'ஜாய் ஸ்டிக்கை' ஒளிச்சு வைச்சுருங்க! என்னது, அதுக்கே உங்க பையன் தாண்டவமாடுவானா! வெஷயம் சீரியஸ், நீங்களே முடிவு பண்ணிக்கோங்க!



• அன்றைய கூவம்!

காக்கி கலாட்டா!

திருச்சியில இந்த சுங்க இலாகா அதிகாரியும் சின்ன வயசுல நெறைய 'அடிதடி' வெளையாட்டு வெளையாண்டிருப்பாருன்னு நெனைக்கிறேன். திருச்சில 'செல்வி'யோட புருஷன், அதாம்பா சரத் நடிக்குற 'காக்கி' படத்தோட ஷூட்டிங் நடந்துருக்கு. அன்னிக்கு ரோட்டுல நடக்குற சண்டைக் காட்சியோட ஷூட்டிங். கூட்டம் அதிகமா ஆனதும், போலீஸ் தடியடி நடத்தியிருக்கு. அதுல நம்ம 'சுங்க'த்துக்கும் அடி விழுந்துருக்கு. சிங்கம் மாதிரி சீறுன சுங்கம், போலீஸ்கிட்ட மொதல்ல வாக்குவாதம் பண்ணியிருக்காரு. அப்புறம் அது முத்தி, நடு ரோட்டுல உக்காந்து மறியல் பண்ணியிருக்காரு. போலீஸ் எந்திரிக்கச் சொன்னவுடனே, ரோட்டுலேயே படுத்துக்கிட்டு 'என்னை யாருன்னு நெனைச்ச'ன்னு அலம்பல் பண்ணியிருக்காரு. அப்புறம் போலீஸ் அவரை குண்டுக்கட்டா தூக்கிட்டுப் போக, 'சுங்க' டிபார்ட்மெண்ட்காரங்க வந்து 'சிங்க'த்தை ரிலீஸ் பண்ணியிருக்காங்க! ஆங்... இப்ப உங்க மனசுல என்ன தோணிச்சோ, அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்.



இன்னான்



பொன்னியின் செல்வன்

'அழகிய தீயே'வை இயக்கிய ராதா மோகனின் படமென்பதால் தைரியமாக தியேட்டருக்குள் நுழைந்தோம். எடுத்தவுடன் ஹீரோ ரவிகிருஷ்ணா, ஃபாரினில் கனவுப் பாட்டு ஒன்றைப் பாடி ஆடுகிறார். போச்சுடா!

'முதல் மரியாதை' அளிக்கப்பட வேண்டியவர் வசனகர்த்தா விஜி. படத்தின் உயிர்நாடி, முதுகெலும்பு, இதயம் அனைத்துமே இவர்தான். நக்கல் வசனமாகட்டும், உருக வைக்கும் தத்துவங்களாகட்டும், விஜியின் பேனா கூர்மையாக இயங்கியிருக்கிறது.

இடது கன்னத்திலுள்ள தழும்புகளால் மனக் காயப்பட்டு, தாழ்வு மனப்பான்மையோடு அலையும் ரவிகிருஷ்ணாவின் சோக உலகத்துக்குள், கைப்பிடித்து நம்மை அழைத்துச் செல்கிறார் இயக்குனர். ஆனால், ஹீரோவின் அவலட்சணமான முகத்தைக் கண்டு கதாபாத்திரங்கள் அலறுவதுபோல், ஒரு சாமான்ய ரசிகனால் முடியவில்லை. அவர் முகம் அழகாகவே இருக்கிறது ஐயா!

உண்மையிலேயே பக்கத்து வீட்டுப் பெண் போலிருக்கிறார் கோபிகா. இவருக்கும் ரவிகிருஷ்ணாவுக்குமிடையே நடக்கும் ஊடல்கள், ஜாலியோ ஜிம்கானா. அதுசரி, ரவிகிருஷ்ணாவின் வாயில் 'ழ'கரம் நுழையாதது ஏனோ? (டப்பிங் ஆர்டிஸ்ட் போட்டிருக்கலாமில்லே!)

பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு 'மொழு மொழு' முகமாக்க ஹீரோ பிரயத்தனப்படும்போது, அன்பான அம்மா, அக்கா, நண்பர்கள் அனைவரையும் பகைத்துக் கொள்வது இயல்பான காட்சியமைப்புகள். ஆனால் அமர்க்களமாக ஆரம்பமாகும் பீட்ஸா காதல் காட்சிகள், போகப் போக நீர்த்துப் போகின்றன.

ஹீரோ, தயாரிப்பாளரின் மகன் என்பதாலோ என்னவோ, ஃபாரின் சாங், குத்துப் பாட்டு, விபசார விடுதியில் ஒரு கவர்ச்சி ஆட்டம், இரு சண்டைகள் போன்றவையெல்லாம் கதையின் அளவையும் மீறி ரசிகர்களிடம் திணிக்கப்படுகின்றன. முயற்சிக்கப்பட்ட யதார்த்தம் வலுவிழந்து போகிறது.

இருப்பினும், சமூகத்தால் கல்லடிபடும் ஓர் இளைஞனின் சோக நிகழ்வுகளையும் தடுமாற்றங்களையும் தைரியமாகச் செல்லுலாய்டில் பதிவு செய்தமைக்காகப் பாராட்டலாம்.

- லஜ்ஜாவதி

எழுதுங்கள் ஒரு கவிதை!

விதி :

படத்துக்குப் பொருத்தமாய்
ஒரு ஹைக்கூ
கவிதை!

கடைசி தேதி : 10.9.2005

பரிசு : ரூ.200/-

ஆசிரியர் தீர்ப்பே
இறுதியானது



படம் : ஸ்ரீஹரி


பட்டிழைகளால் ஓர் அதிசயம்...
மணமகள் அழகின் இரகசியம்!
விவாஹா கல்யாணப் பட்டுகள், தி சென்னை சில்க்ஸின் முத்திரைப் படைப்பு.
கலையும் நயமும் பின்னிப் பிணைந்த அற்புதச் சிறப்பு.
விவாஹா-மங்கல மங்கையர்க்கு எங்கள் அர்ப்பணிப்பு.
விவாஹா
பட்டு
தி சென்னை சில்க்ஸ்
தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்
23, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 17. ✆: 24310888
558-560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆: 2391555
74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆: 2242888, 5338888
65-A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆: 2213270
10, W.B. ரோடு, திருச்சி-2. ✆:2708888
Shop online at www.thechennaisilks.com